# வடக்கு மாகாண கௌரவ அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட நிதிமோசடி, அதிகார துஷ்பிரயோகம், பாரபட்சம், ஊழல் மற்றும் ஒழுக்கரீதியான குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்த விசாரணைக்குழுவின் அறிக்கை

கௌரவ வட மாகாண முதலமைச்சர் அவர்கட்கு,

தங்களின் NP/CM/CS/03/0125 இலக்க 2016.09.28ம் திகதிய கடிதப் பிரகாரம் வடக்கு மாகாண கௌரவ அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட நிதிமோசடி, அதிகார துஷ்பிரயோகம், பாரபட்சம், ஊழல் மற்றும் ஒழுக்கமீறியான குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக விசாரணை நடாத்துவதற்காக அமைக்கப்பட்ட விசாரணைக்குழு உறுப்பினர்களாகிய நாங்கள் குறித்த அமைச்சர்களுக்கு எதிராக எம்முன் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளையிட்டு விசாரணை நடாத்தி முடித்துள்ளோம். அறிக்கை, விசாரணை மற்றும் சிபாரிசுகள் தங்களுக்கு இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்த விசாரணையின் பொழுது முறைப்பாடு செய்தவர்களும் குறித்த அமைச்சர்களின் செயற்பாட்டால் பாதிக்கப்பட்டவர்கள் எனத் தெரிவித்தவர்களும் விசாரணைக்குழு முன் தோன்றி சாட்சியமளித்திருந்தார்கள். அத்துடன் அமைச்சு செயலாளர்கள், மற்றும் வடமாகாண நிர்வாக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அலுவலர்கள் இவ் விசாரணைக்குழுவினால் அழைக்கப்பட்டு அவர்களின் சாட்சியங்களும் பதியப்பட்டன. குறித்த கௌரவ அமைச்சர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதற்கமைய அவர்கள் விசாரணைக்குழு முன் சமுகமளித்து தங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் சாட்சியமளித்துள்ளார்கள்.

இந்த விசாரணையில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் வட மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தைச் சேர்ந்த முகாமைத்துவ உதவியாளர்களால் பதியப்பட்டுள்ளது. எம்முன்னால் தரப்பட்ட சாட்சியங்கள் ஆணைக்குழுவினால் ஆராயப்பட்டு ஒவ்வொரு அமைச்சர்கள் தொடர்பாக அவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை தங்களுக்கு விசாரணைக்குழுவால் கூட்டாக சமர்ப்பிக்கப்படுகின்றது.

# பொருளடக்கம்

I. விதிமுறைக்குறிப்புக்களும் (TOR) விசாரணை முறையும்

II. கௌரவ அமைச்சர்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள்

III. குற்றச்சாட்டுக்களிற்கான விசாரணைக்குழுவின் அறிக்கை

IV. குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைக்குழுவினால் கண்டறியப்பட்டவை

V. விதப்புரைகள்

VI. நன்றியுரை

# I. விதிமுறைக் குறிப்புக்களும் (Terms of Reference)
## விசாரணைமுறையும்

### விதிமுறைக் குறிப்புக்கள் (TOR)

1 நோக்கம் :-

1. வடமாகாணசபையின் அமைச்சரவை அங்கத்தவர்கள் பற்றிப் பலவிதமான நிதி மோசடி, அதிகார துஸ்பிரயோகம், பாரபட்சம், ஊழல் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டுள்ளன. அவற்றை முதலமைச்சராகிய நான் விசாரித்து அறிய போதுமான நேர அவகாசம் இல்லாமையால் அவற்றை விசாரித்து எனக்கு அறிக்கையிட ஒரு விசாரணைக் குழு தேவைப்பட்டுள்ளது.

2. எனவே வடமாகாண சபையின் அமைச்சரவை ஊழல் அற்ற தூய்மையான அமைச்சரவையாக இயங்குவதற்கு வழியமைப்பதற்கும், அந் நோக்கத்தை அடைவதற்கு தடையாகவுள்ள ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம் பாரபட்சம் போன்ற குறைபாடுகளைக் கண்டறிந்து விசாரித்து அறிக்கை செய்வதற்கும் தேவையான திருத்தல் நடவடிக்கைகளைச் சிபார்சு செய்வதற்கும் விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்படுகின்றது.

1.1 இவ்விசாரணையானது அமைச்சர்களுக்கெதிராகச் சாட்டப்படும் குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரித்து குறிப்பிட்ட அமைச்சர்கள் குற்றம் இழைத்துள்ளார்களா இல்லையா என்பதைக் கண்டறிந்து, குற்றம் இழைக்கப்பட்டதாக கண்டறியும் இடத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விதந்துரைத்தலும், எதிர்காலத்தில் அவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறாது தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்மொழிதலுக்குமாக நியமிக்கப்படுகிறது.

2 குழுவிற்கான உறுப்பினர்கள் நியமனமும் அமைப்பும்

2.1 இக்குழுவானது உறுப்பினர்கள் மூவரைக் கொண்டிருக்கும்.

2.2 இம் மூவரில் இருவர் ஓய்வுபெற்ற நீதிபதிகளாக இருப்பர்.

2.3 மூன்றாவது உறுப்பினர் இலங்கை நிர்வாக சேவையின் ஒரு சிரேஸ்ட அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவராக இருப்பர்.

2.4 குழுவில் இடம்பெறும் உறுப்பினர்களை நியமித்தலும் அதன் விசாரணையின் எல்லைப் பரப்பை வரையறுத்தலும் முதலமைச்சரினால் மேற்கொள்ளப்படும்.

2.5 குழுவின் உறுப்பினர்களில் ஒருவரை குழுத்தலைவராக முதலமைச்சர் நியமிப்பார்.

2.6 குழுவின் தீர்மானங்கள் ஏகமனதாகவோ, அப்படி ஒருமித்த தீர்மானம் எடுக்கமுடியாதவிடத்து பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஒருமைப்பாட்டுடனோ நிறைவேற்றப்படும்.

3 நியமன அதிகாரம்

13ம் அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரிவு 154F(5) பிரகாரம் அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டவர் என்ற அடிப்படையிலும் 16.08.2016ம் திகதி நடைபெற்ற 58வது மாகாணசபையின் கூட்டத்தில் ஏகமனதாக இது பற்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையிலும் வடமாகாணசபையின் முதலமைச்சர் இக் குழுவை நியமிக்கும் தத்துவமுடையவராவார்.

4 ஆணை (Mandate)

4.1 இக்குழுவானது நியமனத் திகதியிலிருந்து மூன்று மாதகாலத்திற்கு தொழிற்படும். இக் காலத்தை நீடிப்பதற்கும், இடைக்கால அறிக்கை கோருவதற்குமான அதிகாரம் முதலமைச்சரின் தற்றுணிவின்பாற்பட்டது.

4.2 இடைக்கால அறிக்கை, இறுதியறிக்கை ஆகியவற்றை முதலமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5 குழுவுக்கான கொடுப்பனவுகள்.

5.1 இக் குழு உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு ஒரு அமர்வுக்கு ரூபாய் 5000/= ஆகவிருக்கும். ஒரு அமர்வுக்கு குறைந்தது ஐந்து மணித்தியாலங்கள் ஆகும்.

5.2 அமர்வுக்கான கொடுப்பனவுக்கு மேலதிகமாக அறிக்கை செய்வதற்கான கொடுப்பனவுத் தொகை தனியாக நிர்ணயிக்கப்படும்.

5.3 போக்குவரத்துச் செலவு 2000/= வழங்கப்படும்.

6 அமர்விடமும் ஏனைய வசதிகளும்

6.1 இக் குழுவின் அமர்விடம் வடமாகாண சபையின் பிரதம செயலாளரின் செயலகமாக அமையும்

6.2 இவ் விசாரணைக்கான ஒழுங்குகள் மாகாணசபையின் பிரதம செயலாளரினால் மேற்கொள்ளப்படும்.

6.3 இக் குழுவிற்குத் தேவையான பணியாளர்களையும் ஏனைய வசதிகளையும் பிரதம செயலாளர் வழங்குவார்.

7 குழுவுக்கான அதிகாரமும் தொழிற்பாடுகளும்

7.1 வேலை நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்து சமர்ப்பித்தல், விசாரணைக்கு முக்கியமான விடயங்களை தெரிவுசெய்தல், அழைக்கப்பட வேண்டிய சாட்சியங்களை ஒழுங்குபடுத்துதல்.

7.2 முறைப்பாட்டுக்காரரையும் சாட்சியங்களையும் விசாரணைக்கு அழைத்தல்.

7.3 கிடைக்கப் பெறுகின்ற குற்றச்சாட்டுக்களை விசாரித்தலும் எழுத்து மூலமோ வாய்மொழி மூலமோ சாட்சியங்களை பதிவு செய்தலும் பரிசோதித்தலும்.

7.4 மாகாண சபை அதிகாரிகளை எழுத்து மூலம் ஆவணங்களை, புத்தகங்களை, பதிவேடுகளை சமர்ப்பிக்கும்படி கோருதல்.

7.5 தகவல்களைப் பெறுவதற்காக தொடர்புபட்ட ஆவணங்களை பரிசீலிப்பதற்கும் தேவைப்படுமிடத்து ஆவணங்களின் பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கும் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

7.6 சாட்சியங்களை அனுமதிப்பது சார்பாக சாட்சிகள் கட்டளைச் சட்டத்தில் எது எவ்வாறு கூறப்பட்டிருப்பினும் சாட்சியங்களை எழுத்து மூலமோ வாய்மொழி மூலமோ பெற அனுமதித்தல்.

7.7 ஆவண ஆதாரங்களை பெற்று அவற்றை ஆவணப்படுத்தல்.

7.8 குழுநியமனத் திகதியில் இருந்து மூன்று மாதகாலத்துள் அதன் சிபார்சுகளுடன் இறுதி அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

8. தேவை ஏற்படுமிடத்து இந்த விதிமுறைகள் கௌரவ முதலமைச்சரால் மாற்றம் செய்யப்படலாம்.

மேலதிகமானவை

- மேற் குறித்த விசாரணையானது பொது இடத்தில் நடாத்தப்படல் ஆகாது. மூடப்பட்ட அறையில் நடாத்தப்படல் வேண்டும்.
- விசாரணையின் இடையில் குழு உறுப்பினர் விலகினால், இறந்தால், விலகவிரும்பினால் ஒருபகுதியில் அல்லது முழுமையான விசாரணையில் பங்குபற்றாமை, அல்லது பங்குபற்றமறுத்தல் ஆகிய சந்தர்ப்பங்களில் முழுமையாக அல்லது பகுதியளவில் புதிய உறுப்பினரை நியமிக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு உண்டு. அவ்வாறு நியமிக்கப்படாவிட்டாலும் மிகுதி உறுப்பினர்களுடன் குழுவிசாரணை தொடர்ந்து நடாத்தப்பட்டு முடிவுறுத்தப்படல் வேண்டும். புதிய உறுப்பினர் நியமிக்கப்பட்டால் முன்னைய நடாத்தப்பட்ட சாட்சியங்கள் மீளபெறப்படத் தேவையில்லை. அதே இடத்திலிருந்து தொடரப்படல் வேண்டும்.
- ஊடகங்களுக்கு தகவல் வழங்கப்படல் ஆகாது.

## விசாரணைமுறை

கௌரவ வட மாகாண முதலமைச்சர் அவர்களின் NP/CM/CS/03/0125 இலக்க 2016.09.28ம் திகதிய கடிதப் பிரகாரம் வட மாகாண கௌரவ அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட நிதிமோசடி, அதிகார துஷ்பிரயோகம், பாரபட்சம், ஊழல் மற்றும் ஒழுக்கரீதியான குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக விசாரணை நடாத்துவதற்காக 2016.10.03ம் திகதி முதல் செயற்படும் வண்ணம் மூவர்கொண்ட விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது இதில் திரு.எஸ்.தியாகேந்திரன் - இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதி விசாரணைக்குழுவின் தலைவராகவும், திரு.எஸ்.பரமராஜா - இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதி, திரு.செ.பத்மநாதன் - இளைப்பாறிய இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் விசாரணைக்குழுவின் அங்கத்தவர்களாகவும் நியமிக்கப்பட்டதுடன் விசாரணை தொடர்பான விதிமுறை குறிப்புகளும் வழங்கப்பட்டது

இவ் விசாரணைக்குழுவின் நியமனம் தொடர்பான அறிவித்தல் கௌரவ முதலமைச்சரின் செயலாளரினால் வட மாகாணத்தில் அதிகளவு மக்கள் பாவனையிலுள்ள இரண்டு புதினப் பத்திரிகைகள் மூலம் 10.10.2016ம் திகதி பிரசுரிக்கப்பட்டதுடன் விசாரணைக்குழுவின் செயலாளராக பிரதம செயலாளர் அலுவலகத்தில் உதவிப் பிரதம செயலாளராக கடமையாற்றும் திருமதி.கு.காஞ்சனா அவர்களும் குறித்த விசாரணையின் வழக்குத் தொடுநராக பிரதம செயலாளர் அலுவலக சட்ட ஆலோசகர் இளைப்பாறிய மேல்நீதிமன்ற நீதிபதி பொ.சி. வரதராசா அவர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து வட மாகாண முதலமைச்சினால் வட மாகாணசபை அமைச்சரவை அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்கவென நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக முறைப்பாடுகளை செய்வதற்கான அறிவித்தல் 05.11.2016ம் திகதி உதயன் பத்திரிகையில் மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டதுடன் இவ் எழுத்து மூலமான முறைப்பாடுகள் 07.11.2016ம் திதகியிலிருந்து 06.12.2016ம் திகதி வரை அலுவலக நேரத்தில் பிரதம செயலாளர் அலுவலகத்தில் விசாரணைக்குழுவின் செயலாளரினால் நேரடியாகவும் பதிவுத் தபால் மூலமும் பெறப்பட்டதுடன் வட மாகாணசபை அமர்வின் போது விடப்பட்ட கோரிக்கைக்கு அமைய கௌரவ முதலமைச்சரால் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் காலப்பகுதி 20.12.2016ம் திகதி வரை மேலும் இருவார காலமாக நீடிக்கப்பட்டு முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளளப்பட்டன.

07.11.2016 தொடக்கம் 20.12.2016 வரையான முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் காலப்பகுதியினுள் கௌரவ வட மாகாணசபை அமைச்சர்களுக்கு எதிராக எழுத்து மூலமாக

08 முறைப்பாடுகள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் கிடைக்கப் பெற்றன. இவற்றில் 06 நேரடியாகவும் 01 பதிவுத் தபால் மூலமாகவும் 01 சாதாரண தபால் மூலமாகவும் கிடைக்கப் பெற்றிருந்தன.

எழுத்து மூலமாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைக் குழுவினால் 2017 ஜனவரி 10, 11ம் திகதிகளில் யாழ் பொது நூலகத்தில் அமைந்துள்ள வடமாகாணசபை மண்டபத்திலும் 28ம் திகதி பிரதம செயலாளர் அலுவலகத்திலும் முறைப்பாட்டாளர்கள் அழைக்கப்பட்டு அவர்களது வாக்கு மூலம் பெறப்பட்டது.

முறைப்பாட்டாளர்களால் முன்வைக்கபட்ட முறைப்பாடுகள் தொடர்பில் அவர்களால் முன்வைக்கப்பட்ட சாட்சியாளர்களையும் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பாக மாகாண சபை நிர்வாகத்திலுள்ள உத்தியோகத்தர்களையும் குழுவின் முன் அழைத்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்யப்பட்டன.

மேற்படி பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் வழக்குத்தொடுநரால் அமைச்சர்களுக்கு எதிராக குற்றசாட்டுகள் தயாரிக்கப்பட்டு குறித்த அமைச்சர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரிப்பதற்கு வேண்டிய கால அவகாசத்துடனான நாட்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அவ்விசாரணையின் போது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தானாகவோ அல்லது ஓர் சட்டத்தரணி மூலமோ குறிப்பிட்ட குற்றசாட்டுகளை மறுப்பதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது.

அத்தோடு குற்றச்சாட்டுகளை சுமத்தியோர் குறிப்பிட்ட விசாரணைத் திகதியில் தாமாகவோ அல்லது வேறு சம்பந்தப்பட்டவர்களோடோ தேவையான ஆவண சான்றுகளுடனோ விசாரணைக்கு சமூகமளிக்கவும் குற்றம் சாட்டப்பட்டவரை குறுக்கு விசாரணை செய்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தை குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு அமைச்சர்களும் பூரணமாக எற்றுக்கொண்டு தாமாகவே முன்வந்து தமக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளிற்கு விளக்கம் அளித்தனர். முறைப்பாட்டாளர்களும் விசாரணையின் போது பங்குபற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர்களை குறுக்கு விசாரணை செய்தனர்.

அங்கீகரிக்கப்பட்ட விசாரணை நடைமுறைகளுக்கு மேலதிகமாக தேவையான சந்தர்ப்பத்தில் விசாரணைக்குழு திட்ட செயற்பாட்டு இடங்களிற்கு நேரடிக்கள ஆய்வு செய்து

பயனாளிகளின் கருத்துகளும் பதிவு செய்யப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டது. பின்வரும் இடங்கள் நேரடியாக பார்வையிடப்பட்டன

01. வவுனியா ஓமந்தை வெலிமருதமடு (மரநடுகை)
02. வட்டக்கச்சி மாதவனூர் புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டம்
03. யாழ் மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட விவசாயக் கிணறுகள் (கோண்டாவில், உரும்பிராய், இணுவில், கைதடி)

விசாரணையில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் பிரதம செயலாளர் அலுவலகத்தைச் சேர்ந்த முகாமைத்துவ உத்தியோகத்தர்களால் பதிவு செய்யப்பட்டு எமக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் அவற்றினை ஆராய்ந்து அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பிலரான அறிக்கை தயாரிக்கப்பட்டு விசாரணைக்குழுவின் விதந்துரைகளும் ஆவணப்படுத்தப்பட்டது.

## II. கௌரவ அமைச்சர்களிற்கெதிரான குற்றச்சாட்டுக்கள்

விவசாய கமநலசேவை, கால்நடை அபிவிருத்தி, நீர்வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பொ. ஐங்கரநேசன் அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள்

1. வவுனியா மாவட்டத்தில் மூங்கில், மல்லிகை வளர்ப்புத் திட்டங்கள், எள்ளு விநியோகித்து சுயதொழிலை முன்னெடுக்கவைக்கும் திட்டம் ஆகியவற்றை கையலஞ்சம் பெறும் நோக்கத்திற்காக நிராகரித்தமை.

2. கண்காட்சிகள், பொங்கல் விழா, உழவர் விழா எனப் பல விழாக்களை பெருந்தொகைப் பணத்தை செலவழித்து நடாத்தியதன் மூலம் மாகாணசபையின் பெரும் அளவிலான நிதியை வீண்விரயம் செய்தமை

3. மாகாண சபை உறுப்பினர்களினதும், மாகாண சபை ஆலோசனைக் குழுக்களினதும் ஆலோசனைகளைப் பெறாமல் திட்டங்கள் முன்னெடுத்தமை

4. Beta Power (Pvt) Ltd. & Joule Power (Pvt) Ltd. நிறுவனங்களிடமிருந்து 2015ம் ஆண்டு முதல் வருடம் ஒன்றிற்கு ருபா 20 மில்லியன் வீதம் 2016 வரை பெறப்பட்ட ரூபா 40 மில்லியன் பணத்தை மோசடி செய்தமை

5. பாத்தீனியம் ஒழிப்பு நடவடிக்கை என்ற பெயரில் மாகாணநிதியை மோசடி செய்தமை.

6. i. Northern Power என்ற மின் உற்பத்தி நிலையம் சுன்னாகத்தில் தொழிற்பட்ட வேளையில் அதனது கழிவு எண்ணெய் குடிநீரில் கலந்த விடயத்திற்கு, ஆய்வுக்குழு ஒன்றை நியமித்து அக்குழுவின் அறிக்கை மூலம் நிறுவனத்திற்கு சாதகமாக அறிக்கையை வெளிப்படுத்தி உண்மைகளை மறைத்தமை

   ii. நிலத்தடிநீர் விடயம் தொடரில் எதுவித அதிகாரமும் அற்ற நிலையில் நிலத்தடி நீரில் எண்ணெய் கசிவு தொடர்பில் விசாரணைக்காக நிபுணர்குழுவை நியமித்து மாாகணசபையின் நிதியை வீண்விரயம் செய்தமை.

7. 2015 நவம்பர் மாதம் முன்னெடுக்கப்பட்ட 5லட்சம் மரநடுகைத் திட்டம் தொடர்பில் பண மோசடி செய்தமை

8. ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் இதுவரையில் நன்கு வெற்றிஅளிக்கவில்லை எனத் தெரிந்திருந்தும் தவறான செல்வாக்கை செலுத்தி நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து சாத்தியக்கூற்று அறிக்கையை பெற்று புழுதியாறு ஏற்றுநீர்ப்பாசனத்திட்டத்தினை முன்னெடுத்து 36மில்லியன் ரூபாவை வீண்விரயம் செய்தமை.

9. i. யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கத்திற்கு 2014 ஆண்டு மே மாதம் வரை தலைவராக இருந்த பெரியதம்பி இராசநாயகம் இரஞ்சன் என்பவரை நியாயமான காரணங்களின்றி கூட்டுறவு ஆணையாளருக்கு ஊடாக அதிகார துஷ்பிரயோக மூலம் பதவிநீக்கம் செய்தமை.

ii. 2015இல் யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கத்திற்கு தலைவராக முன் அனுபவமில்லாதவரும் அரச அதிபரால் சிபார்சு செய்யப்படாதவருமான திரு.இ. சர்வேஸ்வரா என்பவரை குடும்ப நண்பர் என்ற அடிப்படையில் கூட்டுறவு ஆணையாளர் மூலம் தலைவராக நியமித்தமை தொடர்பில் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை

10. மருதங்கேணி கடற்தொழில் சமாசத் தலைவரை நியாயமான காரணங்களின்றி கூட்டுறவு ஆணையாளர் மூலம் 2015 மார்கழி மாதம் அளவில் பதவி நீக்கம் செய்தமை மூலம் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை.

.................................................................

திரு.கு.பொ.சி.வரதராசா

வழக்குதொடுநர்தரப்பு சட்டதரணி

முறைப்பாட்டுக்காரர் தரப்பில் சாட்சியமளிக்கவுள்ள சாட்சிகளின் பட்டியல்

1. கௌரவ அனந்தி சசிதரன், வட மாகாணசபை உறுப்பினர்
2. கௌரவ ஜி.ரி.லிங்கநாதன், வட மாகாணசபை உறுப்பினர்
3. கௌரவ.எஸ்.சுகிர்தன், வட மாகாணசபை உறுப்பினர்

முறைப்பாட்டுக்காரர் தரப்பில் முன்வைக்கப்படவுள்ள ஆவணங்கள்

1. கன்சாட் பிரதிகள், கோவைகள், ஆவணங்கள்.

.....................................................................

திரு.கு.பொ.சி.வரதராசா

வழக்குதொடுநர்தரப்பு சட்டதரணி

மேலதிக சாட்சிப்பட்டியல்

1. திரு. பெ.இ.இரஞ்சன் - முன்னாள் யாழ்கோ தலைவர்
2. திரு.வை.பிரேமதாஸ் - முன்னாள் தலைவர் மருதங்கேணி கடற்தொழிலாளர் சமாசத் தலைவர்

.....................................................................

திரு.கு.பொ.சி.வரதராசா

வழக்கு தொடுநர் தரப்பு சட்டதரணி

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ த. குருகுலராசா அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள்

1. வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சிவபாதம் நந்தகுமார் என்பவர் 58 வயது 3 மாதங்கள் கடந்துள்ள நிலையில், 16.01.2017இல் தவறான இடமாற்றம் ஒன்றை வழங்கி இருந்தமை மூலம் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை

2. யா/ யூனியன் கல்லூரி அதிபரின் நியமனத்தில் யூனியன் கல்லூரி பழைய மாணவராக இருந்த திரு. வரதன் மாஸ்டர் என்பவரை பாராளுமன்ற உறுப்பினரின் செல்வாக்கு மூலம் அவரை கொஞ்சகாலம் படித்த காரணத்திற்காக அதிபராக நியமிக்க மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்தமை.

3. குறித்த வரதன் என்பவர் கல்விக்கான கற்கை விடுமுறையில் இருக்கும் போது அவரை அதிபராக நியமித்ததன் மூலம் அதிகார துஷ்பிரயோகம் புரிந்தமை

4. குறித்த அதிபரின் நியமனத்தை உடன் நிறுத்துமாறு மாகாணசபையில் கௌரவ முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாகாணசபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும் அதனை செயற்படுத்துவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்காது செயலாளரை தடுத்தமை

5. i. 2015ம் ஆண்டளவில் கிளிநொச்சி பாரதிபுரம் அதிபர் அப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவி ஒருவரிடம் தகாத முறையில் நடக்க முற்பட்டமை தொடர்பாக மாகாணசபை உறுப்பினர் கௌரவ அனந்தி சசிதரன் தங்களுக்கு முறைப்பாடு செய்திருந்த போதும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமை

ii. குறித்த அதிபர் பாடசாலை மாணவியுடன் தகாத முறையில் நடந்துகொண்ட விடயத்தை பாடசாலை வகுப்பாசிரியர் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. முருகவேளுக்கு கடிதம் மூலம் முறைப்பாடு செய்தார். அதற்காக அவ் ஆசிரியர் பழிவாங்கப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. முருகவேளினால் இடமாற்றம் செய்யப்பட்டமை.

iii. குறித்த ஆசிரியரின் கடித மூலமான முறைப்பாட்டை விசாரிக்கச் சென்ற வலயக் கல்விப் பணிப்பாளர் அவ் ஆசிரியரை ஏனைய ஆசிரியர்கள் முன்னிலையில்

கொச்சைப்படுத்தியமை தொடர்பாக கௌரவ அனந்தி சசிதரன் கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவந்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்காமை.

6. கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்திலும், கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் பாடசாலையிலும் தனக்கேற்றவர்களை அதிபராக நியமனம் செய்ய கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்தமை.

7. வட மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் ஆசிரியர் மாநாடு என்ற பெயரில் பெருமளவில் நிதி செலவழித்து வீண்விரயம் செய்தமை

8. மாகாணப் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை முன்னாள் ஜனாதிபதி வருகைக்காக ஆறு தேசியப் பாடசாலைகளை அலங்கரிப்பதற்கு பெருந்தொகைப் பணத்தை செலவழித்தமை.

9. கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. முருகவேளின் சேவைக்காலம் முடிவுற உள்ள நிலையில் வேறு பொருத்தமான அதிபர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கையும் இதுவரை எடுக்காமல் ஒப்பந்த அடிப்படையில் அவரது சேவையை தொடருவதற்கு முயற்சிக்கிறமை.

..........................................

திரு.கு.பொ.சி.வரதராசா

வழக்கு தொடுநர் தரப்பு சட்டதரணி

முறைப்பாட்டுக்காரர் தரப்பில் சாட்சியமளிக்கவுள்ள சாட்சிகளின் பட்டியல்

1. கௌரவ அனந்தி சசிதரன், வட மாகாணசபை உறுப்பினர்
2. கௌரவ எஸ்.சுகிர்தன், வட மாகாணசபை உறுப்பினர்

முறைப்பாட்டுக்காரர் தரப்பில் முன்வைக்கப்படவுள்ள ஆவணங்கள்

1. கன்சாட் பிரதிகள், கோவைகள், ஆவணங்கள்.

..........................................................

திரு.கு.பொ.சி.வரதராசா

வட மாகாணசபை சுகாதார சுதேசமருத்துவ நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் கௌரவ ப.சத்தியலிங்கம் அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள்

1. 2014 – 2015 காலப்பகுதியில் சுகாதார தொண்டர்களாக கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்காமல் கடைகளிலும் பார்மஸிகளிலும் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கியமை
2. சுகாதார ஊழியர்களின் சீருடை விநியோகத்தில் நடைபெற்ற முறைகேடு
3. 94 மாகாண வைத்தியசாலைகளுக்கான உணவு விநியோக கேள்விகோரலில் நடைபெற்ற முறைகேடு தொடர்பில் தாங்கள் அறிக்கை விட்டிருந்தபோதிலும் அம்மோசடியை வெளிக்கொணர எந்த நடவடிக்கையும் எடுக்காமை.
4. வவுனியா வைத்தியசாலைக்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக அவுஸ்ரேலியாவிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் வழங்கிய நிதி குறிப்பிட்டநோக்கத்திற்காக பயன்படுத்தாமை.
5. சுகாதார திணைக்களங்களில் பாதுகாப்புசேவை ஒப்பந்தம் கேள்வி கோரலில் தவறாக நடந்து கொண்டமை

.....................................

திரு.கு.பொ.சி.வரதராசா

வழக்கு தொடுநர் தரப்பு சட்டதரணி

முறைப்பாட்டுக்காரர் தரப்பில் சாட்சியமளிக்கவுள்ள சாட்சிகளின் பட்டியல்

1. கௌரவ அனந்தி சசிதரன், வட மாகாணசபை உறுப்பினர்

முறைப்பாட்டுக்காரர் தரப்பில் முன்வைக்கப்படவுள்ள ஆவணங்கள்

1. கன்சாட் பிரதிகள், கோவைகள், ஆவணங்கள்.

...........................................................

திரு.கு.பொ.சி.வரதராசா

வழக்கு தொடுநர்தரப்பு சட்டதரணி

வட மாகாண மீன்பிடி வர்த்தக, வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் கௌரவ பா.டெனிஸ்வரன் அவர்களுக்கு எதிராக முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள்

1. நன்னீர்க் குளங்களில் மீன்குஞ்சு விடுவதில் பாரபட்சமாக நடந்தமை.

2. வட மாகாணத்தில் எல்லா மாவட்டங்களிலும் நடைமுறைகள் பின்பற்றாது போடப்பட்ட வீதிகள் தொடர்பில் நிதிமோசடி செய்தமை.

3. ஒப்பந்த நடைமுறைகளை பின்பற்றாமல் பேருந்து தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டமை.

4. போராளிகள், மாவீரர்கள் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒருகோடி நிதியை சரியான முறைகளை பின்பற்றாது போராளிகளின் வாழ்வாதார உதவி பயனாளிகள் தெரிவில் சரியாக தெரிவுசெய்யாது முறைகேடுகளை பின்பற்றி மோசடி செய்தமை.

..........................................................................

திரு.கு.பொ.சி.வரதராசா

வழக்கு தொடுநர்தரப்பு சட்டதரணி

முறைப்பாட்டுக்காரர் தரப்பில் சாட்சியமளிக்கவுள்ள சாட்சிகளின் பட்டியல்

1. கௌரவ அனந்தி சசிதரன், வட மாகாணசபை உறுப்பினர்

முறைப்பாட்டுக்காரர் தரப்பில் முன்வைக்கப்படவுள்ள ஆவணங்கள்

1. கன்சாட் பிரதிகள், கோவைகள், ஆவணங்கள்.

..........................................................................

திரு.கு.பொ.சி.வரதராசா

வழக்கு தொடுநர்தரப்பு சட்டதரணி

## மோட்டார் போக்குவரத்து அமைச்சர் கௌரவ பா.டெனிஸ்வரன் அவர்களுக்கு எதிராக முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள்

1. நன்னீர்க் குளங்களில் மீன்குஞ்சு விடுவதில் பாரபட்சமாக நடந்தமை.
2. வட மாகாணத்தில் எல்லா மாவட்டங்களிலும் நடைமுறைகள் பின்பற்றாது போடப்பட்ட வீதிகள் தொடர்பில் நிதிமோசடி செய்தமை.
3. ஒப்பந்த நடைமுறைகளை பின்பற்றாமல் பேருந்து தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டமை.
4. போராளிகள், மாவீரர்கள் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒருகோடி நிதியை சரியான முறைகளை பின்பற்றாது போராளிகளின் வாழ்வாதார உதவி பயனாளிகள் தெரிவில் சரியாக தெரிவுசெய்யாது முறைகேடுகளை பின்பற்றி மோசடி செய்தமை.

.....................................................................

திரு.கு.பொ.சி.வரதராசா

வழக்கு தொடுநர்தரப்பு சட்டதரணி

முறைப்பாட்டுக்காரர் தரப்பில் சாட்சியமளிக்கவுள்ள சாட்சிகளின் பட்டியல

1. கௌரவ அனந்தி சசிதரன், வட மாகாணசபை உறுப்பினர்

முறைப்பாட்டுக்காரர் தரப்பில் முன்வைக்கப்படவுள்ள ஆவணங்கள்

1. கன்சாட் பிரதிகள், கோவைகள், ஆவணங்கள்.

.....................................................................

திரு.கு.பொ.சி.வரதராசா

வழக்கு தொடுநர்தரப்பு சட்டதரணி

# III. குற்றச்சாட்டுக்களிற்கான விசாரணைக்குழுவின் அறிக்கை

## 1. வட மாகாண சபையின் சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் கௌரவ வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கத்திற்கு எதிரான முறைப்பாடுகள்

வட மாகாணசபையின் சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் கௌரவ வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் 2017.02.26ல் இந்த விசாரணைக்குழுவினால் விசாரணை நடத்தப்பட்டது.

மேற்படி கௌரவ அமைச்சருக்கு எதிராகப் பின்வருபவர்களினால் எழுத்து மூலமான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

1. வட மாகாணசபை உறுப்பினர் கௌரவ.க.சர்வேஸ்வரன் அவர்களது திகதியிடப்படாத முறைப்பாட்டுக் கடிதம்.
2. வட மாகாணசபை உறுப்பினர் கௌரவ.அனந்தி சசிதரன் (05.12.2016 திகதியிடப்பட்ட முறைப்பாட்டு கடிதம்)

இம் முறைப்பாடுகள் தொடர்பாக முறைப்பாடு செய்தவர்களையும், அவர்களால் முன்வைக்கப்பட்ட இம் முறைப்பாடு விடயம் தொடர்பான சாட்சியாளர்கள், மாகாண அரச சேவையில் பணியாற்றிய உத்தியோகத்தர்களையும், இம் முறைப்பாடுகளின் உண்மைத் தன்மையை வெளிக்கொண்டுவருவதற்காக விசாரணைக் குழு, சாட்சியமளிக்க அழைப்பாணை அனுப்பியிருந்தது. அதனடிப்படையில் முறைப்பாட்டாளர்கள், மாகாண, தனியார் பிரதிநிதிகள், விசாரணைக்குழுவின் முன் தோன்றி சாட்சியமளித்துள்ளனர்.

முறைப்பாட்டாளர்களது சாட்சி மற்றும், ஆவண சாட்சிகளின்படியும், அம் முறைப்பாடுகள் தொடர்பாக சாட்சியமளித்த சாட்சிகளின் சாட்சியங்கள், மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட, ஆவணங்கள் சான்றுகளின் அடிப்படையிலும், சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் கௌரவ வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கத்திற்கு எதிராக வழக்கு தொடுநரால் பின்வரும் 05 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

i. 2014 – 2015 காலப்பகுதியில் சுகாதார தொண்டர்களாக கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்காமல் கடைகளிலும் பார்மஸிகளிலும் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கியமை

ii. சுகாதார ஊழியர்களின் சீருடை விநியோகத்தில் நடைபெற்ற முறைகேடு

iii. 94 மாகாண வைத்தியசாலைகளுக்கான உணவு விநியோக கேள்வி கோரலில் நடைபெற்ற முறைகேடு தொடர்பில் தாங்கள் அறிக்கை விட்டிருந்த போதிலும் அம்மோசடியை வெளிக்கொணர எந்த நடவடிக்கையும் எடுக்காமை.

iv. வவுனியா வைத்தியசாலைக்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக அவுஸ்ரேலியாவிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் வழங்கிய நிதி குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தாமை.

v. சுகாதார திணைக்களங்களில் பாதுகாப்பு சேவை ஒப்பந்தம் கேள்வி கோரலில் தவறாக நடந்து கொண்டமை

மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முறைப்பாட்டாளரான கௌரவ. அனந்தி சசிதரனை உரிய சாட்சிகளுடனும் ஆவணங்களுடனும் அறிவிக்கப்படும் தினத்தில் சமூகம் தரும்படி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த கௌரவ அமைச்சர் முன்நிலையிலான விசாரணைத் தினத்தில் முறைப்பாட்டாளர் சமூகம் அளிக்கவில்லை. முறைப்பாட்டாளர் சமூகமற்ற நிலையில் விசாரணைக்குழு குறித்த அமைச்சரிடம் அவருக்கெதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்தியது.

## 1.1. 2014 - 2015 காலப்பகுதியில் சுகாதார தொண்டர்களாக கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்காமல் கடைகளிலும் பார்மஸிகளிலும் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கியமை

2014 தொடக்கம் 2015 வரையில் சுகாதாரத் தொண்டர்கள் நியமனத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் சாட்சியமளித்த கௌரவ அமைச்சர் இக் குற்றச்சாட்டை முற்றாக மறுத்திருந்தார். அவர் மேலும் தமது சாட்சியத்தில் அக்காலத்தில் பதவி வகித்த கௌரவ ஆளுநர், சுகாதார அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடனான நியமனக் கடிதத்துடன் 180 நாட்களுக்கு மேல் சுகாதாரத் தொண்டர்களாக களப்பணியில் ஈடுபட்டவர்களை

மாத்திரம் இந்த சேவைக்கு உள்வாங்கும்படி அறிவித்ததாகவும், இதைத் தொடர்ந்து வடமாகாணத்தின் MOH அலுவலகத்தினால் சுகாதார அமைச்சின் செயலாளராக இருந்த திரு.இரவீந்திரனின் கையொப்பத்துடன் சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றிக் கொண்டிருந்த எல்லோருடைய விபரமும் சேர்க்கப்பட்டு RDHS ஊடாக PD அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு செயலாளரின் அனுமதியோடு கௌரவ மாகாண அமைச்சர் காரியாலயத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் அங்கீகாரத்துடன் கௌரவ ஆளுநருக்கு அனுப்பப்பட்டு கௌரவ ஆளுநரின் அங்கீகாரத்துடன் பெயர் குறிப்பிடப்பட்ட அனைவருக்கும் நியமனம் வழங்கப்பட்டது எனவும் அந்த சுற்றுநிருபம் வரும்போது பணியாற்றிக் கொண்டிருந்தோருக்கு மட்டும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்தமையினால் அதன்படி நியமனம் வழங்கப்பட்டதாகவும் கூறியிருந்தார்.

பாதிக்கப்பட்ட தொண்டர்களை விசாரணை செய்ய தம்மால் ஒழுங்கு செய்து தர முடியும் என முறைப்பாட்டாளரான வடமாகாணசபை உறுப்பினர் கௌரவ அனந்தி சசிதரன் கூறியிருந்த வேளையிலும் அவர்களை அழைத்துவர தவறிவிட்டார். கௌரவ அமைச்சரின் சாட்சியத்துடன் முரண்படும் சாட்சியம் எதுவும் விசாரணைக்குழுவின் முன் வைக்கப்படவில்லை.

இச்சூழ்நிலையில் சுகாதார அமைச்சரால் இக்குற்றச்சாட்டு தொடர்பில் கொடுக்கப்பட்ட சாட்சியத்தை நிராகரிக்க எதுவித காரணமும் இல்லை என விசாரணைக்குழு கருதுகின்றது எனவே சுகாதார தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் விடயத்தில் அமைச்சர் தவறு இழைக்கவில்லை என்ற முடிவுக்கு விசாரணைக்குழு வருகின்றது.

சுகாதார அமைச்சில் நடைபெறும் கட்டட வேலைகள் தொடர்பில் கிடைத்த முறைப்பாடு தொடர்பில் கௌரவ அமைச்சர் சாட்சியமளிக்கும் போது கட்டட வேலைகள் Building Department கவனித்துக்கொள்ளும் என்றும் திட்டத்தை பரிசீலித்து evaluation committee உடன் கலந்தாலோசித்து open tender அழைத்து அதனை கட்டிமுடிப்பது வரையில் Building Department ஈடுபடும் என்றும் தங்களுக்கோ அல்லது சுகாதாரப் பணிப்பாளருக்கோ இந்த கட்டடம் கட்டுவது தொடர்பில் எந்த தொடர்பும் இருக்காது என சாட்சியமளித்தார்.

கௌரவ அமைச்சரின் சாட்சியத்திற்கு மாறான சாட்சியம் எதுவும் விசாரணைக் குழுவின் முன் வைக்கப்படாத நிலையில் கௌரவ சுகாதார அமைச்சரின் சாட்சியத்தை விசாரணைக்குழு ஏற்று குறித்த குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்ற முடிவுக்கு வருகின்றது.

## 1.2. சுகாதார ஊழியர்களின் சீருடை விநியோகத்தில் நடைபெற்ற முறைகேடு

சுகாதார ஊழியரின் சீருடை விடயத்தில் சாட்சியமளித்த கௌரவ அமைச்சர் தாங்கள் சீருடை வழங்குவதில்லை என்றும் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதத்தில் அவர்களுடைய சம்பளத்துடன் சீருடைக்கான காசும் தையல் கூலியும் வழங்கப்படுகின்றது என்றும் சம்பளப்பட்டியலில் இல்லாத ஒருவருக்கு சீருடை வழங்கப்பட்டால் செயலாளரையே கேட்க வேண்டும் என்றும் சாட்சியமளித்திருந்தார்.

விசாரணைக்குழுவின் முன் இந்த முறைப்பாட்டைச் செய்தவர் சமூகமளித்து சாட்சியம் சொல்லவில்லை. வேறு சாட்சிகளை முன்னிலைப்படுத்தவுமில்லை. கௌரவ சுகாதார அமைச்சரின் சாட்சியம் முரண்படுத்தப்படாதவிடத்து அச்சாட்சியத்தை நம்பமறுக்க வேண்டிய தேவை விசாரணைக்குழுவிற்கு எழவில்லை. எனவே சீருடை விநியோகம் தொடர்பில் கௌரவ அமைச்சருக்கு எதிராக செய்யப்பட்ட குற்றச்சாட்டை இவ் விசாரணைக்குழு நிராகரிக்கின்றது.

## 1.3. 94 மாகாண வைத்தியசாலைகளுக்கான உணவு விநியோக கேள்வி கோரலில் நடைபெற்ற முறைகேடு தொடர்பில் தாங்கள் அறிக்கை விட்டிருந்த போதிலும் அம்மோசடியை வெளிக்கொணர எந்த நடவடிக்கையும் எடுக்காமை.

மாகாண வைத்தியசாலைகளுக்கு உணவு விநியோக கேள்வி கோரலில் ஏற்பட்ட மோசடியை வெளிக்கொண்டுவர எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்பில் சாட்சியமளித்த கௌரவ அமைச்சர் 18 பெரிய ஆஸ்பத்திரிக்கு தான் உணவு விநியோகம் நடைபெறுகின்றது. மணி ஐயப்பா என்பவருக்கு தொடர்ச்சியாக tender கொடுக்கப்படுவது தொடர்பில் ஒரு விசாரணைக் குழு நியமித்து விசாரணை நடைபெற்றது. அந்த விசாரணையில் இந்த ஒப்பந்தகாரர் மிக நுணுக்கமாக அதிகமாக பாவிக்கப்படும் பொருட்களுக்கு கூடிய விலையைப் போட்டுள்ளார். இந்த விசாரணைக்குபின் ஒரே இடத்தில் பல tender போடுவதை தவிர்த்து அந்தந்த மாவட்டங்களில் RDHS மூலம் tender call பண்ணும் முறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்றும் சாட்சியமளித்தார்.

விசாரணைக்குழு முன் சாட்சியமளித்த திரு.லோகேஸ்வரன் என்பவர் சில ஒப்பந்தகாரர் சில நுணுக்கமான முறைகளை கையாள்வது பற்றி கூறியிருந்தார். கௌரவ அமைச்சரும் தமது சாட்சியத்தில் இதை ஏற்று இருந்தார். கூறுவிலை கோரலின் போது பொருட்களின் விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வேளையிலும் அதனை கூட்டிக் காண்பித்து மற்றைய பொருட்களின் விலைகளில் நுணுக்கமாக மாற்றம் செய்து ஒப்பந்தங்களை பெறுவதாக சாட்சியமளிக்கப்பட்டது.

மேலும் கூறுவிலை திறக்கப்பட்டு முடிவெடுக்கப்படும் வேளையில் கூறுவிலை கோரியவர்களுக்கு எதுவும் தெரியவருவதில்லை எனவும் கூறப்பட்டது.

எனவே கௌரவ சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் tender procedure இல் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தி அதில் பங்குபற்றும் சகலருக்கும் முன்னிலையில் முடிவுகள் அறிவிக்கப்படக்கூடிய நடவடிக்கையை உறுதி செய்யவேண்டும். விலை நிர்ணயம் செய்யப்பட்ட பொருட்களின் விலைகளில் நுணுக்கமான நடைமுறையைபின்பற்றி மாற்றம் செய்து ஒப்பந்தங்களை பெற்றுக் கொள்ளும் முறை தவிர்க்கப்படவேண்டும் என்றும் இத்தகைய தவறுகள் செய்யும் ஒப்பந்தகாரர்களை black list செய்ய வேண்டும் என்றும் இவ் விசாரணைக்குழு கௌரவ அமைச்சருக்கு ஆலோசனை வழங்குகின்றது. மேலும் ஒரே நபருக்கு மீண்டும் மீண்டும் உணவு விநியோக ஒப்பந்தங்கள் கொடுபடுவதையும் கௌரவ அமைச்சர் தமது கவனத்தில் எடுக்க வேண்டும்.

இக்கடமைகள் அமைச்சு உத்தியோகத்தர்களுக்கானதாக இருப்பினும் கொள்கையளவில் தவறுகளுக்கு இடமளிக்காத நடைமுறையை உறுதிசெய்யும் பொறுப்பு கௌரவ அமைச்சருடையது.

Tender proceduresல் உள்ள தவறுகள் குறித்து இந்த ஆணைக்குழுமுன் சாட்சியமளிக்கப்பட்டபோதிலும் இச்சாட்சிகளில் இருந்து கௌரவ அமைச்சர் நிதிமோசடி, கையூட்டு, அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றில் ஈடுபட்டார் என்ற முடிவுக்குவர இடமில்லை என இவ்வாணைக்குழு கருதுகின்றது.

## 1.4. வவுனியா வைத்தியசாலைக்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக அவுஸ்ரேலியாவிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் வழங்கிய நிதி குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தாமை.

இக்குற்றச்சாட்டை கௌரவ சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் மறுத்திருந்தார். இது தொடர்பில் அவர் தமது சாட்சியத்தில் தாம் 2014ம் ஆண்டு அவுஸ்ரேலியா சென்ற வேளையில் தனக்கு இரண்டு இரத்தம் சுத்திகரிப்பு இயந்திரங்களை அங்குள்ள வைத்தியர்களால் தரப்பட்டது என்றும் அவற்றை அவர்கள் உற்பத்தியாளர்கள் மூலமாக புனரமைப்பு செய்து பின் கப்பலில் அனுப்பியதாகவும் மத்திய சுகாதார அமைச்சருடன் தொடர்பு கொண்டு வரி செலுத்தாது திணைக்கள உத்தியோகத்தர் மூலம் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வந்ததாகவும் கூறியிருந்தார்.

இச்சாட்சியத்திற்கு மாறான சாட்சியம் எதுவும் விசாரணைக்குழு முன் வைக்கப்படாத நிலையில் விசாரணைக்குழு கௌரவ அமைச்சரின் சாட்சியத்தை ஏற்று இக் குற்றச்சாட்டை நிராகரிக்கின்றது.

## 1.5. சுகாதார திணைக்களங்களில் பாதுகாப்பு சேவை ஒப்பந்தம் கேள்வி கோரலில் தவறாக நடந்து கொண்டமை

இறுதியாக பாதுகாப்பு சேவை ஒப்பந்தம் கேள்வி கோரல் விடயம் அமைச்சு உத்தியோகத்தர்களால் செயற்படுத்தப்படுவது என்பதை இவ் விசாரணைக்குழு ஏற்று அக் குற்றச்சாட்டையும் நிராகரிக்கின்றது.

எனவே வைத்தியசாலைகளுக்கான உணவு விநியோக கேள்வி கோரல் கூடிய கவனம் கௌரவ அமைச்சர் எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு இவ் விசாரணைக்குழு சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் கௌரவ வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கத்திற்கு எதிரான எந்த குற்றச் சாட்டும் நிரூபிக்கப்படவில்லை என்ற முடிவுக்கு வருகின்றது.

## 2. வட மாகாணசபையின் மீன்பிடி, போக்குவரத்து ,வர்த்தக, வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் கௌரவ பா.டெனீஸ்வரனிற்கு எதிரான முறைப்பாடுகள்

வட மாகாணசபையின் மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் கௌரவ பா.டெனீஸ்வரனுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் தொடர்பில் 2017.02.26 திகதி யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் அமைந்துள்ள வடமாகாண சபை மகாநாட்டு மண்டபத்தில் இவ் விசாரணைக்குழுவினால் விசாரணை நடத்தப்பட்டது.

மேற்படி கௌரவ அமைச்சருக்கு எதிராக வட மாகாணசபை உறுப்பினர் கௌரவ.அனந்தி சசிதரன் அவர்களது 05.12.2016 திகதியிடப்பட்ட முறைப்பாட்டு கடித மூலமான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

இம் முறைப்பாடுகள் தொடர்பாக முறைப்பாடு செய்தவரையும், அம் முறைப்பாடு விடயம் தொடர்பான மாகாண அரச சேவையில் பணியாற்றிய உத்தியோகத்தர்களையும், இம் முறைப்பாடுகளின் உண்மைத் தன்மையை வெளிக்கொண்டுவருவதற்காக விசாரணைக் குழு, சாட்சியமளிக்க அழைப்பாணை அனுப்பியிருந்தது. அதனடிப்படையில் முறைப்பாட்டார், மாகாண, பிரதிநிதிகள், விசாரணைக்குழுவின் முன் தோன்றி சாட்சியமளித்துள்ளனர்.

முறைப்பாட்டாளரது சாட்சி மற்றும், ஆவண சாட்சிகளின்படியும், அம் முறைப்பாடுகள் தொடர்பாக சாட்சியமளித்த சாட்சிகளின் சாட்சியங்கள், மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சான்றுகளின் அடிப்படையிலும், மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் கௌரவ பா.டெனீஸ்வரனுக்கு எதிராக வழக்கு தொடுநரால் பின்வரும் 04 குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

I. நன்னீர் குளங்களில் மீன்குஞ்சுகள் விடுவதில் பாரபட்சமாக நடந்தமை.

II. வட மாகாணத்தில் எல்லா மாவட்டங்களிலும் நடைமுறைகள் பின்பற்றாது போடப்பட்ட வீதிகள் தொடர்பில் நிதிமோசடி செய்தமை.

III. ஒப்பந்த நடைமுறைகளை பின்பற்றாமல் பேருந்து தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டமை.

IV. போராளிகள், மாவீரர்கள் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒருகோடி நிதியை சரியான முறைகளை பின்பற்றாது போராளிகளின் வாழ்வாதார உதவி

பயனாளிகள் தெரிவில் சரியாக தெரிவு செய்யாது முறைகேடுகளை பின்பற்றி மோசடி செய்தமை.

இக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் உரிய சாட்சிகள் ஆவணங்கள் ஏதாவது இருப்பின் அவற்றுடன் பின் அறிவிக்கப்படும் திகதியில் விசாரணைக்குழு முன் சமுகமளிக்கும்படி இம் முறைப்பாட்டாளரான கௌரவ அனந்தி சசிதரன் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

வட மாகாணசபையின் மீன்பிடி, வர்த்தக, வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் கௌரவ பா.டெனீஸ்வரனிற்கெதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் 26.02.2017ல் விசாரணை நடாத்துவது என விசாரணைக்குழு தீர்மானித்து இத் தீர்மானம் குறித்த் கௌரவ அமைச்சருக்கும் கௌரவ அனந்தி சசிதரனுக்கும் உரிய முறையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த விசாரணைத் தினமான 26.02.2017ல் வட மாகாணசபையின் மீன்பிடி, வர்த்தக, வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் விசாரணைக்குழுமுன் விசாரணைக்கென சமுகமளித்திருந்த வேளையிலும் அவருக்கெதிரான குற்றச்சாட்டுகளை முன்வைத்த கௌரவ அனந்தி சசிதரன் விசாரணைக்கு சமுகமளித்து தனது குற்றச்சாட்டுகளை எண்பிப்பதற்குரிய சாட்சிகளையும் ஆவணங்களையும் முன்வைக்க பொறுப்பற்ற முறையில் தவறிவிட்டார். இவரது இச் செய்கை குறித்து விசாரணைக்குழு தனது விசனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

முறைப்பாட்டாளர் சமுகமற்ற நிலையில் விசாரணைக்குழு கௌரவ அமைச்சரிடம் அவருக்கெதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடாத்தியது.

## 2.1. நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டத்தில் மீன்குஞ்சுகள் விடுவதில் பாரபட்சமாக நடந்தமை

இக் குற்றச்சாட்டு குறித்து கௌரவ அமைச்சர் பதிலளிக்கும் போது வெலிஓயாவில் இருக்கும் குளங்களில் NAQDA இன் ஆலோசனைப்படி தாம் செயல்பட்டதை குறித்த கௌரவ அமைச்சர் ஏற்றுக் கொண்டார். மேலும் அவர் தனது சாட்சியத்தின் போது வெலிஓயாவிலுள்ள குளங்கள் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைகின்றதும் வடக்கு மாகாணசபை கட்டுப்பாட்டில் இல்லாததுமான குளங்களை நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டத்திற்கு தெரிவு செய்து வடமாகாண நிதியை அதற்கு உபயோகித்தமையையும் கௌரவ அமைச்சர் தனது சாட்சியத்தின் போது ஏற்றுக் கொண்டார்.

இது "அப்பகுதியிலுள்ள மக்கள் கேட்டுக்கொண்டதாலும் நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்க வேண்டும் என வடமாகாணத்திலுள்ள ஓரிரு குளங்களைத் தவிர ஏனைய குளங்கள் அனைத்துமே மத்திய அரசாங்கத்திற்குட்பட்டது" எனவும் கௌரவ அமைச்சர் தனது சாட்சியத்தின் போது கூறியிருந்ததையும் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட மூவின மக்களுக்கும் தங்களது வேலைத்திட்டம் செல்ல வேண்டும் என கூறியதையும் விசாரணைக்குழு இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறது. எனவே மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வருகின்ற குளங்களிலிருந்து நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டத்தை முன்னெடுத்தமையால் பயன் பெறுவதாக வட மாகாணத்திற்குட்பட்ட மக்கள் அமைவதாலும் மகாவலி அபிவிருத்தி சபை எதுவித பலனையும் இதன் மூலம் பெறமுடியாது. இவ்விடயத்தில் வெலிஓயாவிலுள்ள குளங்களுக்கும் வடக்கு மாகாணத்தின் ஏனைய குளங்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் மீன்குஞ்சுகளை விடுவதில் பாகுபாடு காண்பிக்கப்பட்டதற்கான சாட்சி எதுவும் ஆணைக்குழுவின் முன்வைக்கப்படவில்லை. மேலும் குறித்த அமைச்சரின் சாட்சியத்திலிருந்து வடக்கு மாகாணத்தின் வெலிஓயா பிரதேசம் தவிர்ந்த வேறு பகுதிகளிலுள்ள குளங்களில் ஓரிரண்டைத் தவிர அனைத்தும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வருகின்றன என்பது தெளிவாகின்றது.

எனவே வடக்கு மாகாணத்தின் ஏனைய பகுதியில் அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள குளங்களிற்கு மீன்பிடி வளர்ப்புத் திட்டம் மாகாண நிதியின் மூலம் முன்னெடுக்கப்படுமிடத்து வெலிஓயா மட்டும் ஏன் விதிவிலக்காக அமைய வேண்டும் என்ற கேள்வி எழுவதை இவ்வாணைக்குழு அவதானிக்கின்றது.

இது கொள்கை (policy) சம்பந்தப்பட்ட விடயமாகின்றது. குளங்கள் யாருடைய கட்டுப்பாட்டினுள் வந்தாலும் அங்கு ஆரம்பிக்கப்பட்டு நன்னீர் மீன்வளர்ப்புப் பயனாளிகளாக வடக்கு மாகாண மக்களே ஆகின்றனர். இதன் காரணமாக வடமாகாணத்தில் நன்னீர் குளங்களில் மீன்குஞ்சுகளை விடுவதில் வடக்கு மாகாணசபையின் பணம் வீண்விரயம் செய்யப்பட்டதாகவோ அல்லது மோசடி செய்யப்பட்டதாகவோ கருத எதுவித இடமும் இல்லை என விசாரணைக்குழு அபிப்பிராயம் கொள்கிறது.

மேலும் NAQDA தாபனத்துடன் இணைந்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்துடனேயே கௌரவ அமைச்சர் செயற்பட்டுள்ளார் என்பதையும் அவரது சாட்சியத்திலிருந்து காணக் கூடியதாக உள்ளது. இது விடயத்தில் எதுவித முரண்பட்ட சாட்சியம் எம்முன் வைக்கப்படாத நிலையில் குறித்த கௌரவ அமைச்சரின் இச் செயற்பாட்டில் அதிகார துஷ்பிரயோகம் ஏதாவது இருந்ததாகவும் விசாரணைக்குழு கருதவில்லை.

## 2.2. வட மாகாணத்தில் எல்லா மாவட்டங்களிலும் நடைமுறைகள் பின்பற்றாது போடப்பட்ட வீதிகள் தொடர்பில் நிதிமோசடி செய்தமை

மேலும் வட மாகாணசபையின் மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சருக்கெதிராக அடுத்த குற்றச்சாட்டு "வட மாகாணத்தில் எல்லா மாவட்டங்களிலும் இவ் அமைச்சினால் போடப்பட்ட வீதிகள் மாகாண சபையிலோ இவ் அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் விபரம் சமர்ப்பிக்கப்பட்டு முன் அனுமதி பெறப்படவில்லை. இதனால் பெருமளவு நிதி மோசடி நடந்துள்ளதாக தெரிய வருகின்றது" என்பதாகும்.

இவ்விடயத்தில் விசாரணைக்குழு ஆரம்பத்திலேயே இத்தகைய மோசடிகள் உள்ளகக் கணக்காய்வு மூலமே கண்டுபிடிக்கப்படல் வேண்டும். இதற்கென மாகாண சபையில் ஒழுங்கு விதிகள் இருக்க வேண்டும் என்பதும் இவற்றை ஒழுங்குபடுத்துவது இந்த ஆணைக்குழுவின் வேலையில்லை என்பதும் முறைப்பாட்டாளருக்கு ஆணைக்குழுவினால் எடுத்துக் கூறப்பட்டது.

எனினும் விசாரணைக்குழு இம் முறைப்பாடு தொடர்பிலும் குறித்த அமைச்சரிடம் விசாரணைகளை மேற்கொண்டது. இந்தக் குற்றச்சாட்டு கௌரவ அனந்தி சசிதரன் என்பவரால் முன்வைக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுக்கு பதிலளித்த குறித்த அமைச்சர் தனது அமைச்சில் 2120 கிமீ நீளமான வீதிகள் மட்டுமே வருவதாகவும் இந்த வீதிகள் செப்பனிடப்படும் போது Finance Commission, பிரதம செயலாளர் ஆகியோரின் அனுமதியின் பின்னரே உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வீதிகள் புனரமைக்கப்பட்டதாக கூறியிருந்தார்.

மேலும் நிதி மோசடி குறித்து சாட்சியமளித்த கௌரவ அமைச்சர் வருடா வருடம் ஒதுக்கப்படும் தமது நிதியிலிருந்து கௌரவ முதலமைச்சர் உட்பட சகலருக்கும் 6 மில்லியனை அவர்களுடைய பகுதி வீதிகள் புனரமைக்கப்படுவதற்காக வழங்கப்பட்டது. எனினும் இந்த வருடமும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா 5மில்லியன் கொடுப்பதாகவும் இந்த முறைப்பாட்டுக்காரரும் இந்த ஒதுக்கீட்டை பெற்று வீதி புனரமைப்பு செய்ததாகவும். ஆயினும் அவர் தனது அமைச்சு சார்ந்த ஆலோசனைக் குழுவில் அங்கத்தவராக இல்லை எனவும் சாட்சியமளித்திருந்தார்.

முறைப்பாட்டுக்காரர் விசாரணைக்குழு முன் தோன்றி தனது முறைப்பாடு தொடர்பில் உரிய சாட்சிகள் ஆவணங்கள் என்பவற்றை முற்படுத்தாத நிலையில் குறித்த அமைச்சரின் சாட்சியத்தை மறுக்க வேண்டிய நிலமை ஆணைக்குழுவிற்கு ஏற்படவில்லை.

எனவே இங்கு நிதி மோசடி அல்லது அதிகார துஷ்பிரயோகம் ஏதாவது நிகழ்ந்தது என்பதற்கு போதிய சாட்சியம் விசாரணைக்குழுமுன் இருக்கவில்லை.

## 2.3. ஒப்பந்த நடைமுறைகளை பின்பற்றாமல் பேரூந்து தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டமை

மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சருக்கெதிராக கௌரவ அனந்தி சசிதரன் முன் வைத்த அடுத்த குற்றச்சாட்டு பேரூந்து தரிப்பு நிலையங்கள் வடமாகாணத்தின் எல்லா மாவட்டங்களிலும் நிறுவப்பட்டன. இதற்கு மாகாண சபைக் கூட்டங்களில் அல்லது இவ்வமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் முன் அனுமதி பெறப்படவில்லை. இதனால் பெருமளவு நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது என்பதாகும்.

முறைப்பாட்டாளர் சமூகமளிக்கத் தவறியமையினால் இக் குற்றச்சாட்டிற்குரிய சாட்சியங்கள் ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. இதன் காரணமாக முதற் தோற்ற அளவிலேயே இக்குற்றச்சாட்டு hearsay evidence இல் தங்கி நிற்பது தெளிவாகின்றது. எனினும் இக்குற்றச்சாட்டும் ஆணைக்குழுவினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இக் குற்றச்சாட்டு தொடர்பில் குறித்த கௌரவ அமைச்சர் தனது சாட்சியத்தின் போது இந்த பஸ்தரிப்பு நிலையங்கள் பலரின் வேண்டுகோளிற்கிணங்க கட்டப்பட்டதாகவும் 2014ம் ஆண்டில் வேலைகள் உரிய காலத்தில் முடியவில்லை என்றும் இதற்கான காரணம் வட மாகாணத்தில் உரிய ஒப்பந்தகாரர் இல்லை என்றும் அவர்கள் பல வேலைகளை வட மாகாணத்தில் எடுப்பதால் வேலைகள் உரிய காலத்தில் முடியவடையவில்லை என்றும் இதனால் 2015ம், 2016ம் ஆண்டுகளில் தமது அமைச்சின் கீழுள்ள வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு ஒரு பஸ்தரிப்பு நிலையம் அமைக்க தேவையான நிதி எவ்வளவு என்ற உரிய மதிப்பீடு பொறியியலாளரினால் செய்யப்பட்டு பஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவேண்டிய இடம் தெரிவு செய்யப்பட்டு கேள்வி கோரல் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு பஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டதாகவும் நூற்றுக்கும் அதிகமான சிறிய

பஸ்தரிப்பு இடங்கள் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் அமைக்கப்பட்டது எனவும் சாட்சியமளித்தார்.

இக் குற்றச்சாட்டுத் தொடர்பிலும் இம் முறைப்பாட்டாளரால் எதுவித சாட்சியம், ஆவணங்கள் எவையும் விசாரணைக்குழு முன் வைக்காத நிலையில் குறித்த கௌரவ அமைச்சரின் சாட்சியத்தை நம்ப மறுக்க வேண்டிய நிலை ஆணைக்குழுவிற்கு ஏற்படவில்லை.

எனவே இங்கு நிதி மோசடி அல்லது அதிகார துஷ்பிரயோகம் ஏதாவது நிகழ்ந்தது என்பதற்கு போதிய சாட்சியம் ஆணைக்குழுவின் முன் இருக்கவில்லை. ஒரு குற்றச்சாட்டு குறித்த கௌரவ அமைச்சருக்கு எதிராக வைக்கப்பட்டது. அதன் பிரகாரம் வீதியில் ஒரு பையனை கண்டு "நீ ஏன் வீதியில் சும்மா திரிகின்றாய் ஒரு பஸ்தரிப்பிடத்தை எடுத்துக் கட்டு. நான் உனக்கு பணம் தருகிறேன் என்று கூறினார்" என்பதாகும்.

இக் குற்றச்சாட்டும் கௌரவ அனந்தி சசிதரனினால் செய்யப்பட்டதாகும். அவர் தமது குற்றச்சாட்டில் குறித்த வாலிபனே இந்தக் குற்றச்சாட்டை தமக்குத் தெரிவித்ததாகக் கூறியிருந்தார். ஆயினும் குறித்த வாலிபர் விசாரணைக்குழு முன் சாட்சியாக வராத நிலையில் இதுவும் ஒரு கேள்வி வழி சாட்சியமாகிறது (hearsay evidence). ஆயினும் விசாரணைக்குழு இந்தக் குற்றச்சாட்டு தொடர்பிலும் விசாரணை நடத்தியது.

இந்த விடயம் குறித்து குறித்த கௌரவ அமைச்சர் தனது சாட்சியத்தின் போது ஆரம்பத்தில் பல ஒப்பந்தகாரர்கள் ஐந்து மாவட்டங்களிலும் தம்மை அணுகி வீதி கட்டட வேலைகளை தமக்கு வழங்குமாறு கோரியதாகவும் அது பிழையான நடைமுறை என்பதால் பிரதம செயலாளரின் அனுமதியோடு பத்திரிகைகளில் ஒப்பந்தகாரர்களை பதிவு செய்வதற்கான அறிவித்தல் கொடுக்கப்பட்டு திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவர்களைத் தவிர வேறு எவருக்கும் இந்த வேலைகள் கொடுக்கப்படவில்லை என்றும் தான் அப்படி எவருக்கும் கூறவில்லை என்றும் சாட்சியமளித்திருக்கிறார்.

குறித்த கௌரவ அமைச்சரின் இச் சாட்சியத்தை நம்ப மறுக்க வேண்டிய நிலை எதுவும் விசாரணைக்குழுவிற்கு ஏற்படவில்லை. மேலும் இக் குற்றச்சாட்டு கேள்வி வழிச் சாட்சியாக அமையும் காரணத்தினால் அதனை இவ் விசாரணைக்குழு நிராகரிக்கிறது.

## 2.4. போராளிகள், மாவீரர்கள் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒரு கோடி நிதியை சரியான முறைகளை பின்பற்றாது போராளிகளின் வாழ்வாதார உதவி பயனாளிகள் தெரிவில் சரியாக தெரிவு செய்யாது முறைகேடுகளை பின்பற்றி மோசடி செய்தமை

குறித்த கௌரவ அமைச்சருக்கு எதிராக இக் குற்றச்சாட்டை முன்வைத்தவரான கௌரவ அனந்தி சசிதரன் இது தொடர்பிலும் விசாரணைக்குழு முன் இக் குற்றச்சாட்டை எண்பிப்பதற்குரிய சாட்சியங்கள் ஆவணங்கள் என்பவற்றை முற்படுத்தத் தவறிவிட்டார். எனினும் விசாரணைக்குழு குறித்த அமைச்சரிடம் இவ்விடயம் குறித்து விசாரணை நடாத்திய வேளையில் கௌரவ அமைச்சர் தனது சாட்சியத்தில் 1 கோடி ரூபா நிதி ஒதுக்கப்படவில்லை என்றும் 2015ல் 43 மில்லியனும் 2016ல் 25 மில்லியனும் பயன்படுத்தி உள்ளதாகவும் தமக்கு கிடைக்கப்பெற்ற 16,000 க்கு மேற்பட்ட விண்ணப்பப் படிவங்களில் தெரிவு எவ்வாறு இருக்க வேண்டும் என திணைக்களத்திற்கு பணிப்புரை கொடுத்ததாகவும் தெரிவித்திருந்தார்.

மேலும் இத் தெரிவு முறையில் தமிழ் அரசியல் கைதிகள், அத்துடன் கணவன்மாரை இழந்துள்ள பெண் போராளிகள், முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்கள், அவயவங்களை இழந்தவர்கள், இரண்டிற்கும் மேற்பட்ட போராளிகளை இழந்திருக்கும் குடும்பங்களை உள்வாங்குவது என்ற பிரமாணத்தின் அடிப்படையில் செயலாளர், பணிப்பாளர் ஆகியோருடன் ஆலோசித்துத்தான் கொள்கைத் தீர்மானம் எடுக்கப்பட்டது எனவும் கூறியிருந்தார்.

எனவே பயனாளிகளை போராளிகள் குடும்பங்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யும் விடயத்தில் ஒரு கொள்கை அடிப்படையிலான முடிவு எட்டப்பட்டுள்ளமை குறித்த கௌரவ அமைச்சரின் சாட்சியத்திலிருந்து தெளிவாகின்றது. இத்தகைய முடிவிற்கு மேலாக பாரபட்சம் காட்டப்பட்டது என்ற சாட்சியம் இந்த விசாரணைக்குழுவின் முன் வைக்கப்படாத நிலையில் இக்குற்றச்சாட்டையும் இவ் விசாரணைக்குழு நிராகரிக்கின்றது.

எனவே குறித்த மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம், கிராம அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் கௌரவ பா. டெனீஸ்வரனுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்ற முடிவிற்கு இவ் விசாரணைக்குழு வருகின்றது.

## 3. வட மாகாணசபையின் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ த.குருகுலராசாவிற்கு எதிரான முறைப்பாடுகள்

வட மாகாணசபையின் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ த.குருகுலராசாவிற்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் 2017.02.25 திகதி யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் அமைந்துள்ள வட மாகாண சபை மகாநாட்டு மண்டபத்தில் இந்த விசாரணைக்குழுவினால் விசாரணை நடாத்தப்பட்டது.

மேற்படி கௌரவ அமைச்சருக்கு எதிராக வட மாகாணசபை உறுப்பினர்களான கௌரவ. அனந்தி சசிதரன், கௌரவ.க.சர்வேஸ்வரன், கௌரவ ச. சுகிர்தன், கௌரவ பசுபதி அரியரட்ணம் அவர்களினால் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

இம் முறைப்பாடுகள் தொடர்பாக முறைப்பாடு செய்தவர்களையும், அவர்களால் முன்வைக்கப்பட்ட அம் முறைப்பாடு விடயம் தொடர்பான சாட்சியாளர்கள், மாகாண அரச சேவையில் பணியாற்றிய உத்தியோகத்தர்களையும், இம் முறைப்பாடுகளின் உண்மைத் தன்மையை வெளிக்கொண்டுவருவதற்காக விசாரணைக் குழு, சாட்சியமளிக்க அழைப்பாணை அனுப்பியிருந்தது. அதனடிப்படையில் முறைப்பாட்டாளர்கள், மாகாண பிரதிநிதிகள், விசாரணைக்குழுவின் முன் தோன்றி சாட்சியமளித்துள்ளனர்.

முறைப்பாட்டாளர்களது சாட்சி மற்றும், ஆவண சாட்சிகளின்படியும், அம் முறைப்பாடுகள் தொடர்பாக சாட்சியமளித்த சாட்சிகளின் சாட்சியங்கள் அடிப்படையினும் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ த.குருகுலராசாவிற்கு எதிராக வழக்கு தொடுநரால் பின்வரும் 09 குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

i. வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சிவபாதம் நந்தகுமார் என்பவர் 58 வயது 3 மாதங்கள் கடந்துள்ள நிலையில், அவருக்கு 16.01.2017ல் தவறான இடமாற்றம் ஒன்றை வழங்கி இருந்தமை மூலம் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை.

ii. யா/ யூனியன் கல்லூரி அதிபரின் நியமனத்தில் யூனியன் கல்லூரி பழைய மாணவராக இருந்த திரு. வரதன் மாஸ்டர் என்பவரை ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் செல்வாக்கு மூலம் கொஞ்சகாலம் படித்த காரணத்திற்காக அவரை அப்பாடசாலையின் அதிபராக நியமிக்க மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்தமை.

iii. குறித்த வரதன் என்பவர் கல்விக்கான கற்கை விடுமுறையில் இருக்கும் போது அவரை அதிபராக நியமித்ததன் மூலம் அதிகார துஷ்பிரயோகம் புரிந்தமை.

iv. குறித்த அதிபரின் நியமனத்தை உடன் நிறுத்துமாறு மாகாணசபையில் கௌரவ முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாகாண சபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும் அதனை செயற்படுத்துவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்காது இருக்க செயலாளரை தடுத்தமை.

v. அ. 2015ம் ஆண்டளவில் கிளிநொச்சி பாரதிபுரம் அதிபர் அப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவி ஒருவரிடம் தகாத முறையில் நடக்க முற்பட்டமை தொடர்பாக மாகாணசபை உறுப்பினர் கௌரவ அனந்தி சசிதரன், கௌரவ கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சருக்கு முறைப்பாடு செய்திருந்த போதும் அவ் அதிகாரிகளுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமை

ஆ. குறித்த அதிபர் பாடசாலை மாணவியுடன் தகாத முறையில் நடந்துகொள்ள முயன்ற விடயத்தை பாடசாலை வகுப்பாசிரியர் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.முருகவேளுக்கு கடிதம் மூலம் முறைப்பாடு செய்தார். அதற்காக அவ் ஆசிரியர் பழிவாங்கப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. முருகவேளினால் இடமாற்றம் செய்யப்பட்டமை.

இ. குறித்த ஆசிரியரின் கடித மூலமான முறைப்பாட்டை விசாரிக்கச் சென்ற வலயக் கல்விப் பணிப்பாளர் அவ் ஆசிரியரை ஏனைய ஆசிரியர்கள் முன்னிலையில் கொச்சைப்படுத்தியமை தொடர்பாக கௌரவ அனந்தி சசிதரன், கௌரவ கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்காமை.

vi. கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்திலும், கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் பாடசாலையிலும் தனக்கேற்றவர்களை அதிபராக நியமனம் செய்ய கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்தமை.

vii. வட மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் ஆசிரியர் மாநாடு என்ற பெயரில் பெருமளவில் நிதி செலவழித்து வீண்விரயம் செய்தமை.

viii. மாகாணப் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முன்னாள் ஜனாதிபதி வருகைக்காக ஆறு தேசியப் பாடசாலைகளை அலங்கரிப்பதற்கு பெருந்தொகைப் பணத்தை செலவழித்தமை.

ix. கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. முருகவேளின் சேவைக்காலம் முடிவுற உள்ள நிலையில் வேறு பொருத்தமான பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கையும் இதுவரை எடுக்காமல் ஒப்பந்த அடிப்படையில் அவரது சேவையை தொடருவதற்கு முயற்சிக்கிறமை.

இக்குற்றச்சாட்டுகள் தொடர்பில் வடமாகாணசபை உறுப்பினர்கள் கௌரவ பசுபதி அரியரட்ணம், கௌரவ கந்தையா சர்வேஸ்வரன் ஆகியோருடன் திரு. சிவபாதம் நந்தகுமார் ஆகியோர் சாட்சியமளித்து இருந்தனர். அத்துடன் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. இராசா இரவிந்திரன் குறித்த கௌரவ கல்வி அமைச்சர் ஆகியோரது சாட்சியங்களும் விசாரணைக்குழுமுன் பதிவு செய்யப்பட்டது.

## 3.1. வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சிவபாதம் நந்தகுமார் என்பவர் 58 வயது 3 மாதங்கள் கடந்துள்ள நிலையில், அவருக்கு 16.01.2017ல் தவறான இடமாற்றம் ஒன்றை வழங்கி இருந்தமை மூலம் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை.

வட மாகாணசபை உறுப்பினர் கௌரவ சந்திரலிங்கம் சுகிர்தனால் முன்வைக்கப்பட்ட இக்குற்றச்சாட்டு தொடர்பில் வட மாகாணசபை கல்வி அமைச்சில் உதவிச் செயலாளராக பதவி வகிக்கும் திரு. சிவபாதம் நந்தகுமார் தமது சாட்சியத்தின்போது 2005ம் ஆண்டு முதல் 2011ம் ஆண்டு வரை வடமராட்சி கல்வி வலயத்தின் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராக தான் கடமையாற்றியதாகவும் 2011ம் ஆண்டு வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டதாகவும் 2016ம் ஆண்டுவரை அந்த பதவியில் கடமையாற்றியதாகவும் 17வருடங்கள் ஒரே வலயத்தில் கடமையாற்றியதாக தன் மீது குற்றம் காணப்பட்டு 16.01.2017ல் தனக்கு 58வயது 3மாதங்கள் முடிவடைந்த நிலையில் வட மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் பதவிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் ஓய்வு பெறுவதற்கு 2வருடங்கள் உள்ள நிலையில் தன்னை இடமாற்றம் செய்து SLEAS தரம் II இல் உள்ள தனக்கு SLAS தரம் III இற்குரிய பதவி வழங்கப்பட்டதாக கூறியிருந்தார். ஓய்வு பெறும் நிலையில் இருந்த தன்னை

இடம் மாற்றம் செய்தது தவறு என இவர் தமது சாட்சியத்தின்போது தெரிவித்தார். (மாகாண நிர்வாக சுற்றறிக்கை இல : NP/02/2009(7)- 25/03/2009)

இவரது சாட்சியம் இவருக்குப் பின் சாட்சியமளித்த கௌரவ கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரது சாட்சியங்களில் இருந்து கல்வி அமைச்சில் நடைபெற்ற நியமனங்கள், பதவி வழங்கல், இடமாற்றம் தொடர்பில் பல முக்கிய விடயங்களை எம்மால் அவதானிக்க முடிகிறது. சட்டத்தின் பிரகாரம் கௌரவ ஆளுநருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை அவர் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு, பிரதம செயலாளர், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் குறித்த பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே கையளிக்க முடியும். இவ்வாறு கையளிக்கப்பட்ட அதிகாரங்கள் மீண்டும் கையளிக்கப்பட முடியாது.

நியமனம் பதவிநிலை வழங்கல், இடமாற்றம் என்பவற்றில் அரசியல் தலையீடு இல்லாது இருக்க வேண்டும் என்ற அரசின் பொதுக் கொள்கைக்கு ஏற்பவே அதனடிப்படையில் பொதுச் சேவை ஆணைக்குழுதேசியரீதியில் செயற்படுகின்றது. மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு மாகாண மட்டத்தில் செயற்படுகின்றது. மேலும் ஆளுநரின் அதிகாரங்கள் எத்தகைய குழு அல்லது உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்படலாம் என்பது சட்டத்தில் திட்டவட்டமாக கூறப்படுகின்றது. இவையனைத்தும் அரசாங்க ஊழியரின் நியமனம், பதவி நிலை வழங்கல், இடமாற்றம் என்பன தொடர்பில் அரசியல் செல்வாக்கு பிரயோகிக்கப்படுவதை தடுக்கும் நோக்கில் செய்யப்பட்ட அரசியல் யாப்புரீதியான பாதுகாப்பு நடவடிக்கைகளாக அமைகின்றன. நிலமை இவ்வாறு இருக்க, எம் முன்னிலையில் பதியப்பட்ட சாட்சியங்கள் வட மாகாண அமைச்சர் வாரியம் இவ்விடயங்களில் தலையிட்டுள்ளது என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. திரு சிவபாதம் நந்தகுமாரின் விடயத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கும் அமைச்சின் செயலாளருக்கும் அப்பாற்பட்டு மாகாணசபையின் தலையீட்டால் அமைச்சர் வாரியத்தில் எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்த கௌரவ அமைச்சரது சாட்சியம், கல்வி அமைச்சு செயலாளரின் சாட்சியம் ஆகியவற்றில் இருந்து தெளிவாகின்றது. மேலும் எவ்வகையிலும் ஒரு அரசாங்க ஊழியருக்கு கொடுக்கப்படமுடியாத வாக்குறுதி வட மாகாணசபை அமைச்சர் வாரியத்தின் அறிவுடன் திரு சி.நந்தகுமாரிற்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது யாருக்கு பதவி வழங்குவதற்காக திரு சி.நந்தகுமார் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டாரோ அவ் உத்தியோகத்தர் 6மாதத்தில் ஓய்வுபெறுவார் என்றும், அவ்வேளையில் முறைப்பாட்டாளரான திரு சி.நந்தகுமாரை அப்பதவியில் மீண்டும் அமர்த்துவது என்ற வாக்குறுதி முறைப்பாட்டாளருக்கு கல்வி அமைச்சினால் கொடுக்கப்பட்டுள்ளது. கௌரவ அமைச்சர், அமைச்சு செயலாளர் ஆகியோரது சாட்சியத்தின்படி

அமைச்சர் வாரியத்தின் அறிவுடன் தான் இவ்வாக்குறுதி கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகின்றது.

இச் சந்தர்ப்பத்தில் கல்வி அமைச்சின் செயலாளரின் கூற்றுகள் சிலவற்றை மேற்கோள்காட்ட வேண்டியுள்ளது.

"இதை பொதுச் சேவைகள் ஆணைக்குழு மேற்கொண்டால் எவ்வளவோ பிரச்சினைகள் தீர்க்கப்படும்", "..........அதே போன்று எமது மாகாணத்திலும் பொதுச்சேவை ஆணைக்குழு தனது அதிகாரத்தை கையிலெடுத்து சேவையாற்ற வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்"

மேற்கூறிய அவதானிப்புகளுடன் விசாரணைக்குழு குறித்த முறைப்பாடு தொடர்பில் தனது கவனத்தை திருப்புகின்றது.

இவ் விசாரணைக்குழுமுன் சாட்சியமளித்த கௌரவ அமைச்சர் இம் முறைப்பாடு தொடர்பில் விலகிச் செல்லும் வகையில் பொறுப்பற்ற முறையில் சாட்சியமளித்ததை காணக்கூடியதாக இருந்தது.

குறித்த இடமாற்றம் தொடர்பில் கீழ்க் கண்ட பதில்களை கௌரவ கல்வி அமைச்சர் வழங்கியிருந்தார். குறித்த இடமாற்றம் அமைச்சர் வாரியத்தின் அனுமதியுடன் செய்யப்பட்டதாகவும் வடக்கு மாகாணசபை உறுப்பினரின் கோரிக்கையின் மேல் செய்யப்பட்டதாகவும், முறைப்பாட்டாளர் வலயத்தை சரியான முறையில் நடத்திக் கொண்டிருந்தார். ஆனால் புஸ்பலிங்கம் விடாப்பிடியாக தனக்கு இப்பதவி தரப்படவேண்டும் எனக் கோரியதால் வழங்கப்பட்டதாகவும், வடக்கு மாகாணசபை முறைப்பாட்டுக் குழுவின் கோரிக்கையால் செய்யப்பட்டதாகவும், முறைப்பாட்டாளரின் நியமனத்தில் நிகழ்ந்த அரசியல் பழிவாங்கலை தாம் சுட்டிக்காட்டியதாகவும் இவ் இடமாற்றத்திற்கு தாம் பொறுப்பாளி இல்லை என பல காரணங்களை குறித்த இடமாற்றம் தொடர்பில் அமைச்சர் கூறியிருந்தார். கல்வி அமைச்சில் நடைபெறும் விடயங்களுக்கு தாம் பொறுப்பாளி இல்லை என கௌரவ கல்வி அமைச்சர் கூறியதும் மேலே குறிப்பிட்டவாறு பல குறித்த மாற்றம் தொடர்பில் பல விளக்கங்கள் கொடுக்க முன்வந்தமையும் கௌரவ கல்வி அமைச்சரின் இவ் விடமாற்றம் விடயத்தில் விலகிச்செல்லும் மனப்பாண்மையை எடுத்துக் காட்டுகின்றது. மேலும் முறைப்பாட்டுக்காரரின் வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம் அரசியல் செல்வாக்குக்குட்பட்டதாக இருந்ததாக கூறி முறைப்பாட்டாளருக்கு 16.01.2017ல் வழங்கப்பட்ட இடமாற்றத்தை நியாயப்படுத்த அமைச்சர் முயற்சித்துள்ளார். முறைப்பாட்டுக்காரர் எம் முன் சாட்சியமளித்த வேளையில் வடமராட்சி வலயக்

கல்விப் பணிப்பாளராக தாம் நியமனம் செய்யப்பட்ட வேளையில் தனது தராதரத்தில் சேவை மூப்புடையவராக புஸ்பலிங்கம் என்பவர் இருந்ததாகவும் தமக்கு இந்நியமனம் வழங்கப்பட்டதன் மூலம் குறித்த புஸ்பலிங்கம் சேவை மூப்பு இருந்த போதிலும் அதே வலயத்தில் தமக்கு கீழ் சேவையாற்றிய நிலை ஏற்பட்டதையும் ஏற்றுக்கொண்டார். ஆசிரியராக தாம் சேவையாற்றிய வேளையில் கஷ்டமான பகுதிகளில் சேவை செய்ததையும் தனது திறமையையும் தமது சாட்சியத்தின்போது எடுத்துக்கூறி தனது வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனத்தை நியாயப்படுத்த அவர் முயற்சித்தார் எனினும் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியில் முறைப்பாட்டாளர் கஷ்டப் பிரதேசத்தில் சேவை செய்யவில்லை என்பதையும் ஏற்றுக் கொண்டார்.

எம் முன் பதியப்பட்ட சாட்சியத்தின் மூலம் முறைப்பாட்டாளருக்கு 2011ல் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக வழங்கப்பட்ட நியமனம் அரசியல் செல்வாக்கின் நிமித்தம் வழங்கப்பட்ட முற்றிலும் தவறான நியமனம் என்ற முடிவுக்கு விசாரணைக்குழுவருகின்றது.

ஆயினும் 2013ம் ஆண்டு கல்வி அமைச்சராக பதவியேற்ற குறித்த கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ த.குருகுலராசா அவர்கள் ஏன் 2017 தை மாதம் வரையில் இந்த மாற்றத்தை செய்யத் தயங்கினார் என்ற கேள்வி எழுகின்றது. இதே போன்று தவறான வழியில் பதவிகளை பெற்ற தனது நண்பர்கள் இருவரை பாதுகாக்க அவர்களது சேவை ஓய்வுக்காலம் வரும்வரை கௌரவ அமைச்சர் நடவடிக்கை எடுக்காது இருந்தார் என எம் முன் கூறப்பட்ட சாட்சியத்தை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தமானதாகின்றது.

16.01.2017ல் முறைப்பாட்டாளருக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் தவறானது இல்லை என கௌரவ அமைச்சர் தனது சாட்சியத்தின் போது கூறியுள்ளார்.

முறைப்பாட்டாளர் தவறான வழியில் வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனத்தை பெற்றிருந்த போதிலும் கௌரவ கல்வி அமைச்சர் தான் பதவியேற்று 4வருடங்களின் பின் அவர் ஓய்வு பெறும் காலத்தை அண்மித்து இருக்கும்போது அவருக்கு இடமாற்றம் வழங்கியமை தவறு என்ற முடிவுக்கு விசாரணைக்குழு வருகின்றது. மேலும் SLEAS தரம் II ல் இருந்த முறைப்பாட்டாளருக்கு SLAS தரம் III தரத்தில் உள்ள பதவியை வழங்கி சேவை வழங்கியதும் தவறு என்ற முடிவிற்கு விசாரணைக்குழு வருகின்றது.

புதிய வட மாகாணசபை ஓர் புதிய அரசியல் நாகரீகத்தை உருவாக்கும் என்ற மக்களின் எதிர்பார்ப்பு மழுங்கடிக்கப்பட்ட நிலையை இங்கு காணமுடிகின்றது.

அமைச்சின் நியமனங்கள், இட ஒதுக்கீடு, இடமாற்றம் என்பன சட்டப்படி அமைச்சின் செயலாளருடைய நிர்வாக கடமை. கொள்கை ரீதியான முடிவுகளை எடுப்பதே அமைச்சர்களினதும் அமைச்சர் வாரியத்தினதும் கடமையாகும். நியமனம், இட ஒதுக்கீடு, இடமாற்றம் போன்ற விடயங்களில் தலையிடாதிருக்க வேண்டிய கௌரவ அமைச்சர் இவ் விடயங்களில் அமைச்சர் வாரியத்தின் முடிவு எனக் கூறுவது மிகவும் தவறான நிலைப்பாடாகும். எம் முன் சாட்சியமளித்த கல்வி அமைச்சின் செயலாளரும் இவ்விடயங்களில் தாம் அமைச்சர் வாரியத்தின் முடிவுகளை செயற்படுத்துவதாக கூறியுள்ளதை இங்கு சுட்டிக்காட்ட விசாரணைக்குழு விரும்புகின்றது. இந்நிலை மாற வேண்டும். அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்ட நிருவாக ரீதியான கடமைகளில் அமைச்சர் வாரியம் அல்லது கௌரவ அமைச்சர் தலையிடுவது தவறானதாகும்.

**3.2. யா/ யூனியன் கல்லூரி அதிபரின் நியமனத்தில் யூனியன் கல்லூரி பழைய மாணவராக இருந்த திரு. வரதன் மாஸ்டர் என்பவரை ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் செல்வாக்கு மூலம் கொஞ்சகாலம் படித்த காரணத்திற்காக அவரை அப்பாடசாலையின் அதிபராக நியமிக்க மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்தமை**

**3.3. குறித்த வரதன் என்பவர் கற்கை விடுமுறையில் இருக்கும் போது அவரை அதிபராக நியமித்ததன் மூலம் அதிகார துஷ்பிரயோகம் புரிந்தமை.**

கௌரவ கந்தையா சர்வேஸ்வரன், வட மாகாணசபை உறுப்பினரால் முன்வைக்கப்பட்ட இக்குற்றச்சாட்டுகள் குறித்து கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சாட்சியமளித்த வேளையில் 2016ம் ஆண்டு யூனியன் கல்லூரி அதிபர் ஓய்வு பெற்று விட்டார். அந்த வெற்றிடத்திற்கு பதவி விண்ணப்பம் கோரப்பட்டு விண்ணப்பித்த நால்வருக்கும் நேர்முகப்பரீட்சை மாகாண கல்விப் பணிப்பாளரின் தலைமையில் நடாத்தப்பட்டு அதில் அவர்களால் விதந்துரைக்கப்பட்டவர்களது பட்டியலை கௌரவ கல்வி அமைச்சருக்கு சிபார்சு செய்து அனுப்பி அனுமதி பெற்று நியமனம் செய்யப்பட்டது என்றும் இந்த நியமனத்தின் நியமன அதிகாரி அமைச்சர் இல்லை என்றும் மாகாணசபை உருவாக்கப்பட்ட பின்னர் statute pass பண்ணப் பட்டு இருக்கின்றது என்றும் அதில் கௌரவ அமைச்சருக்கான சில அதிகாரங்களை குறிப்பிட்டு இருக்கின்றபடி, நியமனம் அமைச்சின் அனுமதியோடு செய்யப்பட்டது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அரசியல் யாப்பின் பிரகாரம் மாகாண சபையின் பதவிகளுக்கான உத்தியோகத்தர் நியமன அதிகாரம் கௌரவ ஆளுநருடையது. அதை அவர் யாருக்கு தனது அதிகாரத்தை கையளிக்கலாம் என்பதும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. அவ்வாறு கையளிக்கப்பட்ட அதிகாரி மாகாணப் பொதுசேவை ஆணைக்குழு அல்லது கௌரவ ஆளுநர் மட்டுமே இந்நியமன அதிகாரத்தை செயற்படுத்தமுடியும். இது தொடர்பில் வட மாகாணசபை ஏதாவது நியதி சட்டம் இயற்றி நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பின் அது எம் முன் கொண்டுவரப் பட்டிருக்க வேண்டும். அவ்வாறு நடைபெறவில்லை.

இந்நியமனம் குறித்து சாட்சியமளித்த வட மாகாண கௌரவ கல்வி அமைச்சர் தமது சாட்சியத்தில் "திரு.வரதன் அவர்களுக்குத்தான் நேர்முகப்பரீட்சையில் அதிக புள்ளிகள் கிடைத்து அதன்படி அவருக்கு வழங்கினோம்" என்றும் "அமைச்சர் வாரியத்திற்கு அனுப்பி முடிவெடுத்து செய்கின்றோம்" என முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் கூறியுள்ளார்.

எது எப்படி இருப்பினும் அமைச்சு செயலாளரின் சாட்சியமும் கௌரவ அமைச்சரின் சாட்சியமும் இந்நியமனம் அமைச்சரினது பணிப்புரையின் படியே செய்யப்பட்டது என்பதை நிரூபிக்கின்றன.

விசாரணைக்குழு முன் சாட்சியமளித்த முன்னாள் வட மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளரும் வட மாகாண சபை உறுப்பினருமான கௌரவ பசுபதி அரியரட்ணம் தமது சாட்சியத்தின்போது யூனியன் கல்லூரி 1AB தரத்தில் உள்ள பாடசாலை என்றும் இங்கு தரம் 1 அதிபர் வகுப்பில் உள்ளவர் அல்லது SLEAS அலுவலர் அதிபராக வரமுடியும் என்றும் 2016ம் ஆண்டு இப்பாடசாலைக்கு அதிபர் ஆக நியமிக்கப்பட்டவர் இத் தராதரத்தில் இல்லை என்றும் அவர் தரம் 2ஐச் சேர்ந்த அதிபர் என்றும் கற்கை விடுமுறையில் நின்றவேளை அவருக்கு இந்நியமனம் வழங்கப்பட்டதெனவும் கல்வித் துறையில் தமது 40வருடகால அனுபவத்தில் கற்கை விடுமுறையில் நின்ற ஒருவருக்கு நியமனம் வழங்கிய சம்பவம் ஒரு போதும் நடைபெறவில்லை என்றும் அவ்வாறு கற்கை விடுமுறையில் நின்ற ஒருவருக்கு அதிபர் பதவி வழங்கியமை தவறு என்றும் வரதனின் நியமனத்தை இடைநிறுத்துமாறு கௌரவ முதலமைச்சரே வட மாகாண சபையில் தீர்மானித்தும் கௌரவ அமைச்சர் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அமைச்சின் செயலாளர் இந்நியமனத்தை செய்யும் அதிகாரி என்றும் அமைச்சர் இத் தவறான நியமனம் குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் சாட்சியமளித்தார். மேலும் அவர் தமது சாட்சியத்தில் அமைச்சு செயலாளர் தமது சாட்சியத்தில் தரம் 1 அதிபர்களின் பற்றாக்குறை பற்றி கூறியது மறைக்கப்பட்ட உண்மை எனவும், தட்டுவன்கொட்டி அம்பிகை

வித்தியாலயத்தில் 1-5 வரையிலான வகுப்புகளே நடைபெறுவதாகவும் அதன் அதிபர் தெய்வேந்திரராஜா என்பவர் தரம் 1 அதிபராக இருக்கிறார் என்றும் மாற்றம் கோரிய வேளையிலும் அது அவருக்கு கொடுபடவில்லை என்றும் சாட்சியமளித்தார்.

கௌரவ கல்வி அமைச்சர் தமது சாட்சியத்தில் யூனியன் கல்லூரி தொடர்பில் முதலமைச்சர் தீர்மானம் எடுத்ததை ஏற்றுக் கொண்டுள்ளார். தட்டுவன்கொட்டி பாடசாலை அதிபர் தெய்வேந்திரராஜா தொடர்பில் தெரிவிக்கும் பொழுது அவர் விபத்தில் சிக்கியதால் அவரால் சரிவர தனது கடமைகளை செய்ய முடியவில்லை என சாட்சியமளித்தார். அவர் அவ்வாறு விபத்தில் சிக்கி தனது கடமைகளை சரிவர செய்யமுடியாத நிலையில் இருக்கிறார் என்பது எம் முன்னிலையில் உரிய சாட்சியங்கள் மூலம் நிருபிக்கப்படவில்லை. மேலும் கௌரவ அமைச்சர் தமது சாட்சியத்தில் 1AB பாடசாலைக்கு உரிய ஆட்கள் " இருக்கிறார்கள் அவர்கள் அந்த பாடசாலைக்கு போகவில்லை கோட்டக் கல்வி அலுவலகங்களில் attach பண்ணி இருக்கிறோம்" எனக் கூறியுள்ளார். இச் சாட்சியம் கௌரவ பசுபதி அரியரட்ணத்தின் சாட்சியத்தை உறுதிப்படுத்துகின்றது.

மேலும் வட மாகாண கௌரவ கல்வி அமைச்சர் தமது சாட்சியத்தின்போது கற்கை விடுமுறையில் நிற்கும் ஒருவர் அக்காலத்தில் வேறு பயிற்சி பெறக்கூடாது என்று மட்டுமே பிரமாணம் உள்ளது என்றும் பதவி உயர்வுகளுக்கு நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கக்கூடாது என்று எதுவும் இல்லை. இதனால் பதவி வழங்கியதாக கூறியிருந்தார். கௌரவ கல்வி அமைச்சரின் இந்நிலைப்பாட்டை இவ்விசாரணைக்குழு ஏற்க மறுக்கின்றது. ஏனெனில் விடுமுறையில் நிற்கும் ஒருவருக்கு பதவி வழங்கப்படுவது ஓர் தகுந்த நெறிமுறை இல்லை.

மேலும் கௌரவ பசுபதி அரியரட்ணம் தமது சாட்சியத்தில் வட மாகாண கல்வி அமைச்சர் கிளிநொச்சியில் கல்வி பணிப்பாளராக கடமையாற்றிய வேளையில் வரதனை அவரது வீட்டுக்கு மிக அருகில் உள்ள முருகானந்தா பாடசாலைக்கு அதிபராக நியமித்தார் என்றும் அவர்கள் மிக நெருங்கிய குடும்ப நண்பர்கள் என்றும் சாட்சியமளித்திருந்தார். இந்த சாட்சியம் கௌரவ அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டபோதும் அவர் அதை மறுத்து எதுவும் கூறவில்லை.

இச் சாட்சியங்களின் அடிப்படையில் தில்லையம்பலம் வரதன் என்பவர் தரம் 2 அதிபர் என்பதும் இவர் தரம் 2 அதிபராக இருந்த வேளையில் 1 AB பாடசாலையான யூனியன் கல்லூரிக்கு அதிபராக வட மாகாண கல்வி அமைச்சரது பணிப்புரைக்கமைய நியமிக்கப்பட்டார் என்பதும் அவ்வாறு நியமிக்கப்பட்ட வேளையில் அவர் கற்கை விடுமுறையில் நின்றார் என்பதும்

நிருபணமாகின்றது. ஆயினும் பாராளுமன்ற உறுப்பினரின் செல்வாக்கு குறித்து எதுவித சாட்சியமும் எம் முன் வைக்கப்படவில்லை, அத்துடன் அமைச்சின் செயலாளர் இந்நியமனத்தை சுதந்திரமாக செய்ய வேண்டிய அதிகாரியாக இருந்த போதிலும் கௌரவ அமைச்சரே அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்ததாக தெரியவந்துள்ளது.

எனவே 2ம் குற்றச்சாட்டில் பாராளுமன்ற அங்கத்தவரின் செல்வாக்கு என்பது நீக்கப்படுவதற்கமைவாக அமைவாக வட மாகாண கௌரவ கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சருக்கு எதிராக மேற்படி குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு இவ்விசாரணைக்குழு வருகின்றது.

## 3.4. குறித்த அதிபரின் நியமனத்தை உடன் நிறுத்துமாறு மாகாணசபையில் கௌரவ முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாகாண சபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும் அதனை செயற்படுத்துவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்காது இருக்க செயலாளரை தடுத்தமை.

மேற்படி குற்றச்சாட்டு குறித்து வட மாகாண கௌரவ கல்வி அமைச்சர் தமது சாட்சியத்தின்போது மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது தமக்கு ஞாபகமில்லை எனக் கூறிய வேளையிலும் வேறொரு கேள்விக்கு பதில் அளிக்கும் வேளையில் வட மாகாண கௌரவ கல்வி அமைச்சர் அத்தீர்மானம் யூனியன் கல்லூரி தொடர்பானது எனக் கூறியுள்ளார். எனவே இப்பதிலிருந்து இத் தீர்மானம் குறித்து கௌரவ அமைச்சர் அறிந்திருந்தார் என்ற முடிவுக்கு விசாரணைக்குழு வருகின்றது.

எனினும் பதவி இடைநிறுத்தம் என்பது அமைச்சு செயலாளரின் அதிகாரத்திற்குட்பட்ட விடயம். இதில் மாகாணசபையோ கௌரவ முதலமைச்சரோ முடிவு எடுக்கவோ அல்லது அம்முடிவினை செயற்படுத்துமாறு அமைச்சு செயலாளரை கேட்கவோ சட்டத்தில் இடமில்லை. இதன் காரணமாக இக் குற்றச்சாட்டிற்கு வடமாகாண கௌரவ கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் பொறுப்பு இல்லை என்ற முடிவுக்கு விசாரணைக்குழு வருகின்றது.

**3.5. அ. 2015ம் ஆண்டளவில் கிளிநொச்சி பாரதிபுரம் அதிபர் அப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவி ஒருவரிடம் தகாத முறையில் நடக்க முற்பட்டமை தொடர்பாக வட மாகாணசபை உறுப்பினர் கௌரவ அனந்தி சசிதரன், கௌரவ கல்வி அமைச்சருக்கு முறைப்பாடு செய்திருந்த போதும் அவ் அதிகாரிகளுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமை**

வட மாகாணசபை உறுப்பினர் கௌரவ அனந்தி சசிதரனால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டான 2015ம் ஆண்டளவில் பாரதிபுரம் பாடசாலை அதிபர் அப்பாடசாலை மாணவி ஒருவரிடம் தகாத முறையில் நடக்க முற்பட்டமை தொடர்பில் எதுவித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்காமை. இச்சம்பவம் குறித்து வட மாகாணசபை உறுப்பினர் கௌரவ அனந்தி சசிதரன், வட மாகாண கௌரவ கல்வி அமைச்சருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இக் குற்றச்சாட்டு தொடர்பில் கௌரவ கல்வி அமைச்சர் தனது சாட்சியத்தில் இச்சம்பவத்தை தொடர்ந்து குறித்த அதிபர் 1AB பாடசாலையில் இருந்து சிறிய பாடசாலைக்கு மாற்றப்பட்டார் என்றும் வலயக் கல்விப் பணிப்பாளரினால் இச்சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் குறித்த அதிபரின் பெயர் கணேசன் என்றும் கூறியிருந்தார். இவ்விடயம் குறித்து ஏன் பொலிஸாருக்கு முறைப்பாடு கொடுக்கப்படவில்லை என கேட்கப்பட்டபோது கௌரவ அமைச்சர் அதற்கு "நீங்கள் அதனை செயலாளரிடம் தான் கேட்கவேண்டும் எனக்கு அதுபற்றி தெரியாது" எனப் பொறுப்பற்ற வகையில் கூறியுள்ளார். இவ்விடயத்தில் கௌரவ அமைச்சர் நடவடிக்கை எடுக்கத் தவறியமை பற்றி அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்ட வேளையில் "நீங்கள் தான் குறிப்பிடுகின்றீர்கள் சம்பந்தப்பட்ட மாணவியிடம் இருந்து எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை" எனக் கூறியுள்ளார்.

சம்பந்தப்பட்ட மாணவியிடம் இருந்து முறைப்பாடு கிடைக்கவில்லை என்ற நிலைப்பாட்டை கௌரவ அமைச்சர் எடுத்த வேளையிலும் குறித்த அதிபருக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டு அவர் 1AB பாடசாலையில் இருந்து தரம் இறக்கப்பட்டுள்ளார் என்ற அமைச்சரின் கூற்று இச்சம்பவத்தை நிருபிக்கின்றது.

இவ்வாறு அவ் அதிபருக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டது, அவர் தரம் இறக்கப்பட்டார் என்பவற்றிற்கு எதுவித ஆதாரமும் எம் முன் வைக்கப்படவில்லை. எனினும் கௌரவ அமைச்சரின் பதிலில் இருந்து குறித்த சம்பவம் உண்மை என்பதும் இது குறித்து அமைச்சர் அறிந்திருந்தார் என்பது நிருபணமாகின்றது.

மேலும் கௌரவ அமைச்சரிடம் குறித்த அதிபருடன் என்ன தொடர்பு எனக் கேட்கப்பட்ட வேளையில் தாம் கல்விப் பணிப்பாளராக இருந்த வேளையில் இவ்வதிபர் சேவைக்கால ஆலோசகராக இருந்தார் என்றும் அவ்வதிபர் தன்னுடைய நண்பனில்லை என்றும் கூறியிருந்தார்.

எனினும் இச்சம்பவத்தை நன்கு அறிந்திருந்தும் குறித்த அதிபருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளரை அல்லது செயலாளரை கேட்க அமைச்சர் தவறியுள்ளார்.

கல்வித்துறையையே தலை குனிய வைக்கும் இச் செயல் இங்கு கௌரவ கல்வி அமைச்சர் உட்பட கல்வி அதிகாரிகளால் மூடிமறைக்கப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். இது ஓர் தவறான செயலாகும். குறித்த அதிபர் மாணவியின் மீது புரிந்த பாலியல் வன்முறை நடவடிக்கையானது ஓர் குற்றவியல் நடவடிக்கையாக அமைகின்றது.

இச்சம்பவத்தை மூடி மறைப்பதில் கௌரவ அமைச்சருக்கு பங்கு இருந்துள்ளது என்பது நிரூபணமாகின்றது. எனவே இது ஓர் அதிகார துஷ்பிரயோகம் என்ற முடிவுக்கு இவ்விசாரணைக்குழு வருகின்றது.

**3.5. ஆ. குறித்த அதிபர் பாடசாலை மாணவியுடன் தகாத முறையில் நடந்துகொள்ள முயன்ற விடயத்தை பாடசாலை வகுப்பாசிரியர் வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.முருகவேளுக்கு கடிதம் மூலம் முறைப்பாடு செய்தார். அதற்காக அவ் ஆசிரியர் பழிவாங்கப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.முருகவேளால் இடமாற்றம் செய்யப்பட்டமை.**

இவ்விடயம் குறித்து எதுவித நேரடி சாட்சியமும் எம்முன் வைக்கப்படவில்லை. எனினும் கௌரவ கல்வியமைச்சரிடம் இது குறித்து கேட்கப்பட்ட வேளையில் குறித்த ஆசிரியர் இடமாற்றம் தமது விருப்பப்படி பெற்றுச் சென்றதாகவும் இம்முறைப்பாடு தமக்கு வரவில்லை என்றும் வந்திருந்தால் நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும் கூறியிருந்தார். சம்பந்தப்பட்ட ஆசிரியையின் சாட்சியம் எம் முன் நெறிப்படுத்தப்படாமையினால் இக்குற்றச்சாட்டை விசாரணைக்குழு நிராகரிக்கின்றது. அதேவேளையில் இக்குற்றச்சாட்டு தொடர்பில் முறையான விசாரணை ஒன்றை நடத்துமாறு கல்வியதிகாரிகளை பணிக்குமாறு கௌரவ முதலமைச்சரை இவ்விசாரணைக்குழு கேட்டுக்கொள்கின்றது.

**3.5. இ. குறித்த ஆசிரியரின் கடித மூலமான முறைப்பாட்டை விசாரிக்கச் சென்ற வலயக் கல்விப் பணிப்பாளர் அவ் ஆசிரியரை ஏனைய ஆசிரியர்கள் முன்னிலையில் கொச்சைப்படுத்தியமை தொடர்பாக கௌரவ அனந்தி சசிதரன், கௌரவ கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவந்தும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்காமை.**

இது தொடர்பில் எம்முன் செய்யப்பட்ட முறைப்பாட்டில் குறித்த கல்விப் பணிப்பாளர் விசாரணைக்கு என்று சென்ற வேளையில் குறித்த முறைப்பாட்டை செய்த வகுப்பாசிரியையிடமிருந்து தமக்கு ஒரு காதல் கடிதம் வந்துள்ளதென பகிரங்கமாக கூறினார் என்பதாகும்.

இதிலிருந்து கௌரவ கல்வி அமைச்சரிடம் விசாரணைக்குழு விசாரித்த வேளையில் தமக்கு எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்றும் இல்லை என்றும் கௌரவ அனந்தி சசிதரன் சொன்னது தமக்கு தெரியாது எனவும் கூறியிருந்தார்.

இங்கு சம்பந்தப்பட்ட ஆசிரியையின் சாட்சியம் எம்முன் நெறிப்படுத்தப்படாமையினால் இக்குற்றச்சாட்டை இவ்விசாரணைக்குழு நிராகரிக்கின்றது.

அதே வேளையில் ஆசிரியையினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பாரிய தன்மை காரணமாக வலயக் கல்விப் பணிப்பாளரின் இந் நடத்தை குறித்து ஓர் முறையான விசாரணை நடத்துமாறு கல்வி அதிகாரிகளை பணிக்குமாறு கௌரவ முதலமைச்சரை இவ்விசாரணைக்குழு கேட்டுக்கொள்கின்றது.

மேலும் கிளிநொச்சி பாரதிபுரம் பாடசாலையில் 2015ம் ஆண்டளவில் மாணவி ஒருவருடன் அப்போதைய அதிபர் தகாத முறையில் நடக்க முற்பட்டமை தொடர்பிலும் இவ்விடயத்தை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு தெரியப்படுத்திய ஆசிரியை இடமாற்றம் செய்யப்பட்டமை குறித்தும் குறித்த ஆசிரியை இம்முறைப்பாட்டை செய்தமையால் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகிய முருகவேளினால் ஏளனம் செய்யப்பட்டமை தொடர்பிலும் குற்றவியல் நடவடிக்கை சட்டத்திற்கு அமைய விசாரணை நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை அவர்களுக்கு எதிராக எடுக்கப்படவேண்டும் எனவும் இவ்விசாரணைக்குழு கேட்டுக்கொள்கின்றது.

## 3.6. கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்திலும், கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் பாடசாலையிலும் தனக்கேற்றவர்களை அதிபராக நியமனம் செய்ய கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்தமை.

இவ்விடயம் குறித்து கௌரவ கல்வி அமைச்சர் தமது சாட்சியத்தில் கல்வி அமைச்சில் விண்ணப்பம் கோரி நேர்முக தேர்வு நடாத்தித் தான் நியமனம் செய்தார்கள் என்றும் தாம் அதற்கு எதுவித அழுத்தமும் கொடுக்கவில்லை என்றும் கூறியிருந்தார். வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தமது சாட்சியத்தில் 2015ம் ஆண்டு கிட்டத்தட்ட 80 அதிபர்களுக்கு தரம் 1 பதவியுயர்வு மத்திய கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டது. அதில் வெற்றிடமாக இருந்த பாடசாலைகளுக்கு விண்ணப்பம்கோரி நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டதாகவும் அப்போது கிளி/ புனித திரேசா பெண்கள் பாடசாலையில் இருந்த அதிபர் வேறு பாடசாலைக்கு தெரிவு செய்யப்பட்டதால் கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரிக்கு அதிபர் வெற்றிடம் ஏற்பட்டது. அதற்கு வலிகாமம் கல்வி வலயத்தில் சங்கானை பிரதேசத்திற்கு கோட்டக் கல்வி அதிகாரியாக இருந்த வகுப்பு I அதிபரை அந்த பாடசாலைக்கு நியமிக்குமாறு கல்வி அமைச்சர் கூறியிருந்தார் என்றும் இந்நியமனம் கல்வி அமைச்சரின் சிபார்சிலேயே செய்யப்பட்டது என்றும் கூறியிருந்தார்.

இச்சாட்சியம் கிளி/ புனித திரேசா பெண்கள் பாடசாலை தொடர்பில் கௌரவ அமைச்சர் மீது கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டை நிரூபிக்கின்றது. அங்கு கௌரவ கல்வி அமைச்சரின் அழுத்தம் காரணமாகவே அந்த நியமனம் நடைபெற்றது என்ற முடிவுக்கு இவ் விசாரணைக்குழு வருகின்றது.

கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயம் தொடர்பில் எதுவித சாட்சியமும் எம் முன் வைக்கப்படாத நிலையில் கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயம் தொடர்பான குற்றச்சாட்டு நிராகரிக்கப்படுகின்றது.

## 3.7. வட மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் ஆசிரியர் மாநாடு என்ற பெயரில் பெருமளவில் நிதி செலவழித்து வீண்விரயம் செய்தமை.

இக்குற்றச்சாட்டு தொடர்பில் சாட்சியமளித்த வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.இ.இரவீந்திரன் தமது சாட்சியத்தில் ஆசிரியர் மகாநாடு 12வலயங்களில் நடாத்தப்பட்டது என்றும் 2015ம் ஆண்டு PSDG நிதியில் 80 மில்லியன் ஒதுக்கி ஆசிரியர் மகாநாட்டையும் அதிபர் மகாநாட்டையும் கட்டாயம் நடாத்தும்படி கூறப்பட்டதாகவும் தாங்கள் 80மில்லியனையும் இதற்கு பயன்படுத்த முடியாது எனக் கூறி 40மில்லியனை இத் தேவைக்கும் மிகுதி 40மில்லியனை

ஆசிரியர்களுக்கான தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு வழங்கியதாகவும் அதன்படி 40மில்லியனில் 24 மில்லியனை 2மில்லியன்படி 12வலயத்திற்கும் மிகுதி 16மில்லியனை அதிபர் மகாநாட்டுக்கும் ஒதுக்கி வழங்கியதாகவும் ஒவ்வொரு வலயமும் தமக்கு வழங்கிய நிதிக்கேற்றவாறு ஒதுக்கி செலவு செய்தார்கள் என்றும் கூறியிருந்தார். மேலும் அவர் தமது சாட்சியத்தில் தாங்கள் ஒவ்வொரு வலயத்திற்கும் நிதியை கொடுத்து அவர்களே விழாவிற்கான திட்டங்களை மேற்கொண்டு செய்தார்கள் என்றும் அவர்களது நோக்கம் எல்லா ஆசிரியர்களும் ஒன்று கூடி தங்களது திறமைகளை வெளிப்படுத்துவது என்றும் அவர்களுக்கான பாடவிதானங்களுடன் தொடர்பான சுற்றறிக்கைகளுடனான ஆய்வுகள் ஆக்கங்கள் பற்றிய நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் கூறியிருந்தார்.

இவரது சாட்சியத்தில் இருந்து ஆசிரியர் மாநாட்டுக்கென வழங்கப்பட்ட 80மில்லியன் 40மில்லியனாக வடமாகாண கல்வி அமைச்சினால் குறைக்கப்பட்டது என்பது தெரியவருகின்றது. மேலும் ஆசிரியர் மகாநாட்டுக்கென இந் நிதி வழங்கப்பட்ட போதிலும் ஒவ்வொரு வலயத்திற்கும் நிதியை வழங்கிய பின் அவர்களே விழாவிற்கான திட்டங்களை மேற்கொண்டு செய்தார்கள் என்றும் கூறியிருந்தார்.

இவ்விடயம் தொடர்பில் சாட்சியமளித்த வடமாகாண கௌரவ கல்வி அமைச்சர் தமது சாட்சியத்தில் இந்த ஆசிரியர்கள் அதிபர்கள் மகாநாட்டிற்கென Finance Commission இனால் ரூபா 40 மில்லியன் வழங்கப்பட்டதாகவும் தம்மால் இந்த மகாநாடு நடாத்தப்படவில்லை என்றும் ஒவ்வொரு வலயமும் guideline இன் படி அதில் சொல்லப்பட்ட விடயங்களை நடாத்தினார்கள் என்றும் அவர்களின் ஆக்கங்களைக் கொண்டு சஞ்சிகைகள் வெளியிட்டார்கள் என்றும் ஆசிரியர்களுக்கு உள்ள சந்தேகங்கள் தொடர்பாக ஆய்வுகள் நடாத்தினர்கள் என்றும் கல்வியியலாளர்களைக் கொண்டு விரிவுரை நடாத்தினார்கள் என்றும் ஒவ்வொரு வலயத்திலும் 2 நாட்கள் இது நடைபெற்றது எனவும் கல்விக் கண்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது என்றும் ஆசிரியர்களின் ஆற்றலை வெளிப்படுத்துகின்ற நிகழ்வுகள் தான் நடைபெற்றது என்றும் இது எவ்வாறு நடாத்த வேண்டும் என Finance Commission ஒரு பிரமாணத்தினை அனுப்பி இருக்கின்றது. அதில் இருந்து விலகிச் செல்ல முடியாது என்றும் அந்த வகையில் தான் செயற்படுவதாகவும் இதன் மூலம் ஆசிரியர்கள் மத்தியில் எவ்வாறு வகுப்பறையில் கற்பிக்க வேண்டும் என்பது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது எனவும் கூறியிருந்தார். மேலும் கௌரவ அமைச்சர் தமது சாட்சியத்தில் குறித்த மகாநாட்டில் என்ன நடைபெற்றது என்பதை தாம் பார்க்கவில்லை என்றும் செயலாளர்கள் மாகாண கல்விப் பணிப்பாளர்கள் வலயங்களில்

தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை பார்ப்பார்கள் என்றும் 12 வலயங்களில் பதினையாயிரம் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் என்றும் கூறியிருந்தார்.

மேலும் கௌரவ அமைச்சரிடம் ஆசிரியர்களின் திறன் விருத்திக்காக வழங்கப்பட்ட அந்த நிதியை ஒரு நாளில் செலவு செய்யாமல் அவர்களின் கல்வி கற்பிப்பதற்கான அறிவை வளர்ப்பதற்கு பயன்படுத்தலாம் எனக் கூறப்பட்ட போது அந்த நிதி இதற்காகவே தான் வழங்கப்பட்டது எனக் கூறியிருந்தார்.

வட மாகாணக் கல்வி அமைச்சு செயலாளரின் சாட்சியத்தையும் வட மாகாணக் கௌரவ கல்வி அமைச்சரின் சாட்சியத்தையும் ஒப்பிட்டு நோக்கும் இடத்து வட மாகாணக் கௌரவ கல்வி அமைச்சரின் பொறுப்பற்ற செயற்பாடு மிகத் தெளிவாக வெளிப்படுகின்றது. கல்வி அமைச்சின் செயலாளர் 80 மில்லியன் வழங்கப்பட்டு பின் அது தங்களால் 40 மில்லியனாக குறைக்கப்பட்டது. எனக் கூறிய வேளையில் கௌரவ அமைச்சர் 40 மில்லியன் மட்டுமே தரப்பட்டதாக கூறியுள்ளார். இந்நிதி Finnace Commission guideline படியே செலவு செய்யப்பட்டது என்றும் Finance Commission அனுப்பி பிரமாணத்தை மீற முடியாது என்றும் தெரிவித்துள்ள அதே வேளையில் அமைச்சின் செயலாளர் வழங்கப்பட்ட 80 மில்லியன் நிதியில் 40 மில்லியன் வேறு தேவைக்கு பாவிக்கப்பட்டதாக கூறியுள்ளார். சம்பந்தப்பட்ட கௌரவ அமைச்சர் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே கையளிக்கபபட்டிருந்த போதிலும் அவர் தமது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் எதனையும் விசாரணைக்குழு முன் சமர்ப்பிக்கவில்லை. அவ்வாறு செய்யுமாறு தமது அமைச்சின் செயலாளரையும் பணிக்கவில்லை. Finnace Commission இன் guideline குறித்து அவற்றை சமர்ப்பிக்காது சாட்சிமளித்துள்ளார். மேலும் ஆசிரியர் மகாநாட்டின் போது சஞ்சிகைகள் வெளியிடப்பட்டதாக கூறிய போதிலும் அவை விசாரணைக்குழுமுன் சமர்ப்பிக்கப்படவில்லை.

கல்வி வளர்ச்சிக்கென ஆசிரியர், அதிபர் மகாநாடு நடத்த finance Commission இனால் தரப்பட்ட ரூபா 80 மில்லியன் அமைச்சரின் அறிவுக்கு அப்பாற்பட்ட வகையில் ரூபா 40 மில்லியனாக செயலாளரினால் குறைக்கப்பட்டு அத்தொகையும் 2 நாட்களில் செலவு செய்யப்பட்டுவிட்டது. இரண்டு நாட்களில் ரூபா 40 மில்லியனை செலவு செய்த இச்செயற்பாடு வட மாகாண கல்வி வளர்ச்சிக்கு எவ்வாறு உதவியது என்பது பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது. அத்துடன் மிகுதி ரூபா 40 மில்லியனுக்கு ஆசிரியர்களுக்குத் தேவையான தளபாடங்கள் பெறப்பட்டதாக அமைச்சு செயலாளர் கூறியுள்ளார். அத் தளபாடங்கள் பற்றிய விபரம் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படவில்லை. இன்றும் கூட எமது பாடசாலைகளில்

சுகாதாரத்திற்கு ஊறுவிளைவிக்கக்கூடிய கரும்பலகையும் வெண்கட்டிகளும் பாவிக்கப்படுகின்றன. இந்நிலையில் Finance Commission இனால் வழுங்கப்பட்ட ரூபா. 80 மில்லியனில், 40 மில்லியன் 2 நாட்களில் செலவு செய்யப்பட மிகுதி ரூபா. 40 மில்லியனுக்கு தகுந்த விளக்கம் எமக்கு தரப்படவில்லை. இந்த ரூபா. 40 மில்லியனும் 12 கல்வி வலயங்களில் 2 நாட்களில் செலவு செய்யப்பட்டதன் மூலம் வடமாகாணக் கல்வி வளர்ச்சியில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டதா என்ற விடயம் திரனாய்விற்கு உட்படுத்த வேண்டியது ஒன்றாகும். இந்த நிதி ரூபா. 80 மில்லியனையும் உபயோகித்து ஆசிரியர்கள், அதிபர்களின் செயற்றிறனை அதிகரிக்கும் கொள்கை ரீதியாக திட்டமிட்டு செயற்பட்டிருக்க முடியும். அவ்வாறான திட்டம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஆசிரியர்களுக்கு அவர்கள் கற்பிக்கும் பாடத்திலுள்ள அறிவு, அதனைக் கற்பிக்கும் முறை பற்றிய அறிவு என்பன தொடர்ச்சியாக வளர்ச்சியடைய வேண்டும் என்பதில் இரண்டாவது கருத்திற்கு இடமில்லை. எனவே இந்நிதியைக் கொண்டு ஆசிரியர்களுக்கு அவர்கள் கற்பிக்கும் பாடத்திலான அறிவு, அதனைப் போதிக்கும் ஆற்றல் என்பவற்றை வளர்க்கக்கூடிய பயிற்சிகளை அத்துறையில் அறிவும் அனுபவமும் உடையவர்கள் மூலமாக வழங்கி கல்வித்துறையை மேம்படுத்த இந்நிதியை திட்டமிட்டு பயன்படுத்தியிருக்க முடியும்.

வடமாகாண மாணவர்களுக்கு ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்கக்கூடிய ஒரே வளமாக அமைவது கல்வியே ஆகும். வட மாகாணம் ஒருகாலத்தில் கல்வியில் மிக முன்னேறிய நிலையில் இருந்தது. இக் கல்விவளம் யுத்த காலத்தில் தொடர்ச்சியாக சீரழிக்கப்பட்டு பூச்சியம் என்ற நிலைக்கு வந்தது. ஆயினும் தற்போது அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரது அயராத உழைப்பினால் இம்மாகாணத்தில் கல்வி மீண்டும் வளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் 2015 ஆம் ஆண்டு Finance Commission இனால் வழங்கப்பட்ட ரூபா. 80 மில்லியனும் உரிய வகையில் தகுந்த கொள்கை அடிப்படையில் மாணவர்கள் பயனடையக்கூடிய வகையில் திட்டமிடப்பட்டு ஆசிரியர்களினதும், அதிபரகளினதும் தகுதியை உயர்த்துவதற்குரிய மேற்படிப்புகள், பயிற்சிகள் போன்றவற்றிற்கும் கற்பிக்கும் ஆற்றலை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டிருப்பின் அது மிகவும் வரவேற்கத்தக்கதாக அமைந்திருக்கும். இதற்குப் பதிலாக இப்பணத்தில் ரூபா. 40 மில்லியன் 2 நாட்களில் செலவு செய்யப்பட்டதும் மிகுதி 40 மில்லியன் ஆசிரியர்களின் தளபாட கொள்வனவுக்குப் பயன்படுத்தியதாக கூறப்பட்டமையும் மிகவும் கவலைக்குரிய வகையில் இப்பணம் வீண் விரயம் செய்யப்பட்டதை நிரூபிக்கின்றது.

எனவே வடமாகாண கௌரவ கல்வி அமைச்சருக்கு எதிரான இக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு இவ் விசாரணைக்குழு வருகின்றது. மேலும் இத்தொகை

ரூபா 80 மில்லியனும் எவ்வாறு செலவு செய்யப்பட்டது என்பது குறித்து பூரண கணக்காய்வு செய்யப்பட்டு தவறு இழைத்ததாக காணப்படுபவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இவ் விசாரணைக்குழு பரிந்துரைக்கின்றது.

வடமாகாணத்தில் வாழும் மக்களுக்கு வழிகாட்டும் பொறுப்பை தம் கரங்களில் ஏந்தியுள்ளவர்கள் கொள்கைகள், திட்டங்கள் எனபவற்றை வகுக்கும் வேளையில் இம்மக்கள் கடந்த காலத்தில் அனுபவித்த துன்ப துயரங்கள் கடந்து வந்த பாதை என்பவற்றை ஒரு தடவையாவது திரும்பிப் பார்க்க வேண்டும் என்றே இவ் விசாரணைக்குழு கருதுகின்றது.

### 3.8 மாகாணப் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முன்னாள் ஜனாதிபதி வருகைக்காக ஆறு தேசியப் பாடசாலைகளை அலங்கரிப்பதற்கு பெருந்தொகைப் பணத்தை செலவழித்தமை.

மேற்படி குற்றச்சாட்டு தொடர்பில் பதிலளித்த வடமாகாண கௌரவ கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் தமது அமைச்சின் செயலாளருக்கு கௌரவ ஆளுநர் கூறியே இவ்விடயம் நடைபெற்றதாக கூறியிருந்தார்.

இவ்விடயம் தொடர்பில் கொள்கை அடிப்படையிலான முடிவு எதுவும் வடமாகாண கல்வி அமைச்சரால் எடுக்கப்படாத நிலையில் கௌரவ ஆளுநரினால் கையளிக்கப்பட்ட அதிகாரங்களை செயற்படுத்தும் செயலாளர் கௌரவ ஆளுநரின் கோரிக்கைப்படி செயற்பட்டமைக்கு கௌரவ அமைச்சர் பொறுப்புக் கூற வேண்டியதில்லை என இவ் விசாரணைக்குழு கருதுகின்றது.

### 3.9. கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. முருகவேளின் சேவைக்காலம் முடிவுற உள்ள நிலையில் வேறு பொருத்தமான பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கையும் இதுவரை எடுக்காமல் ஒப்பந்த அடிப்படையில் அவரது சேவையை தொடருவதற்கு முயற்சிக்கிறமை

வட மாகாண கௌரவ கல்வி அமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட மேற்படி குற்றச்சாட்டு குறித்து சாட்சியமளித்த கௌரவ அமைச்சர் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோருவதில்லை என்றும் சேவை மூப்பு அடிப்படையில் நியமனம் செய்வது என்றும் தற்போது தென்மராட்சி கல்விப் பணிப்பாளரை பதிற்கடமைக்கு நியமித்துள்ளோம் என்றும் பதில் அளித்தார். இது தவறான நிலைப்பாடாகும். இந்நியமனங்களில் தலையிட கௌரவ

அமைச்சருக்கு எதுவித அதிகாரமும் கிடையாது. அரசியல் யாப்பின் பிரகாரம் கௌரவ மாகாண ஆளுநருக்கே இவ்வதிகாரம் உண்டு. அவர் யாருக்கு அவ்வதிகாரத்தை கையளித்துள்ளாரோ அவரே அரசியல் தலையீடு எதுவும் இன்றி அக்கடமையை செய்ய வேண்டும்.

எனவே அமைச்சின் செயலாளர் அல்லது வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு இவர்களில் யாருக்கு இவ்வதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளதோ அவர்கள் இந் நியமனத்தை பொறுப்பேற்று அரசியல் தலையீடு எதுவுமின்றி தகுதி உடையவரை இப்பதவிக்கு உடன் நியமிக்க வேண்டும் எனவும் வட மாகாண கௌரவ கல்வி அமைச்சர் இந் நியமனத்தில் தலையிடக் கூடாதெனவும் இவ்விசாரணைக்குழு பணிக்கின்றது. மேலும் இக் குற்றச்சாட்டானது எதிர்காலத்தில் நிகழவிருக்கும் ஒரு விடயம் தொடர்பானதாகையால் இக் குற்றச்சாட்டை விசாரணைக்குழு நிராகரிக்கின்றது.

4. விவசாய, கமநலசேவை கால்நடை அபிவிருத்தி, நீர் வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசன் அவர்களுக்கு எதிரான முறைப்பாடுகள்

வட மாகாணசபையின் விவசாய, கமநல சேவை கால்நடை அபிவிருத்தி, நீர் வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசனிற்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் 2017.02.24 திகதி யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் அமைந்துள்ள வட மாகாண சபை மகாநாட்டு மண்டபத்தில் இந்த விசாரணைக்குழுவினால் விசாரணை நடாத்தப்பட்டது.

மேற்படி கௌரவ அமைச்சருக்கு எதிராகப் பின்வருபவர்களினால் எழுத்து மூலமான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

1. வட மாகாண சபை உறுப்பினர் கௌரவ.ஜி.ரி லிங்கநாதன் (03.11.2016, 10.11.2016 திகதிய முறைப்பாட்டுக் கடிதங்கள்)
2. வட மாகாணசபை உறுப்பினர் கௌரவ.க.சர்வேஸ்வரன் அவர்களது திகதியிடப்படாத முறைப்பாட்டுக் கடிதம்.
3. வட மாகாணசபை உறுப்பினர் கௌரவ.அனந்தி சசிதரன் (05.12.2016 திகதியிடப்பட்ட முறைப்பாட்டு கடிதம்)
4. வட மாகாணசபை உறுப்பினர் கௌரவ.ச.சுகிர்தன் (05.12.2016திகதியிடப்பட்ட முறைப்பாட்டுக் கடிதம்)
5. கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவையின் முகாமைத்துவ பணிப்பாளர் திரு.A.தர்மகுலசிங்கம் (08.12.2016 திகதிய முறைப்பாட்டுக் கடிதம்)
6. இயக்குநர் சபை உறுப்பினர் தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம் திரு.மா.நாகேந்திரசீலன் (19.12.2016 திகதிய முறைப்பாட்டுக் கடிதம்)

இம் முறைப்பாடுகள் தொடர்பாக முறைப்பாடு செய்தவர்களையும், அவர்களால் முன்வைக்கப்பட்ட சாட்சியாளர்கள் அம் முறைப்பாடு விடயம் தொடர்பான, மாகாண அரச சேவையில் பணியாற்றிய உத்தியோகத்தர்களையும், இம் முறைப்பாடுகளின் உண்மைத் தன்மையை வெளிக்கொண்டுவருவதற்காக விசாரணைக் குழு, சாட்சியமளிக்க அழைப்பாணை அனுப்பியிருந்தது. அதனடிப்படையில் முறைப்பாட்டாளர்கள், மாகாண, மத்திய அரச சேவை உத்தியோகத்தர்கள், தனியார் சேவை பிரதிநிதிகள், விசாரணைக்குழுவின் முன் தோன்றி சாட்சியமளித்துள்ளனர்.

முறைப்பாட்டாளர்களது சாட்சி மற்றும், ஆவண சாட்சிகளின்படியும், அம் முறைப்பாடுகள் தொடர்பாக சாட்சியமளித்த சாட்சிகளின் சாட்சியங்கள், மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட, ஆவணங்கள் சான்றுகளினடிப்படையிலும், விவசாய, கமநலசேவை கால்நடை அபிவிருத்தி, நீர் வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசனுக்கு எதிராக வழக்கு தொடுநரால் பின்வரும் 10 குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

1. வவுனியா மாவட்டத்தில் மூங்கில், மல்லிகை வளர்ப்புத் திட்டங்கள், எள்ளு விநியோகித்து சுயதொழிலை முன்னெடுக்கவைக்கும் திட்டம் ஆகியவற்றை கைலஞ்சம் பெறும் நோக்கத்திற்காக நிராகரித்தமை.

2. கண்காட்சிகள், உழவர் விழா எனப் பல விழாக்களை பெருந்தொகைப் பணத்தை செலவழித்து நடாத்தியதன் மூலம் மாகாணசபையின் பெரும் அளவிலான நிதியை வீண்விரயம் செய்தமை.

3. மாகாண சபை உறுப்பினர்களினதும், மாகாண சபை ஆலோசனைக் குழுக்களினதும் ஆலோசனைகளைப் பெறாமல் திட்டங்கள் முன்னெடுத்தமை.

4. Beta Power (Pvt) Ltd. & Joule Power (Pvt) Ltd. நிறுவனங்களிடமிருந்து 2015ம் ஆண்டு முதல் வருடம் ஒன்றிற்கு ரூபா 20 மில்லியன் வீதம் 2016 வரை பெறப்பட்ட ரூபா 40 மில்லியன் பணத்தை மோசடி செய்தமை.

5. பாத்தீனியம் ஒழிப்பு நடவடிக்கை என்ற பெயரில் மாகாணநிதியை மோசடி செய்தமை.

6. i. Northern Power என்ற மின் உற்பத்தி நிலையம் சுன்னாகத்தில் தொழிற்பட்ட வேளையில் அதனது கழிவு எண்ணெய் குடிநீரில் கலந்த விடயத்திற்கு, ஆய்வுக்குழு ஒன்றை நியமித்து அக்குழுவின் அறிக்கை மூலம் நிறுவனத்திற்கு சாதகமாக அறிக்கையை வெளிப்படுத்தி உண்மைகளை மறைத்தமை.

ii. நிலத்தடிநீர் விடயம் தொடர்பில் எதுவித அதிகாரமும் அற்ற நிலையில் நிலத்தடி நீரில் எண்ணெய் கசிவு தொடர்பில் விசாரணைக்காக நிபுணர்குழுவை நியமித்து மாகாண சபையின் நிதியை வீண்விரயம் செய்தமை.

7. 2015 நவம்பர் மாதம் முன்னெடுக்கப்பட்ட 5லட்சம் மரநடுகைத் திட்டம் தொடர்பில் பண மோசடி செய்தமை

8. ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் இதுவரையில் நன்கு வெற்றி அளிக்கவில்லை என தெரிந்திருந்தும் தவறான செல்வாக்கை செலுத்தி நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து சாத்தியக்கூற்று அறிக்கையை பெற்று புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்தினை முன்னெடுத்து 32 மில்லியன் ரூபாவை வீண்விரயம் செய்தமை.

9. i. யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கத்திற்கு 2014 ஆண்டு மே மாதம் வரை தலைவராக இருந்த பெரியதம்பி இராசநாயகம் இரஞ்சன் என்பவரை நியாயமான காரணங்களின்றி கூட்டுறவு ஆணையாளருக்கு ஊடாக அதிகார துஷ்பிரயோக மூலம் பதவி நீக்கம் செய்தமை.

ii. 2015இல் யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கத்திற்கு தலைவராக முன் அனுபவமில்லாதவரும் அரச அதிபரால் முன் சிபாரசு செய்யப்படாதவருமான திரு.இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா என்பவரை குடும்ப நண்பர் என்ற அடிப்படையில் கூட்டுறவு ஆணையாளர் மூலம் தலைவராக நியமித்தமை தொடர்பில் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை.

10. மருதங்கேணி கடற்தொழில் சமாசத் தலைவரை நியாயமான காரணங்களின்றி கூட்டுறவு ஆணையாளர் மூலம் 2015 மார்கழி மாதம் அளவில் பதவிநீக்கம் செய்தமை மூலம் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை.

இக் குற்றச் சாட்டுகள் தொடர்பாக, விளக்கமளித்து சாட்சியமளிப்பதற்கு குற்றம் சாட்டப்பட்ட கௌரவ அமைச்சர் திரு.பொ.ஐங்கரநேசன் அவர்கள் 26.02.2017 காலை 9.30மணியளவில் நேரடியாக தோன்றி தன்மீது சுமத்தப்பட்ட ஒவ்வொரு குற்றச்சாட்டுகளையும் மறுத்ததோடு, அதற்கான தனது சார்பு விளக்கத்தையும் தெரிவித்தார். அச்சந்தர்ப்பத்தில் குற்றச்சாட்டுகளை முன் வைத்த திரு.ஜி.ரி.லிங்கநாதன், திரு.பிரேமதாஸ், திரு.ரஞ்சன் ஆகியோரும் சமூகமளித்து கௌரவ அமைச்சருக்கு எதிராக அவர்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக மேலதிக விளக்கங்களை பெறுவதற்கும் அதன் மூலம், விசாரணைக் குழுவுக்கு தெளிவை ஏற்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

வட மாகாணசபையின் விவசாய, கமநலசேவை கால்நடை அபிவிருத்தி, நீர் வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் கௌரவ

பொ.ஐங்கரநேசன் அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் விசாரணையின் பொழுது எண்பிக்கப்பட்டுள்ளனவா என ஆராய்வோம்.

## 4.1. வவுனியா மாவட்டத்தில் மூங்கில், மல்லிகை வளர்ப்புத் திட்டங்கள், எள்ளு விநியோகித்து சுயதொழிலை முன்னெடுக்கவைக்கும் திட்டம் ஆகியவற்றை கைலஞ்சம் பெறும் நோக்கத்திற்காக நிராகரித்தமை.

இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டங்களின் படி ஓர் விவசாயி தனது காணியில் வேறு சட்டங்களினால் தடை செய்யப்பட்ட பயிர்களைத் தவிர தான் விரும்பிய பயிரை பயிரிடும் உரிமை உண்டு. ஆனால் நீர்ப்பாசனச் சட்டத்தின்படி அரசினால், மாகாண சபையினால் பராமரிக்கப்பட்டு வரும் நீர்ப்பாசன நீர்த்தேக்கங்களிலிருந்து குறிப்பிட்ட பயிருக்கு நீர் பெற வேண்டுமெனின், குறிப்பிட்ட தகுதி வாய்ந்த அரச, மாகாண உத்தியோகத்தர்களிடமிருந்து அனுமதியை பெற வேண்டுமென்ற கட்டுப்பாடு உள்ளது.

வடமாகாண சபையை பொறுத்தவரையில் தரைக்கீழ் தரைமேல் உள்ள நீரை உபயோகித்தல், பயிர்செய்கைக்கு பாவித்தல் என்பதை கட்டுப்படுத்தும், ஒழுங்குபடுத்தும் நியதிச்சட்டங்கள் எதுவும் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரியவில்லை.

எனவே விவசாயி ஒருவர் தனது சட்டபூர்வ உரித்துடைய காணியில் மழை நீரையோ, நிலத்தடி நீரையோ உபயோகித்து தனது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக, உணவுக்காகவோ, வர்த்தக தேவைக்காக எந்தவித பயிர்களையோ மரப் பயிர்களையோ பயிரிடும் உரிமை அவர்களுக்கு உண்டு என விசாரணைக் குழு கருதுகின்றது.

மேற்படி கருதுகோளின் அடிப்படையில் மேற்படி குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்ட விடயங்களை தொடர்பாக விசாரணையின் பொழுது முன்வைக்கப்பட்ட விடயங்களையும் அவற்றிக்கு திணைக்கள உத்தியோகத்தர்களது விளக்க சாட்சியங்களையும் இறுதியில் கௌரவ அமைச்சர் அவர்களால் விசாரணைக்குழுவிற்கு அளிக்கப்பட்ட விளக்கங்களும் மேற்படி குற்றச்சாட்டுகள் விசாரணையின் பொழுது சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் எண்பிக்கப்பட்டுள்ளனவா என ஆராய்வோம்.

வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவில் இந்திய முதலீட்டாளர் ஒருவராகிய திரு ராம் என்பவர் மூங்கில் செய்கையில் விவசாயிகளை ஊக்குவிக்கும் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு முன்மொழிவு ஒன்றை முன்வைத்து பிரதேச செயலர் நெடுங்கேணி தலைமையில் கூட்டம் ஒன்றைக் கூட்டி திட்டத்தின் நன்மை தீமைகளை விளக்கப்படுத்தி

இருந்தார். இது வெளிநாட்டு முதலீடு ஆகிய காரணத்தினால் கௌரவ முதலமைச்சரின் அனுமதிக்கு விண்ணப்பித்து முதலமைச்சரால் அவ்விண்ணப்பம் விவசாய அமைச்சருக்கு முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் கௌரவ விவசாய அமைச்சர் அத்திட்டத்தை அனுமதிக்க மறுத்து விட்டார். முதலீட்டாளர் கௌரவ ஆளுநரிடம் அனுமதியைப் பெற்று திட்டத்தை அப்பிரதேசத்தில் அமுல் நடத்துகின்றார்.

கௌரவ விவசாய அமைச்சர் மூங்கில் வளர்ப்புத் திட்டத்தை அமுல்படுத்துவதை மறுத்ததோடு குறிப்பிட்ட முதலீட்டாளரை வேண்டிய ஆவணங்களுடன் வந்து தன்னை சந்திக்கும்படி கேட்டுள்ளார். தன்னை வந்து சந்திக்கும்படி கோரியமை கௌரவ விவசாய, கமநல சேவை கால்நடை அபிவிருத்தி, நீர் வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சரின் நடத்தை மீது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் இவ்விடயம் தொடர்பாக விசாரணைக்குழு முன் விளக்கமளித்த கௌரவ அமைச்சர் அவர்கள் மூங்கிலை எரித்து மின்சக்தியை கொண்டு மின்சாரம் பெறும் அதாவது அனல் மின்நிலையம் அமைப்பதை தான் சுற்றுசூழல் அமைச்சர் என்ற ரீதியில் அனுமதிக்க முடியாதென்றும் அவ்வாறெனின் காற்றாலை மின்சாரம்பெற மாகாணசபையுடன் ஒப்பந்தம் செய்தது போல ஒரு தொகைப்பணத்தை வருடாந்தம் CSR ற்கு அன்பளிப்பு தேவை எனவும் குறிப்பிட்டுள்ளமை அவரது சாட்சியின் போது அவரது கருத்தில் உள்ள இரட்டைத்தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

இவ் விடயத்தில் கௌரவ விவசாய, கமநலசேவை கால்நடை அபிவிருத்தி, நீர் வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் மாகாண சபையில் சுற்றுச் சூழல் அமைச்சர் என்ற சட்டபூர்வமற்ற நிலைப்பாட்டை வைத்துக் கொண்டு இவ்விடயங்களில் தலையிடுவதையும் இக்குழு கவனத்தில் எடுத்துள்ளது. சுற்றுச்சூழல் என்பது அரசியல்யாப்பின் 13வது திருத்தத்தின் கீழ் மத்திய அரசும், மாகாண சபைகளுக்குமிடையிலான ஒருமைப்பாட்டு (concurrence) விடயம் என்பதும் இதுவரை சுற்றுச்சூழல் விடயம் மத்திய அரசாலே நிருவகிக்கப்பட்டு வரும் விடயம் என்பதும் அச்செயற்பாட்டின் ஒரு பகுதியை மாகாண சபைகளுக்கு வழங்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் அல்லது அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றோ நிறைவேற்றப்படவில்லை என்பதையும் அதே நேரத்தில் இவ்விடயம் மாகாண ஆளுகைக்குள் வரவேண்டுமென்ற அடிப்படையில் வடமாகாண சபை நியதிச்சட்டம் ஒன்றை இதுவரை இயற்றி அனுமதி பெறப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே இந்நிலையில் கௌரவ விவசாய அமைச்சர்

தான் சுற்றுச்சூழல் அமைச்சராக வடமாகாணத்தில் செயற்பட்டு வருவதாக தெரிவிப்பதையும் இவ்விசாரணைக்குழு சட்டபூர்வமற்றதொன்று எனக் கருதுகின்றது.

இந்நிலையில் மூங்கில் நடுகைத் திட்டத்தை நிராகரித்தமை சட்டபூர்வமற்றதெனவும் முதலீட்டாளரை தன்னை வந்து சந்திக்கும்படி கேட்டுக்கொண்டதை அவர் நடத்தை மீது இது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக விசாரணைக்குழு கருதுகின்றது.

தனியார் காணியில் எப்பயிரையும் செய்வதற்கு ஆலோசனை பெறுவதற்கு வடமாகாண விவசாய அமைச்சரின் அல்லது விவசாயத் திணைக்களத்தில் அனுமதி அல்லது ஆலோசனை பெற வேண்டிய தேவை இல்லை என்ற கௌரவ அமைச்சரின் இறுதி விளக்கம் மேற்படி சந்தேகத்தை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

மல்லிகை செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் முதலீட்டாளர் கௌரவ விவசாய அமைச்சரை அணுகிய பொழுது சரியான நடைமுறையின் படி தன்னை அணுகாத காரணத்தினால் அதனை அமைச்சர் அங்கீகரிக்காததால் கௌரவ அமைச்சர் தனக்கு ஆரம்ப விழாவிற்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அவர் தான் அந்த நிகழ்விற்கு செல்லவில்லை என தெரிவித்துள்ளார். இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வட மாகாண சபையின் அனுமதி பெறவேண்டிய தேவை இல்லாத பொழுதும் கௌரவ அமைச்சர் அனுமதிக்காத காரணத்தினால் முதலீட்டாளர் வடமாகாண கௌரவ ஆளுநரின் அனுமதியைப் பெற்று திட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

அனுமதிப் பெறத் தேவையற்ற விடயங்களுக்கெல்லாம் அனுமதி பெற வேண்டுமென்று வலியுறுத்துவதும் தங்களது அமைச்சு, திணைக்களங்கள் தொடர்பான எல்லா விடயங்களும் விவசாய அமைச்சருக்கு தெரிய வேண்டுமென திணைக்கள மாவட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டு அதனை நடைமுறைப்படுத்த நினைப்பதும் முதலீட்டாளர்களையும் விவசாய ஆர்வலர்களையும் விவசாயத் துறையில் முதலீடு செய்வதற்கு போரினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளது வாழ்வாதாரத்தை உயர்த்த முனைபவர்களுக்கு ஒரு முட்டுக்கட்டையாக உள்ளதெனவும் இது கௌரவ அமைச்சரின் அதிகார துஷ்பிரயோகம் என இவ் விசாரணைக்குழு அபிப்பிராயப்படுகிறது.

எள்ளு விநியோகத் திட்டம் வவுனியா மாவட்டத்தின் அமெரிக்க நிறுவனம் ஒன்றின் உதவித் தட்டத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு பிரதேச தெரிவு, பயனாளிகள் தெரிவு மற்றும்

அறுவடைக்குப் பின்னரான சந்தைப்படுத்தல் நடைமுறைகள் பிரதேச செயலர், பிரதேச விவசாயப் போதானாசிரியர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஆகியோருடைய மேற்பார்வையில் ஒழுங்கு படுத்துப்பட்ட நிலையில் பிரதி விவசாயப் பணிப்பாளர் - வவுனியா கௌரவ விவசாய அமைச்சரின் ஒப்புதலை பெற வேண்டுமெனத் தெரிவித்த குற்றச்சாட்டை பிரதி விவசயாப் பணிப்பாளர் தனது சாட்சியத்தில் ஏற்றுக் கொண்டதுடன் மாவட்டத்தில் நடைபெறுவதை தனது கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் என்ற கௌரவ அமைச்சரின் பணிப்புரையின் அடிப்படையிலேயே தனது ஆலோசனையை தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

கௌரவ அமைச்சர் அவர்களும் அதை ஏற்றுக் கொண்டதுடன் எழுத்தில் தந்தால் அனுமதிக்கிறேன் என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளமை இக்குற்றச்சாட்டில் சுமத்தப்பட்டதற்கான காரணத்தை விசாரணைக்குழு தெளிவாக விளங்கிக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

## 4.2. கண்காட்சிகள், உழவர் விழா எனப் பல விழாக்களை பெருந்தொகைப் பணத்தை செலவழித்து நடாத்தியதன் மூலம் மாகாணசபையின் பெரும் அளவிலான நிதியை வீண்விரயம் செய்தல்

வடமாகாணம் கடந்த 30 வருட யுத்தத்தினால் பாதிப்படைந்த மாகாணம். மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாய, கடற்தொழில் கட்டுமானங்கள் அழிவடைந்துள்ளன. யுத்த முடிவிற்குப் பின்னர் மாகாண விவசாய அமைச்சு விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக விவசாய கால்நடைத் திணைக்களத்தின் மூலம் வருடந் தோறும் சிறந்த விவசாயிகள், நவீன தேவைக்கேற்ப தொழில்நுட்பத்தை பிரயோகித்து விவசாயம் செய்வோர், வீட்டுத் தோட்டங்கள், பாடசாலை மட்டத் தோட்டங்களை ஊக்குவிப்பதற்காக போட்டிகளை நடாத்தி அவர்களுக்கான பரிசுகளை வழங்கி அவர்களை கௌரவித்து வந்ததாக வடமாகாண விவசாயப் பணிப்பாளரது சாட்சியங்களிலிருந்து வெளியாகின்றது. இந் நிகழ்சிகள் மாவட்ட மட்டத்தில் ஆடம்பரமின்றி நடைபெற்று வந்துள்ளது.

ஆனால் 2016ம் ஆண்டிலிருந்து மாகாண ரீதியாக இந்நிகழ்வு விவசாய அமைச்சால், கௌரவ அமைச்சரினால் ஒழுங்குபடுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனைப்படியே இவ்விழா ஒழுங்கு செய்யப்பட்டதென்ற கௌரவ அமைச்சரின் விளக்கம் ஏற்றுக் கொள்ள முடியாததொன்றாகும். ஏனெனில் குழுவின் முன் சாட்சியமளித்த மாகாண விவசாயப் பணிப்பாளர் எல்லாம் அமைச்சினால் தான்

செய்யப்பட்டதாக தனது சாட்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை இவ்விசாரணைக்குழு கவனத்தில் எடுத்துள்ளது.

இவ்விழாவிற்கு தென் இந்திய திரைப்படக் கலைஞர் திரு வைரமுத்து அவர்களை அழைக்கும் எண்ணம் தனக்கிருக்கவில்லை எனவும் இது தனது திணைக்கள mandate இல் இல்லை எனவும் இதனை ஒழுங்கமைத்தது அமைச்சு தான் எனவும் மாகாண விவசாயப் பணிப்பாளர் தனது சாட்சியத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மக்களைக் கவருவதற்காக திரு வைரமுத்து அவர்கள் அழைக்கப்பட்டதாகும். அவருக்கான செலவு ரூபா 28,000 மாத்திரமே எனவும் கௌரவ அமைச்சர் தனது விளக்கத்தில் தெரிவித்திருப்பது கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இறுதி யுத்தத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தக் களியாட்டம் மக்களைக் கவரும் தேவை ஏன் ஏற்பட்டது என்ற கேள்விக்கு கௌரவ அமைச்சரது விளக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

எவ்வாறெனினும் இவ்விழாவிற்கு செலவு செய்யப்பட்ட மொத்த நிதியாக ரூபா 2.5 மில்லியனில் ரூபா 1.9 மில்லியன் விவசாயிகளுக்கான பரிசிற்காவும் கேடயங்களுக்காகவும் செலவு செய்யப்பட்டதாக அமைச்சின் செயலாளரது சாட்சியையும் அவரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தையும் விசாரணைக்குழு ஏற்றுக் கொள்கின்றது.

எவ்வாறெனினும், பல வருடங்களாக விவசாயத் திணைக்களத்தினால் மாவட்ட ரீதியில் சாதாரண நிகழ்ச்சியாக நடைபெற்ற விவசாயிகளின் கௌரவிப்பு நிகழ்வில் பாரிய நிகழ்ச்சியாக மாற்றி மக்களை வசீகரிக்கக் கூடிய தென்னிந்தியக் கலைஞரையும் அழைத்து கௌரவ விவசாய அமைச்சர் தலைமை தாங்கி இந்நிகழ்வு கௌரவ அமைச்சரது பெருமையை வெளிக் கொண்டு வருவதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட விழாவா? அல்லது விவசாயிகளை கௌரவிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட விழாவா? என்ற சந்தேகம் முறைப்பாட்டாளருக்கு ஏற்பட்டிருப்பது தவிர்க்க முடியாததொன்றாகும்.

எவ்வாறெனினும் இந் நிகழ்விற்கு செலவு செய்யப்பட்ட பணத்தில் 76% பரிசுக்காக செலவிடப்பட்டமை, முழு நிதியும் வீண்விரயம் செய்யப்பட்டுள்ளதென்ற குற்றச்சாட்டை இவ்விசாரணைக்குழு முன் எண்பிப்பதற்கு முறைப்பாட்டாளர்கள் தவறி விட்டனர்.

எனினும், தேர்தல் கால வாக்குத்திரட்டல் மக்களைக் கவருதல், தன்னை பிரபல்யப்படுத்துதல் போன்ற மனவியல்பான எண்ணங்களைக் குறைத்து கௌரவ விவசாய

அமைச்சர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளில் அக்கறை காட்ட வேண்டும் என இக்குழு விதந்துரைக்கிறது.

### 4.3. மாகாண சபை உறுப்பினர்களினதும், மாகாண சபை ஆலோசனைக் குழுக்களினதும் ஆலோசனைகளைப் பெறாமல் திட்டங்கள் முன்னெடுத்தமை

கௌரவ விவசாய அமைச்சருக்கு எதிராக மேற்படி குற்றச்சாட்டை எண்பிப்பதற்கு ஆவணச் சான்றுகளோ அல்லது முறையான வாய்மொழிச் சான்றுகளோ குழு விசாரணையின் பொழுது வழக்குத்தொடுநரால் முன்வைக்கப்படவில்லை என்பதுடன் இவை மாகாணசபை பேரவை (Council) தொடர்பான விடயமாக இருப்பதனால் இக்குற்றச்சாட்டை விசாரணை செய்வது இக்குழுவின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதா என்பதில் பூரண திருப்திப்பாடு காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகையால் இக் குற்றச்சாட்டிலிருந்து கௌரவ அமைச்சரை விடுவிக்க விசாரணைக்குழு தீர்மானித்துள்ளது.

### 4.4. Beta Power (Pvt) Ltd. & Joule Power (Pvt) Ltd. நிறுவனங்களிடமிருந்து 2015ம் ஆண்டு முதல் வருடம் ஒன்றிற்கு ரூபா 20 மில்லியன் வீதம் 2016 வரை பெறப்பட்ட ரூபா 40 மில்லியன் பணத்தை மோசடி செய்தல்.

Beta Power (Pvt) Ltd. & Joule Power (Pvt) Ltd. நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களாகும். 16 காற்றாலைகள் அரச காணிகளில் அமைப்பதற்கு, முறையான குத்தகை அனுமதியை பெறுவதற்கு கௌரவ முதலமைச்சரின் ஒருமைப்பாட்டை (Concurence) பெறுவதற்கு அந்நிறுவனத்தினர் அவரை அணுகியுள்ளனர். அக்கலந்துரையாடலில் கௌரவ விவசாய அமைச்சர் அவர்களும் கலந்துகொண்டு, அவர்களோடு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை, மாகாணசபை செயலாளரைக் கொண்டு கையொப்பமிடப் பண்ணியுள்ளனர்.

முதலாவது ஒப்பந்தம் 19.03.2014இலும் திருத்தப்பட்ட புது ஒப்பந்தம் பின்னர் பிரதம செயலாளருடன் 07.11.2014இலும் செய்யப்பட்டிருந்தன. இதற்கான பேச்சு வார்த்தையில் Corporative Social Responsibility நிதி மூலம் வருடம் தோறும் முதல் 10வருடங்களுக்கும் வருடாந்தம் 20மில்லியன் ரூபாவும், 10வருடங்களுக்கு பின்னர் வருடம் ஒன்றிற்கு 23மில்லியன் பணமும் வடமாகாண சபைக்கு பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிப்பதற்காக உபயோகிக்கப்படுவதற்கும், மாகாண விவசாய அமைச்சுக்கு இந் நிதியை வழங்குவதற்கும், ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கௌரவ விவசாய அமைச்சர் ஆரம்பத்திலிருந்தே இப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வந்தமையும், விவசாய அமைச்சுக்கு வாழ்வாதார உதவியாக இந் நிதியை வழங்க ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டமை, பீட்டா மற்றும் ஜுலி நிறுவனத்தால் செய்யப்பட்ட பரிந்துரையின் அடிப்படையிலேயே என்பது விசாரணையின் பொழுது வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. அதில் கௌரவ அமைச்சரின் நேரடியான சட்டபூர்வமற்ற பங்களிப்பை எண்பிப்பதற்கான சாட்சிகள் எதனையும் விசாரணையின் பொழுது முன் வைக்கப்படவில்லை.

அத்துடன் 2015 இல் பெறப்பட்ட 20மில்லியன் ரூபாவும், 2016ல் வருட 10மில்லியன் ரூபாவுமாக 30மில்லியன் ரூபா செலவில் விவசாய திணைக்களத்தின் மூலம் 252 விவசாயக் கிணறுகள் யாழ் மாவட்டத்திலும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலும் புனரமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதையும், இத்திட்டத்தை விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கமக்கார அமைப்புகள், பயனாளிகள் ஒன்றாக செயல்படுத்துவதாக விசாரணையின் பொழுது முன்வைக்கப்பட்டன.

ஆயினும் இவ் விசாரணைக்குழு கோண்டாவில், இணுவில், கைதடி ஆகிய பகுதிகளுக்கு சென்று இத்திட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட விவசாய கிணறுகளின் உரிமையாளர்களைச் சந்தித்து நடாத்திய கள ஆய்வின்போது குறித்த கிணற்று உரிமையாளர் ஒவ்வொருவரும் தமக்கு கிணறு திருத்தியது தொடர்பில் ரூபா 150,000/- செலவு ஏற்பட்டதாகவும் 2016ம் ஆண்டு மார்கழி மாதம் ரூபா 60,000/- வரையில் பணமாக தமது விவசாய சம்மேளன தலைவர் (அல்லது செயலாளர்) ஊடாக செலுத்தப்பட்டது என்றும் மிகுதிப் பணம் செலுத்தப்படவில்லை என்றும் கூறியிருந்தனர். கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த ஒரு விவசாயி மட்டும் தனக்கு ரூபா117,000/- செலுத்தப்பட்டதாக கூறியிருந்தார். வேலைகளை தாமே தமது பணத்தில் செய்ததாகவும் எவ்வளவு தொகை தமது கிணற்றுக்கு ஒதுக்கப்பட்டது என்பது தமக்கு தெரியாது என்றும் கேள்வி கோரல் இன்றியே இவ்வேலை செய்யப்பட்டதாகவும் கூறியிருந்தனர். ஒவ்வொரு கிணற்றுக்கும் ரூபா 150,000 செலவு ஏற்பட்டதாக கிணற்று உரிமையாளர்கள் கூறிய போதும் அதற்கான பற்றுச்சீட்டுகள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. செய்யப்பட்ட திருத்த வேலைகளும் அத்தொகைக்கு ஏற்றதாக தென்படவில்லை. மேலும் இப்பணம் விவசாய சங்கங்களுக்கு காசோலையாக கொடுக்கப்பட்டு அதன் தலைவர் அல்லது செயலாளர் அத்தனை மாற்றி தமக்கு பணமாக தந்ததாக எமக்கு கூறப்பட்டது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சுச் செயலாளர் விவசாயக் கிணறுகள் புனரமைப்பு செய்யப்பட்ட விடயத்தில், விவசாய திணைக்களத்தினால் உரிய நடைமுறை

பின்பற்றப்பட்டதெனக் கூறிய வேளையிலும் கள ஆய்வின் போது கேள்வி கோரல் இன்றி தமது பணத்தில் தாமே இவ் வேலையைச் செய்ததாகவும் தமக்கு ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பது தமக்கு தெரியாது என்றும் கூறப்பட்டமை இங்கு ஓர் நிதி மோசடி தொடர்பில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

எனவே இவ்விடயம் தொடர்பில் ஒவ்வொரு விவசாயிகள் சங்கத்திற்கும் கொடுக்கப்பட்ட காசோலையின் தொகை எவ்வளவு? ஒவ்வொரு விவசாயிகள் சங்கத்தாலும் கிணற்று உரிமையாளர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு? என்பதை திருத்தப்பட்ட 252கிணற்று உரிமையாளர்களையும் சம்பந்தப்பட்ட விவசாய சங்கத் தலைவர்களையும் அமைச்சு உத்தியோகத்தர்களையும் அழைத்து விசாரித்து அறியவேண்டிய தேவை எம்மால் உணரப்பட்ட போதிலும் இதற்கான கால அவகாசம் போதாமையினால் அதனை செய்ய இவ் விசாரணைக்குழுவினால் முடியவில்லை. இதன் காரணமாக உண்மைநிலை வெளிக் கொண்டுவர இவ்விடயம் தொடர்பில் உடன் ஒரு கணக்காய்வு நடத்தப்பட வேண்டும் எனவும் எவராது தவறு இழைத்திருப்பது தெரியவரின் அவர்களிற்கெதிராக தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கௌரவ முதலமைச்சருக்கு இவ்விசாரணைக்குழு பரிந்துரைக்கின்றது.

இப் பரிந்துரைக்கு அமைவாக கௌரவ அமைச்சரின் நிதிமோசடி குறித்து நேரடி சாட்சியம் இல்லாமையால் கௌரவ அமைச்சரை இக்குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கின்றோம். அதே நேரத்தில் விவசாயக் கிணறுகள் திருத்தப்பட்டமை தொடர்பில் செய்யப்பட்ட செலவுகள் குறித்து மேலதிக பூரண விசாரணை நடத்துமாறு கௌரவ முதலமைச்சர் அவர்களை விசாரணைக்குழு கேட்டுக்கொள்கின்றது.

மேலும் மேற்படி இரு நிறுவனங்களிடமிருந்து வருடந்தோறும் 20 மில்லியன் விவசாய அமைச்சிற்கு பெறுவதும் அதன் செலவும் தற்பொழுது சட்டரீதியாக்கப்பட்டுள்ளதாயினும் 2014ம் ஆண்டுக் கொடுப்பனவில் இருந்து இவ்விரண்டு நிறுவனங்களிடமிருந்து ரூபா 19.5 மில்லியன் பெறுமதியான 06 பவுசர் வாகனங்களைப் பெற்றதும் அவ்வாகனங்களுக்கு இயக்குவதற்கான நிதி, சாரதி உதவியாளர் வேதனத்தை நிர்வாக ஒழுங்கு விதிகளுக்கு முரணானதாக மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள நிதியைப் பயன்படுத்தி கொடுப்பனவு செய்வதும் அவ்வாகனங்களை தொடர்ந்தும் திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் அமைச்சு சார்பாக வைத்திருப்பதும் மாகாண சபை நிதியை வீண்விரயம் செய்வதாக இக்குழு அபிப்பிராயப்படுகிறது. ஏனெனில் நீர் விநியோகம் மத்திய அரசின் கீழ் செயற்படும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையாகும். அத்தோடு உள்ளூராட்சி மன்றங்களுமாகும். அது அவ்வாறே செயற்பட்டு வருகிறது.

அது அவ்வாறிருக்க நீர் விநியோகம் என்ற அமைச்சின் பெயரைத் தவிர நிதிக்குழுவாலோ அல்லது மாகாண சபை பாதீட்டிலோ நீர் விநியோகத்திற்கு எவ்வித நிதி ஒதுக்கமும் பெறாத கௌரவ விவசாய அமைச்சர் 19.5 மில்லியன் ரூபாவை வீண் விரயம் செய்து 6 பவுசர்களைக் கொள்வனவு செய்வித்து குறிப்பிட்ட பணியை செயற்படுத்த அதிகாரம் மற்றும் நிதி மனிதவளம் அற்ற விவசாய அமைச்சில் கடந்த 2வருடங்களாக தாமே வைத்திருப்பது எப்படி வீண்விரயம் அல்ல என்று தீர்மானிக்க முடியும். ஆகையால் இவ் பவுசர் வாகனங்கள் உரிய, தேவையான, உள்ளூராட்சி அமைப்புகளுக்கு கையளிக்கப்படவேண்டும் என இக் குழு கருதுகின்றது.

அதே நேரத்தில் இப்பணத்தை கௌரவ அமைச்சர் அவர்கள் மோசடி செய்தார் என்பதை எண்பிப்பதற்கான சாட்சிகள், சான்றாவணங்கள் விசாரணைக்குழுவுக்கு முன்வைக்கப்படாத காரணத்தினால் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை, எனவே இக் குற்றச்சாட்டிலிருந்து கௌரவ அமைச்சரை விடுவிக்க விசாரணைக்குழு தீர்மானிக்கின்றது.

## 4.5. பாதீனிய ஒழிப்பு நடவடிக்கை என்ற பெயரில் மாகாண நிதியை மோசடி செய்தல்

பாதீனியம் 1987ம் ஆண்டு இந்திய அமைதிப் படையுடன் வந்த மிருகங்கள் மூலம் கொண்டுவரப்பட்ட செடியாகும். இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டு சென்ற பின்னர் இச் செடியினால் ஏற்படும் பாதிப்பு இனங்காணப்பட்டு மக்களுக்கு விழிப்பூட்டலை ஏற்படுத்தும் நோக்கத்தோடு, பல இடங்களில் அறிவித்தல் பலகைகள் போடப்பட்டு, இச் செடியை ஒழிப்பதற்கு விவசாய திணைக்களத்தால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட பொழுதும் உண்மையில் இச் செடியின் தாக்கம் விவசாயிகள் மட்டத்தில் பூரணமாக உணரப்படாமையால் அவர்களால் இச் செடிகளை அழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. ஆனால் இச்செடியின் பரவல் தொடர்ந்து அதிகரித்து வந்தது. இந்நிலையில் மாகாண விவசாயத் திணைக்களம் கடந்த சில வருடங்களாக பாதீனிய ஒழிப்பு நடவடிக்கையை நடைமுறைப்படுத்தவில்லை.

இந் நிலையில் 2014ம் ஆண்டு பாதீனியம் ஒழிப்பு என்ற பெரிய அளவிலான திட்டம், விவ்சாய அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டது. ரூ 5,000,000/- அளவில் செலவு செய்யப்பட்டுள்ளது. குழுவின் முன்னர் விளக்கமளித்த கௌரவ விவசாய அமைச்சரது விளக்கத்தின் படி செலவழிக்கப்பட்ட பணம் மனிதவலு என்பன நியாய பூர்வமானதாக இருக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்.

இந் நிலையில் சிறப்பாக நடைமுறைப்படுத்த முடியாத, ஏற்கனவே விவசாயத் திணைக்களத்தால் கைவிடப்பட்ட திட்டத்தை எவ்வாறு நிறைவேற்றலாம் என கௌரவ விவசாய அமைச்சர் தீர்மானித்து கௌரவ முதலமைச்சர் தலைமையில் பெரிய விழாவாக ஆரம்பித்து அதற்காக ரூ.5 மில்லியன் அளவில் செலவு செய்த இத்திட்டத்தை இடை நடுவில் கைவிட்டது விவசாய அமைச்சுக்கும், முதலமைச்சருக்கும், வட மாகாண மக்கள் மத்தியில் மாகாணசபை நிதியை செயல்படுத்த முடியாத திட்டங்களுக்கு செலவு செய்து வீண் விரயம் செய்கிறார்கள் என்ற எண்ணத்தை அல்லது அபிப்பிராயத்தை ஏற்படுத்துவது தவறென இக்குழு கருதவில்லை. ஆனால் இப்பணம் மோசடி செய்யப்பட்டதாக, சாட்சிகள் முன்வைக்கப்படாத நிலையில் இச் செலவை ஓர் திட்டமிடப்படாத செலவு எனவும், அதனால் பொது மக்களுக்கு நன்மை கிடைக்காத காரணத்தினால் வீண் விரயம் எனவும் இக் குழு கருதுகின்றது. அதற்கு கௌரவ விவசாய அமைச்சரே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

**4.6. (அ). Northern Power என்ற மின் உற்பத்தி நிலையம் சுன்னாகத்தில் தொழிற்பட்ட வேளையில் அதனது கழிவு எண்ணெய் குடிநீரில் கலந்த விடயத்திற்கு, ஆய்வுக்குழு ஒன்றை நியமித்து அக்குழுவின் அறிக்கை மூலம் நிறுவனத்திற்கு சாதகமாக அறிக்கையை வெளிப்படுத்தி உண்மைகளை மறைத்தமை.**

Northern Power என்ற நிறுவனம் இலங்கை மின்சார சபையோடு செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே சுன்னாகத்தில் இயங்கி வந்தது. இலங்கை மின்சாரசபை மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஓர் நிறுவனமாகும்.

இந்நிறுவனத்தின் செயற்பாட்டால் ஓயில் கசிவை ஏற்படுத்தி நிலத்தடி நீரை மாசுபடுத்தியுள்ளது என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. நிலத்தடி நீர் நிர்வாகம் மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் நீர்வளச் சபையின் நிர்வாகத்துக்குட்பட்டது.

எனவே நிலத்தடி நீரில் ஓயில் கலந்திருந்தால், இலங்கை மின்சாரசபை, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, இலங்கை நீர்வளச் சபை என்பன Northern Power நிறுவனத்தோடு, அவர்களுக்கு இலங்கை மின்சாரசபையுடன் ஏற்படுத்தப்பட்டிருந்த எழுத்திலான ஒப்பந்தத்து அடிப்படையில் நடவடிக்கை எடுத்து அப்பிரச்சினையை மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய பொறுப்பு அந் நிறுவனங்களுக்கும், அந்

நிறுவனங்களை நிர்வகிக்கும் மத்திய அரசுக்கும் இருந்தது. அவர்கள் அப்பொறுப்பை சரியான முறையில் செயல்ப்படுத்தினர்.

அத்தோடு மக்கள் பாதிப்பை உணர்ந்து, மத்திய அமைச்சர் அமைச்சரவை பத்திர மூலம், அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்று அதற்கான செயற்பாட்டுக்குழுவை அமைத்து பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு குடிநீர் விநியோகிக்க உடன் நடவடிக்கையையும் நீண்ட கால நோக்கில் இப்பாதிப்பை நீக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். ஏனெனில் அந்நடவடிக்கைகளுக்கு தேவையான மனிதவளம், இயந்திர சாதனங்கள் மற்றும் நிபுணத்துவ அறிவு என்பன அவர்களுக்கு இருந்ததனால், இவ் அனர்த்தம் அறிவிக்கப்பட்ட உடனேயே இதற்கான குழுவொன்றை நியமித்து மேற்படி நிறுவனங்களின் உதவியுடன் உண்மையை, பாதிப்பை கண்டறியும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருந்தன.

அதே நேரத்தில், வடக்கு மாகாணசபை விவசாய அமைச்சு தமக்கு சட்ட பூர்வமாக அதிகாரமளிக்கப்படாததும், நிர்வாக ரீதியாக தொடர்பற்றதுமான இவ்விடயத்தில் தலையிட்டு இதற்கான நிபுணத்துவம், தொழில்நுட்ப வளம், தேவையான உபகரணங்கள் இல்லாத நிலையில் கௌரவ அமைச்சர் தன்னிச்சையாகவே ஓர் குழுவை அமைத்து பின்னர் அதற்கு மாகாணசபை அனுமதியைப் பெற்று மத்திய அரசால் செய்யப்பட்ட ஆய்வு தரவுகளை மாத்திரம் கொண்டு அக்குழு பகுப்பாய்வு செய்து நிலத்தடி நீரில் ஒயில் கலப்பு இல்லை என ஓர் அறிக்கையை தயாரித்து சிறு வட்டத்துக்குள் அதனை வெளியிட்டு, Northern Power நிறுவனம் அதனைப் பாராட்டும் அளவுக்கு செயற்பட்டமை, நிலத்தடி நீரில் ஒயில் கலக்கப்பட்டுள்ளது என்ற அடிப்படையில் மத்திய அரசால் வெளியிடப்பட்ட அறிக்கையோடு முரண்பாட்டை ஏற்படுத்தியமை, விவசாய அமைச்சால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் தகுதியிலும், அவர்களது அறிக்கையின் மீதும் அக்குழுவை நியமித்த கௌரவ விவசாய அமைச்சர் மீதும், ஒட்டு மொத்தமாக வட மாகாணசபை மீதும், பொதுமக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியமை நியாயபூர்வமானது என இவ் விசாரணைக்குழு கருதுகின்றது. இதற்காக செலவிடப்பட்ட நிதி வீண் விரயம் எனக்கருதுகின்றது. இந் நிபுணர்குழுவின் அறிக்கை பொதுமக்களுக்கு வெளியிடப்படாமை இச் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளது.

**3.6. (ஆ). நிலத்தடிநீர் விடயம் தொடர்பில் எதுவித அதிகாரமும் அற்ற நிலையில் நிலத்தடி நீரில் எண்ணெய் கசிவு தொடர்பில் விசாரணைக்காக நிபுணர் குழுவை நியமித்து மாகாணசபையின் நிதியை வீண்விரயம் செய்தமை**

மேற்படி குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்ட நிலத்தடி நீர் தொடர்பான நிர்வாகம் மாகாணசபைக்கு இலங்கை அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தின் கீழ் பாரதீனப்படுத்தப்பட்ட விடயமல்ல. அதனை அமைச்சின் செயலாளர், தனது சாட்சியத்தின் பொழுது ஏற்றுக் கொண்டுள்ளார். அவர் தான் மாகாண நிதிக்கான அமைச்சின் கணக்கு உத்தியோகத்தர் ஆவார். அதே நேரத்தில் விசாரணைக்குழுவின் முன் தோன்றி விளக்கமளித்த கௌரவ அமைச்சரும் ஏற்றுக்கொண்டுள்ளார். நிலத்தடி நீரில் ஒயில் கலந்தமை ஓர் Burning issue என்றதால் சுற்றுச் சூழல் அமைச்சர் என்ற அடிப்படையில் தான் தலையிட்டு, மாகாணசபை அனுமதியளித்த காரணத்தால்தான் அவ்விடயத்தில் ஈடுபட்டதாகவும் விசாரணைக் குழுவுக்கு விளக்கமளித்துள்ளார்.

வட மாகாணத்தில் மத்திய அரசாங்க செயற்பாடுகள் எந்த விதத்தடையுமின்றி அரசாங்க அதிபரின் ஒருங்கிணைப்போடும், வழிகாட்டலோடும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதே நேரம் நிலத்தடி நீருக்கு பொறுப்பான தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையும், நீர் வளச்சபையும் இயங்கிக்கொண்டிருக்கும் சூழ் நிலையில் பொதுமக்களுக்கான எந்த Burning issue வையும் எதிர் நோக்கக் கூடிய மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில் மத்திய சுற்றாடல் அமைச்சும், சுற்றாடல் அதிகாரசபை மூலம் தனது செயல்பாட்டை நடாத்திக் கொண்டுவரும் யாழ் மாவட்டத்தில், சுற்றாடல் அமைச்சுடனோ அல்லது நீர்விநியோகத்துக்கு பொறுப்பான அமைச்சுடனோ ஒரு புரிந்துணர்வை (M.O.U) ஏற்படுத்திக் கொள்ளாது மாகாண விவசாய அமைச்சர் இவ்விடயத்தில் தலையிட்டு, நிபுணர் குழுவை நியமித்தமையும் அதற்காக மாகாண நிதி 1.9 மில்லியன் செலவு செய்தமையும் நியாயமான தொன்றாக இக் குழு கருதவில்லை. அத்தோடு அமைச்சர் தனது விளக்கத்தில் இக் குழு ஓர் ஆய்வையும் தாமாகவே செய்யவில்லை எனவும் மத்திய அரசாங்க நிர்வாக அலகுகளால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தரவுகளை வைத்துக் கொண்டே தனது அறிக்கையை வெளியிட்டனர் என்ற விளக்கமும், தேவையற்றதும், நிபுணத்துவம் அற்றதும் கையாலாகாத்தனம் கொண்டதுமான இக்குழுவை நியமித்தது அதற்கு மாகாணசபை நிதியை செலவு செய்தமை வீண் விரயம் என்றே இக் குழு கருதுகின்றது. மாகாணசபையின் அனுமதியுடன் தான் இந் நடவடிக்கை செய்யப்பட்டது என்ற விளக்கம் ஏற்றுக்கொள்ள முடியாத தொன்றாகும். ஏனெனில் மாகாணசபைக்கான அனுமதிக்கு விண்ணப்பித்ததே கௌரவ விவசாய அமைச்சரேயாகும். அப்பொழுது தனதும், மாகாணசபையினதும் அதிகார எல்லையை வரையறை செய்யும் அறிவு கௌரவ அமைச்சருக்கோ அல்லது அவரது செயலாளருக்கோ இருந்திருக்க வேண்டும். எனவே இதற்காக செலவிடப்பட்ட செலவு அப்பட்டமாக ஓர் வீண் விரயம் என இக்குழு அபிப்பிராயப்படுகின்றது.

## 4.7. 2015 நவம்பர் மாதம் முன்னெடுக்கப்பட்ட 5லட்சம் மரநடுகைத் திட்டம் தொடர்பில் பணமோசடி செய்தமை.

மர நடுகை என்பது குறிப்பாக விவசாயத்திணைக்களத்தால், பயன்தரு மரங்கள் நடும் திட்டம். வருடா வருடம் நடைமுறைப்படுத்தப்படும் திட்டமென்பதுடன், பனை அபிவிருத்தி சபையும், வருடா வருடம் பாரிய அளவில் பனை மீள் நடுகைத் திட்டத்தை செயல் படுத்தி வருகின்றது. அதற்கு மேலான அரசாங்கமும் தேசிய ரீதியான மரம் நடுகை திட்டத்தை செயற்படுத்தி வருகின்றது.

யாழ் மாவட்டத்தில் கடந்த 30வருடகாலமாக, மரநடுகை திட்டம் செயல்படுத்தப்படுவதுடன், அதில் கண்ட அனுபவம் காரணமாக, மரம், நடுதலை, மரம் நட்டு பராமரித்தல் என்ற புதுத்தொனியுடன் இத்திட்டம் 1990 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் பயனை மிருசுவில் வரையிலான A9 வீதியோர மரங்கள், வல்லை வெளி – யாழ் பருத்தித்துறை வீதியோர மரங்கள், மானிப்பாய் வீதியில் மருங்கில் உள்ள மரங்கள் என்பன சான்றாகியுள்ளன, அதாவது மரம் நடுதல் மாத்திரமல்ல, அம்மரங்கள் தாமாகவே வளரும் வரை அவற்றை பராமரித்தல் என்ற கொள்கையின்டிப்படையிலேயே இம்மரநடுகை உலர் வலயத்தில் பரிமாணம் பெற்றுள்ளது. அதே நேரம் யுத்தத்தின் பின்னர் பல லட்சக்கணக்கான தென்னை மற்றும் பயன்தரு மரவகைகள் குடும்பங்களுக்கு வழங்கி அவர்களால் பராமரிக்கப்பட்டு, பயன் தரும் நிலையில் உள்ளன.

இவ் வரலாற்றை கொண்ட மரநடுகை, மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர் 2015நவம்பர் மாதத்தில் 5லட்சம் மரங்கள் நடுவோம் என்ற குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தில் 14,193 மரக்கன்றுகள் மாத்திரம் விவசாய அமைச்சால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும், மொத்தச் செலவாக ரூ 2.5 மில்லியனுக்கு செய்யப்பட்டதெனவும் இம் மரக்கன்றுகள் நடுகைத்திட்டம்;

(அ) நேரடியாக அமைச்சருக்கூடாக செய்யப்பட்டது.

(ஆ) சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடாக செய்யப்பட்டது

(இ) பொது அமைப்புக்கள் மூலம் செய்யப்பட்டது.

என, அமைச்சின் செயலாளரது சாட்சியத்தை விசாரணைக்குழு ஏற்றுக் கொள்கின்றது. ஆனால் வவுனியா சேமமடு வீதியில் இளமருதங்குளம் கிராமத்தில் கௌரவ முதலமைச்சர், கௌரவ விவசாய அமைச்சர், செயலாளர் மற்றும் கௌரவ மாகாணசபை அங்கத்தவர்கள்

முன்னிலையில், புனை அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்துக்கு உரித்தான 15ஏக்கர் காணியில் பெரும் விழாவாக நடப்பட்ட மரங்களுக்கு யார் உரிமையாளர் என்பதை அமைச்சின் செயலாளரோ அல்லது கௌரவ அமைச்சரோ விசாரணைக்குழுவிற்கு விளக்கமளிக்கத் தவறிவிட்டனர். ஏனெனில் கௌரவ அமைச்சரின் நேரடி பங்குபற்றுதல் இல்லாது இத்திட்டம் செயல்ப்படுத்தப் பட்டிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் கௌரவ முதலமைச்சரும் இந்த நிகழ்வுக்கு சமூகமளித்திருந்ததாக பொதுமக்கள் குழுவிடம் நேரடியாக தெரிவித்துள்ளனர்.

விசாரணைக்குழு இப்பிரதேசத்துக்கு சென்று கள ஆய்வு செய்த பொழுது, மரங்கள் நட்டமையை நிரூபிக்கும் குழிகளும், ஓரிரு தேக்கம் கன்றுகளையும் தான் காணக் கூடியதாக இருந்ததுடன் எல்லை வேலிகள் பாழடைந்து எவ்விதப் பராமரிப்புமின்றி அக்காணி இருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

எனவே குறிப்பிட்ட இடத்தில் மரம் நடுகையை தூண்டியது யார்? அதற்கான செலவு எவ்வளவு? அது யாருடைய நிதி? கௌரவ முதலமைச்சர், விவசாய அமைச்சர் பெரு விழாவாக முன்னெடுக்கப்பட்ட இத்திட்டம் மாகாண சபையின் திட்டமெனவே அப்பகுதி மக்கள் அபிப்பிரயாப்படுவதோடு இவ்வாறு பொது மக்கள் நிதியை திட்டமிடாது செலவு செய்து வீண்விரயமாக்குவது வடமாகாண சபை என அவர்கள் கொள்ளும் அபிப்பிராயத்தை விசாணைக்குழு புறந்தள்ள முடியாதுள்ளது.

இது விடயமாக அமைச்சின் செயலாளர் மரங்களை பரமரிக்கும் பொறுப்பு தங்களுடையது அல்ல எனவும் அதற்கான பொறிமுறை தம்மிடம் இல்லை எனவும் அவ்வாறு செய்வதாயின் பெருமளவு நிதி தேவை எனவும் விசாரணையின் பொழுது தெரிவித்த கருத்து ஏற்றுக் கொள்ள முடியாதது ஒன்று என்பதுடன் விழா எடுப்பதும் அமைச்சர்களின் செல்வாக்கை முன்னிலைப்படுத்துவதும்தான் அமைச்சர்களதும் அமைச்சின் செயலாளர்களதும் பணியே என விசாரணைக்குழு தனது ஆதங்கத்தை தெரிவித்துக் கொள்கிறது.

கௌரவ விவசாய அமைச்சருக்கு எதிரான இக் குற்றச்சாட்டை எண்பிப்பதற்கு பூரணமான ஆதாரங்கள் விசாரணையின் பொழுது வெளிக் கொண்டுவரப்படவில்லையாயினும் வழங்கப்பட்ட மரக்கன்றுகளை பாராமரித்து பாதுகாப்பதற்கான பொறிமுறை இல்லாத இத்திட்டம் வெற்றியளிக்காத திட்டம் என்பதுடன் பூரணம் பெறாததும் வருடாவருடம் நிதி வீண் விரயத்திற்கும் கொண்டு செல்வதற்கான காரணமாக அமைந்து விட்டது என விசாரணைக்குழு அபிப்பிராயப்படுகிறது.

இவ்விழாவிற்கான செலவு வீண்விரயமே. இச் செலவை வவுனியா மாவட்ட பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் செய்திருப்பதற்கான நியாயபூர்வமான காரணங்கள் உள்ளன. எனினும் இதற்கான சாட்சிகள் விசாரணைக்குழு முன் வைக்காத நிலையில் இச் செலவுகளுக்கு கௌரவ அமைச்சரே பொறுப்பு என சுட்டிக்காட்ட இக்குழுவிற்கு முடியாதுள்ளது.

**4.8. ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் இதுவரையில் நன்கு வெற்றி அளிக்கவில்லை எனத் தெரிந்திருந்தும், தவறான செல்வாக்கை செலுத்தி நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து சாத்தியக்கூற்று அறிக்கையை பெற்று புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தினை முன்னெடுத்து 32மில்லியன் ரூபாவை வீண்விரயம் செய்தமை.**

மேற்படி குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணைக்குழு, முறைப்பாட்டாளர், சம்பந்தப்பட்ட திணைக்களப் பிரதிநிதிகளது சாட்சியங்களை பதிவு செய்ததோடு விசாரணையின் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணச் சான்றுகளையும் கவனத்தில் எடுத்துக் கொண்டது. அதற்கு மேலதிகமாக களப் பரிசோதனை செய்ததுடன், மாயவனூர் கிராம மக்களான பயனாளிகளையும் சந்தித்து அவர்களது கருத்துக்களையும் பதிவு செய்துள்ளது.

புழுதியாறு நீர்ப்பாசனத் திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி கிராமத்தில், மாயவனூர் என்னும் கிராமத்தில் மகரநாட்டிலிருந்து குடியேறி தலா 1/2 ஏக்கர் மேட்டுக் காணிகளை பெற்று குடியிருக்கும் 100 குடும்பங்களுக்கு, அவர்கள் தம் காணியில் மேட்டு நிலப் பயிர்செய்கையை செய்து அவர்களது வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்கமாக, புளிக்கன் குளத்தில் இருந்து நீர்கால்வாய் வெட்டி நீரை கொண்டுவந்து, சுமார் 20அடி உயரத்தில் உள்ள மேட்டு நிலத்துக்கு டீசலினால் இயங்கும் நீர்பம்பி மூலம் நீரை மேலேற்றி நீரை விநியோகிக்கும் திட்டமாகும்.

இது போன்ற, ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள், குறிப்பாக, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கூட்டு விவசாயிகள் பங்கு பற்றும் அடிப்படையில் கடந்த காலங்களில் (1980 – 90) ஆரம்பிக்கப்பட்டு, அதாவது நாட்டில் உப உணவுப் பயிர்களுக்கு மிகுந்த கிராக்கி ஏற்பட்டிருந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் அரச உதவியின்மையாலும் மேலதிக overhead செலவு காரணமாகவும், விவசாயிகளால் கைவிடப்பட்ட திட்டமாகும். பின்னர், முத்தையன்கட்டு திட்டத்தில் யுத்தத்தின் பின்னர் ICRC இன் உதவியுடன், மீள

ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் , அத்திட்டம் பூரண வெற்றியளிக்கவில்லையாயினும், நீர் இறைப்பு யந்திரங்களை இயக்குவதற்கு, கூடிய செலவு காரணமாக உச்ச பயனைப் பெறமுடியவில்லை.

அதே நேரத்தில் விவசாயத் திட்டமொன்றை செயல்படுத்த திட்டமிடும் பொழுது, நீர்ப்பாசனம் தொடர்பான சாத்தியக்கூற்று அறிக்கையை மாத்திரம் நம்பியிருக்காது, விவசாய, சமூக பொருளாதார சாத்தியக்கூற்று அறிக்கைகளையும் பெற்றே திட்டத்தில் முதலீடு செய்யவேண்டும் என்பது யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் நியதியாகும். எல்லா செயல்திட்டங்களையும் செயல்படுத்துவது அமைச்சு, கொள்கைத்தீர்மானம் எடுப்பது தான் அமைச்சர் செய்யும் பணி என அமைச்சர் சார்பாக விசாரணைக்குழு முன் சாட்சியமளித்த அமைச்சின் செயலாளருக்கு, ஏன் மேற்படி விடயம் தெரியவில்லை என்பது அவரது சாட்சியங்களின் உண்மைத்தன்மையில் விசாரணைக்குழு தனது சந்தேகத்தை தெரிவிக்கின்றது.

இத்திட்டப் பயனாளிகள் அரை ஏக்கர் மேட்டுக்காணியை மாத்திரம் கொண்ட கூலித் தொழிலாளர்கள். ஓரிரு குடும்பத்தவர்கள் தவிர மற்றவர்கள் பொருளாதார ரீதியில் ஏழைகள். ஏழைகள் சேமிப்பு அற்றவர்கள், டீசல் நீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்க நிதி வசதியற்றவர்கள். அவர்களால் இத்திட்டத்தை இயக்க முடியாது என்பதுடன் அவர்களை ஒன்றிணைக்கும் ஓர் அமைப்பேனும் இத் திட்டத்தை இயக்குவது தொடர்பாக ஒழுங்காக இயங்குவதாக தெரியவில்லை.

அத்தோடு முக்கியமான ஒரு விடயம் விவசாயத்திணைக்களம் இச் செயற்திட்டத்தில் இணைக்கப்படவில்லை. இணைக்கப்பட்டிருப்பின், மக்களது அனுபவத்தின் படியும், மண்வளத்தின் அடிப்படையில், கிடைக்கக்கூடிய நீரை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வோர் விவசாயக் குடும்பத்துக்குமான பயிர் செய்கை அட்டவணையை (Cropping Calendar) தயாரித்து, இத்திட்டத்தை சிறப்பாக இயக்கியிருக்க சந்தர்ப்பம் உண்டு.

பயனாளிகளின் கருத்துப்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நீர் இறைக்கும் இயந்திரம் இயக்கப்படவில்லையெனவும், தங்களோடு கலந்துரையாடப்படாமல் செயல்படுத்தப்பட்ட திட்டமெனவும் கருத்து தெரிவித்துள்ளதோடு இத்திட்டத்துக்கு பதிலாக சூரிய சக்தியால் இயங்கும் செலவு குறைந்த நீர் இறைக்கும் இயந்திரத்தை பூட்டியிருக்கலாம் எனவும், ஒவ்வொரு காணிக்கும் ஒவ்வொரு கிணறை தந்திருக்கலாம் எனவும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

நீர்ப்பாச்சு வாய்க்கால்கள் நல்ல முறையில் நிர்மாணிக்கப்பட்டு இருப்பினும், அவை பராமரிக்கப்படாமையினால் செடிகள் வளர்ந்தும் சேதமாகியும் இருப்பது பயனாளிகளோ அல்லது அத்திட்டத்தை நிர்மானித்த திணைக்களத்தினது அக்கறையின்மையை காட்டுகின்றது.

விசாரணைக்குழு முன் சாட்சியமளித்த நீர்ப்பாசன பிரதி பணிப்பாளர், கௌரவ விவசாய அமைச்சரின் கோரிக்கையின்படியே இத்திட்டத்தை செயல்படுத்தியதாகவும், வாய்க்காலில் நீர் இருப்பதால் மறைமுகமாக நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து, கிணறுகளில் நீர்மட்டம் உயர்வதற்கான சாத்தியம் உள்ளது எனத் தெரிவித்துள்ளதுடன் டீசல் நீர் இறைப்பு இயந்திரத்தின் இயக்க செலவு (Overhead Expenditure) அதிகமாக இருக்கும் என்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அதே நேரத்தில், இத்திட்டம் பயனளிக்க காலம் எடுக்கும்; பின்னர் சரியாக வரும் என்று கருத்துப்பட்ட விசாரணையின் பொழுது கௌரவ விவசாய அமைச்சர் வழங்கிய விளக்கம், பூரணமாக ஏற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது எனக் குழு கருதுகின்றது.

நீண்டகால யுத்தம் காரணமாக, வட மாகாணத்தின் முக்கிய வாழ்வாதார துறையாகிய விவசாயத்துறை பெரிதும் பாதிக்கப்படுகின்றதுடன், தேசிய தரத்துக்கு இத்துறையை மேம்படுத்த பல வேலைத் திட்டங்களை செயல்ப்படுத்தப் படவேண்டிய இக்காலப்பகுதியில் ரூ32 மில்லியன் செலவு செய்து நடைமுறைப்படுத்தப்படாது உள்ள இத்திட்டத்துக்கு செய்யப்பட்ட செலவு ஓர் வீண் விரயம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

கௌரவ அமைச்சர்களின் நெருக்குதல் காரணமாக, மற்றய தொடர்புடைய திணைக்களங்களது உதவி, பயனாளிகளது பொருளாதார நிலை என்பவற்றை கருத்தில் எடுக்காது, நிர்மாணிக்கப்பட்ட இத்திட்டம் எதிர்பார்த்த இலக்கை அடையவில்லை - இதற்கு கௌரவ விவசாய நீர்ப்பாசன அமைச்சரே பொறுப்புக்கூற வேண்டும் என இக் குழு அபிப்பிராயப்படுகின்றது.

**4.9. (அ). யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கத்திற்கு 2014 ஆண்டு மே மாதம் வரை தலைவராக இருந்த பெரியதம்பி இராசநாயகம் இரஞ்சன் என்பவரை நியாயமான காரணங்களின்றி கூட்டுறவு ஆணையாளருக்கு ஊடாக அதிகார துஷ்பிரயோக மூலம் பதவிநீக்கம் செய்தமை.**

யாழ்கோ நிறுவனம் கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சங்கங்களில் ஒன்றாகும். அதை சங்கத்தின் உப விதிகளின் படி, பணிப்பாளர் சபைக்கு 9 அங்கத்தவர்களை நியமிக்கும் அதிகாரம் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் இருந்தது. ஆனால் மத்திய அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி கருத்திட்டத்தினால் உருவாக்கப்பட்டு பின்னர் கூட்டுறவு சங்கம் என்ற வலைஅமைப்புக்குள் அதன் நிர்வாகம் கொண்டுவரப்பட்ட பொழுதும் மத்திய கால் நடை அபிவிருத்தி அமைச்சினாலும், அரச அதிபரினாலும், இத்திட்டத்துக்கு பெருமளவு நிதி வழங்கப்பட்ட காரணத்தினால் அதன் நிதியை பாதுகாக்கும் நோக்கில், பணிப்பாளர் சபைக்கான இரு அங்கத்தவர்களை அரசாங்க அதிபரின் சிபார்சில் நியமிக்கப்படவேண்டும் என்ற கடப்பாடு கூட்டுறவுசங்க துணை விதி 35.1ன் கீழ் உள்ளது.

கூட்டுறவு உதவி ஆணையாளர் அவர்கள் 2014ம் ஆண்டு அரசாங்க அதிபரின் சிபார்சைப்பெறாது 01.05.2014இலிருந்து திரு.இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா, திரு.கந்தையா மகாதேவன் ஆகிய இருவரையும் பணிப்பாளர் சபைக்கு நியமித்துள்ளார். இந் நியமனம் மூலம், முன்னர் அரசாங்க அதிபரின் சிபார்சின்படி பொதுச் சபைக்கு நியமிக்கப்பட்டு, பொதுச்சபையால் தலைவராக தெரிவுசெய்யப்பட்டு, 30.04.2014 வரை தலைவராக கடமையாற்றிய திரு.ரஞ்சனது பதவி பறிக்கப்பட்டுள்ளது. அப்பதவிக்கு அரச அதிபரின் சிபார்சினால் நியமிக்கப்படாத திரு.இ.சர்வேஸ்வரா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்துக்கான சிபார்சு, கூட்டுறவுத் திணைக்களம் விவசாய அமைச்சுக்கு கீழ் கொண்டுவராத காலப்பகுதியான 2014.04.03ம் திகதி, கௌரவ விவசாய அமைச்சரினால் செய்யப்பட்டுள்ளது. அதன்டிப்படையில், கௌரவ அமைச்சரின் ஆலோசனையின்படி, இந்நியமனம் செய்யப்பட்டதாக, முன்னாள் கூட்டுறவு ஆணையாளரது சாட்சியை இங்கு ஏற்க வேண்டியுள்ளது.

அதே நேரத்தில், அரசாங்க அதிபரின் சிபார்சு இல்லாத ஒருவரை இயக்குநர் சபைக்கு நியமித்து அவரை தலைவராக தெரிவு செய்ததில் உள்ள நிர்வாக முறைகேட்டை தவிர்ப்பதற்காக, அரசாங்க அதிபரிடம் பணிப்பாளர் சபைக்கு இருவரை சிபார்சு செய்யும்படி கோரிக்கை விடுவதை தவிர்த்து, தம்மால் முறைகேடாக நியமிக்கப்பட்ட திரு.இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா மற்றும் திரு.கந்தையா மகாதேவன் ஆகியோர்களது பெயர்களை தனது கடிதத்தில் உள்ளடக்கி அதுவும் அந்நியமனம் வழங்கப்பட்டபின் ஏறக்குறை ஒருவருடத்தின் பின்னரே அதாவது 27.04.2015 இல் கூட்டுறவு உதவி ஆணையாளரால், அரசாங்க அதிபருக்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. அனுமதி பெறப்பட்டுள்ளது. இது வட மாகாண கூட்டுறவு ஆணையாளரால்

செய்யப்பட்ட நிர்வாக முறைகேடாகும். இம் முறைகேடு கௌரவ விவசாய அமைச்சரின் அழுத்ததால் ஏற்பட்டதாகும்.

ஆனால் கௌரவ விவசாய அமைச்சரின் சிபார்சின் அடிப்படையிலேயே திரு.இ.சர்வேஸ்வராவின் நியமனத்தை செய்ததாக முன்னாள் கூட்டுறவு ஆணையாளரது சாட்சியில் தெரிவித்துள்ளமையை விசாரணைக்குழு தனது கவனத்தில் எடுத்துள்ளது. ஆனால் அந் நியமனக் காலத்தில், கூட்டுறவு திணைக்களம், கௌரவ அமைச்சர் ஐங்கரநேசனது அமைச்சுடன் இணைக்கப்பட்டுத்தானும் இருக்கவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. அதாவது கூட்டுறவுத்துறை கௌரவ முதலமைச்சரது அமைச்சுடன் இணைக்கப்பட்டு இருந்துள்ளது. திரு.இ.சர்வேஸ்வராவின் நியமனத்தால் திரு.ரஞ்சனது நியமனம் தானாகவே செயலிழந்துள்ளது.

திரு.ரஞ்சன் பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கான காரணம் அவருக்கு தெரிவிக்கப்படவில்லை என்பதுடன், 2014 இல் நிர்வாக சீர்கேடு என்ற அடிப்படையில் பதவி நீக்கம் செய்யப்பட்டதென, முன்னாள் கூட்டுறவு ஆணையாளர் விசாரணையின் போது தெரிவித்திருந்தாலும் திரு.ரஞ்சன் அவர்களுக் கெதிரான குற்றப்பத்திரம் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு பின்னரே அதாவது 2016இல் தான் அனுப்பப்பட்டதை கவனத்தில் கொள்ளும்பொழுது, கூட்டுறவு ஆணையாளரும் கௌரவ அமைச்சரும் விசாரணைக்குழுவிற்கு முன்னர் அளித்த சாட்சியும் விளக்கமும் உண்மைக்கு புறம்பானதென்பதையும், கூட்டுறவு ஆணையாளர், தனது அதிகாரத்தை தானே அமைச்சருக்கு கையளித்துள்ள நிர்வாக முறைகேடும் கௌரவ அமைச்சரால் செய்யப்பட்ட அதிகார துஸ்பிரயோகத்தையும் மூடி மறைப்பதற்கு செய்யப்பட்ட செயலாக கருத வேண்டியுள்ளது.

இதனடிப்படையில் பார்க்கும் பொழுது திரு.சர்வேஸ்வரா, மகாதேவன் ஆகியோரை கூட்டுறவு ஆணையாளர் மூலம் நியமனம் செய்து அதன் மூலம் திரு.ரஞ்சனை தலைவர் பதவியில் இருந்து நீக்கம் செய்தமை, கௌரவ அமைச்சரது அதிகார துஸ்பிரயோகமே என இவ் விசாரணைக்குழு கருதுகிறது.

**4.9. (ஆ). 2015இல் யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கத்திற்கு தலைவராக முன் அனுபவமில்லாதவரும் அரச அதிபரால் முன் சிபார்சு செய்யப்படாதவருமான திரு. இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா என்பவரை குடும்ப நண்பர் என்ற அடிப்படையில் கூட்டுறவு ஆணையாளர் மூலம் தலைவராக நியமித்தமை தொடர்பில் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை.**

யாழ்கோ் கூட்டுறவு சங்கத்தின் பணிப்பாளர் சபைக்கு அரசாங்க அதிபரின் சிபார்சு பெறப்படாது 01.05.2014 இலிருந்து கௌரவ விவசாய அமைச்சரின் சிபார்சை அடிப்படையாகக் கொண்டு, திரு.இ.சர்வேஸ்வரா மற்றும் கந்தையா மகாதேவா ஆகியோர் நியமிக்கப்பட்டதாகவும், சட்ட பூர்வமான கௌவர அமைச்சருக்கு அவ் அதிகாரம் இல்லை யெனவும் கூட்டுறவு ஆணையாளர் இவ்விசாரணைக் குழுவின் முன் அளித்த தனது சாட்சியத்தில் குறிப்பிட்டதையும், நேரடியாக திரு.இ.சர்வேஸ்வராவின் பாற்பண்ணை தொழில் தொடர்பான அனுபவமின்னையை, கௌவர அமைச்சருக்கு தான் தெரிவித்ததாகவும், அதற்கு கௌரவ அமைச்சர் திரு. மகாதேவாவின் ஆலோசனையைக் கேட்டு அவர் நடந்து கொள்வார் எனத் தெரிவித்து, திரு.இரத்தினசிங்கம் சர்வேஸ்வராவின் நியமனத்தில் உறுதியாக இருந்துள்ளமையை கூட்டுறவு ஆணையாளரது சாட்சியிலிருந்து தெளிவாகின்றது.

அதே நேரத்தில், பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இந்தியாவிலிருந்து வந்த காலம் தொடக்கம் கௌரவ அமைச்சரை தனக்கு தெரியும் என திரு.இ.சர்வேஸ்வரா குழுவின் முன் அளித்த சாட்சியத்தில் தெரிவித்துள்ளமையும், அவர் தனது மனைவியுடைய குடும்ப நண்பர் எனவும் தனது மாமனாரின் பள்ளித் தோழன் எனவும், அவர் தனது பெயரை சிபார்சு செய்திருக்கலாம் எனவும் அவர் தனது சாட்சியத்தின் பொழுது தெரிவித்திருக்கும் அதேநேரத்தில், கௌரவ அமைச்சர் அவர்கள் திரு.இரத்தினசிங்கம் சர்வேஸ்வராவை அவர் யாழ்கோ தலைவராக நியமிக்கப்பட்ட பின்னர் தான் தெரியும் என தனது சாட்சியத்தின் பொழுது முரண்பாடாக சாட்சியமளித்து சர்வேஸ்வராவுக்கும், தனக்கும் இடையே உள்ள முன் உறவை மறைக்க முயற்சித்தள்ளமையை விசாரணைக்குழு தனது கவனத்தில் எடுத்துள்ளது.

அதோடு தனக்கு கூட்டுறவு ஆணையாளரை நன்கு தெரியும் எனவும், அதனாலேயே தான் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாகவும்; அரசாங்க அதிபரின் சிபார்சின் பேரிலேயே தனது நியமனம் இருந்தது என்றும் உண்மைக்கு புறம்பாக திரு.இ.சர்வேஸ்வராவின் சாட்சியும், அவர் SLAS உத்தியோகத்தர் என்ற உண்மைக்கு புறம்பான கௌரவ அமைச்சரின் சாட்சியும், திரு.சர்வேஸ்வரா – கௌரவ அமைச்சர் அவர்களுக்கிடையே நிலவிவந்த முன் தொடர்பையும் கௌரவ அமைச்சரின் சிபார்சின்னடிப்படையிலேயே கூட்டுறவு ஆணையாளருக்கு நெருக்குதல் வழங்கி இந் நியமனம் செய்யப்பட்டதென்பதை கூட்டாக இவ்விருவரும் மறுக்கும் விதத்தில் சொல்லப்பட்ட சாட்சி உண்மைக்கு புறம்பானதென இவ் விசாரணைக்குழு கருதுகின்றது.

இந் நிலையில், கௌரவ அமைச்சர் தனது பதவி அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து திரு இரத்தினசிங்கம் சர்வேஸ்வராவை பணிப்பாளர் சபைக்கு கூட்டுறவு ஆணையாளர் மூலம்

நியமித்து பின்னர் அவரை தலைவராக்கி திரு.ரஞ்சன் அவர்களை பதவி நீக்கம் செய்ய தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்பது விசாரணையின் பொழுது சாட்சிகள் மூலம் எண்பிக்கப்பட்டுள்ளதால் யாழ்கோ தலைவர் நியமனத்தில் விவசாய, கமநலசேவை கால்நடை அபிவிருத்தி, நீர் வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசன் அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளார் என விசாரணைக்குழு கருதுகின்றது.

## 4.10. மருதங்கேணி கடற்தொழில் சமாசத் தலைவரை நியாயமான காரணங்களின்றி கூட்டுறவு ஆணையாளர் மூலம் 2015 மார்கழி மாதம் அளவில் பதவிநீக்கம் செய்தமை மூலம் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை.

திரு. பொன்னுச்சாமி பிரேமதாஸ் என்பவர் உடுத்துறை கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவராக அங்கத்தவர்களினால் தெரிவு செய்யப்பட்டு மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 15 சங்கங்களின் தலைவர்களினால் மருதங்கேணி கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசத்தின் தலைவராகக் கடமையாற்றிய வந்துள்ளார். சமாசத்தின் நோக்கம், மருதங்கேணி பிரதேசத்தில் வசிக்கும் கடல் தொழிலாளர்களது தொழில் சார் வாழ்வாதாரத்தை அதிகரிப்பதாகும்.

அதே நேரம் 2015ஏப்பிரல் மாதமளவில் ஆசிய அபிவிருத்தி வங்கி, விவசாய, கமநலசேவை கால்நடை அபிவிருத்தி, நீர் வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசன், கூட்டுறவு ஆணையாளர், பிரதேச செயலாளர் ஆகியோரடங்கிய பொதுக் கூட்டமொன்று திரு.பொ.பிரேமதாஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றுள்ளது. அதில் மருதங்கேணி கடல் பிரதேசத்திலிருந்து கடல் நீரை எடுத்து சுத்திகரித்து அந்நீரை யாழ் மாவட்டத்துக்கு குடிநீராக விநியோகிப்பது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட நீர் போக மீதி நீரை கடலில் விடுவதாகவும், அதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படமாட்டாதென்வும் கௌரவ அமைச்சராலும் ஆசிய அபிவிருத்தி வங்கி, தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் கூட்டத்தில் பங்குபற்றிய கடல் தொழிலாளர்கள் இத்திட்டத்தை நிறைவேற்றினால் தமது தொழிலுக்கு பாதிப்பு ஏற்படுமென தெரிவித்து அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தமது சம்மதத்தை வழங்க முடியாதெனவும் தெரிவித்துள்ளனர். அதனால் கூட்டம் இடை நடுவில் நிற்பாட்டப்பட்டுள்ளது.

எனினும், கௌரவ முதலமைச்சரின் தலைமையில் அவரது வதிவிடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இத் திட்டத்திற்கான சம்மதத்தை வழங்க வேண்டுமென எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்கவும் இத்திட்டத்துக்கான அனுமதியை வழங்கும்படி பிரதேச செயலாளர் மருதங்கேணி, கூட்டுறவுத் திணைக்களம் என்பன கௌரவ அமைச்சரது நெருக்குதல் காரணமாக சமாசத் தலைவருக்கு நெருக்குதல் கொடுத்த காரணத்தினாலும், சமாசத் தலைவர் சமாச கடிதத் தலைப்பில் ஒரு கலந்துரையாடலுக்கு சங்கங்கள் மற்றும் நலன்விரும்பிகளை கொண்ட கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தி இருந்துள்ளார்.

அந்தக் கூட்டத்திலும் இத்திட்டத்திற்கு சம்மதம் கிடைக்கவில்லை. இந்நிலையில் கௌரவ அமைச்சர் அவர்கள் சமாசத்தின் தலைவரை அப்பதவியிலிருந்து நீக்குவதன் மூலம் புதிய பணிப்பாளர் சபையை நியமிப்பதன் மூலமும் நீர்வழங்கல் தொடர்பான சம்மதத்தை பெறலாம் என்று எண்ணி சமாசத்தின் பொது முகாமையாளர் மூலம் தலைவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான காரணங்களைப்பெற திட்டமிட்டு இருந்ததாக எண்ணுவதற்கான காரணம் இருந்துள்ளது. ஏனெனில் சங்கத்தின் கடிதத் தலைப்பை பாவித்து தலைவர் கூட்டம் கூட்டிய ஆவணத்தை பொது முகாமையாளர் தலைவரின் முன்அனுமதி இன்றி கௌரவ அமைச்சரிடம் கையளித்துள்ளார். கௌரவ அமைச்சர் அதனைக் காரணமாக கொண்டு சமாசத் தலைவரை அதிகார துஷ்பிரயோகம் என்ற குற்றச்சாட்டின் கீழ் பதவிநீக்கம் செய்யும்படி கூட்டுறவு ஆணையாளருக்கு பணித்துள்ளார். கூட்டுறவு உதவி ஆணையாளர் மூலம் அக்குற்றச்சாட்டின் தன்மை அதன் தாக்கம் சட்டபூர்வத்தன்மை என்பவற்றை ஆராயாமல் கௌரவ அமைச்சரின் பணிப்புரையை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இச்செயற்பாட்டை அனுமதித்துள்ளார்.

சமாசத் தலைவர் கடிதத் தலைப்பை குறிப்பிட்ட நோக்கத்திற்காக பாவித்தமை அவரை பதவிநீக்கும் அளவுக்கான பாரதூரமானவை அல்ல என்று குழுவின்முன் கூட்டுறவு ஆணையாளர் அளித்த சாட்சியமும் திரு. கணேஷ் - முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர் அவசரப்பட்டு பிழையான தீர்மானத்தை எடுத்துள்ளார் என்று விசாரணைக்குழுவின் முன் அளிக்கப்பட்ட கௌரவ அமைச்சரின் விளக்கமும் மேற்படி கூற்றுக் சாதகமாக அமைந்துள்ளன.

இவ்விடயத்தில் கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தில் கௌரவ அமைச்சரின் சட்டபூர்வமான வகிபாகம் என்ன? அவர் ஏன் தானாகவே இத்திட்டம் செயற்படுத்த கடற்தொழிலாளர் சங்கத்திற்கு நெருக்குதல் கொடுத்தார். இவ்வாறான மத்திய அரசாங்கத்தின் திட்டத்தை நிறைவேற்றும் முகவராக கௌரவ விவசாய அமைச்சருக்கு மாகாண சபை விசேட அதிகாரத்தை வழங்கி இருந்ததா? அல்லது கௌரவ முதலமைச்சர் அவருக்கு அங்கீகாரத்தை வழங்கினாரா?

அவ்வாறு வழங்கி இருந்தாலும் அது அரசியல் யாப்பின் 13வது திருத்தத்திற்கு உட்பட்டு மாகாண சபை சட்ட விதிகளுக்கு உட்பட்டதா என்பதை எண்பிப்பதற்கான காரணங்கள் ஆவணங்கள் கௌரவ அமைச்சரிடம் இருக்கவில்லை. அவரது சாட்சியங்களின் பொழுது அவை முன்வைக்கப்படவில்லை.

அதே நேரம் அவர் தனது சாட்சியத்தில் சமாசத்தின் பொதுமுகாமையாளர் தலைவரினால் கடிதத் தலைப்பு மக்களைக் ஒன்று கூட்டி கடல்நீர் பிரச்சினை தொடர்பாக ஆராயப் பாவிக்கப்பட்டதன் பிரதியை அவர் கௌரவ அமைச்சரிடம் சமர்பிக்க வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? அமைச்சரிடம் அவ் ஆவணம் கையளிக்கப்பட்ட பொழுது அவ் ஆவணம் தனக்கு தொடர்புடையது அல்ல. கூட்டுறவு உதவி ஆணையாளரிடமோ அல்லது கூட்டுறவு ஆணையாளரிடமோ கையளிக்கும்படி அமைச்சர் தெரிவித்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாது அக்கடிதத்தை தானே பெற்று அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கத் தூண்டவேண்டிய தேவை என்ன? என்ற சந்தேகங்கள் அமைச்சர் இது தொடர்பாக எடுத்த நடவடிக்கையில் சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

சமாசத்தின் பொது முகாமையாளர் ஏன் அக் கடிதத் தலைப்பிலான கடிதத்தின் பிரதியை, அதை பாவித்தது தவறாயின் தனது சமாசத் தலைவரின் கவனத்திற்கு தான் கொண்டு வந்திருக்க வேண்டும். அல்லது கூட்டுறவு உதவி ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்க வேண்டும். அவர்களது ஆலோசனையை பெற்றிருக்க வேண்டும். அதனைத் தவிர்த்து நேரடியாகவே அமைச்சரிடம் கொண்டு சென்று கையளித்தமையும் உடனடியாக அமைச்சர் கூட்டுறவு ஆணையாளர் மூலம் தலைவரை பதவி நீக்கம் செய்தமையும் கௌரவ அமைச்சருக்கும் பொது முகாமையாளருக்கும் இடையே முன்திட்டமிட்ட தலைவரை பதவிநீக்கம் செய்வதற்கான சதித்திட்ட நடவடிக்கையில் ஒன்றாகவும் கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்திற்கு அனுமதி வழங்காத சமாசத்தின் தலைவரை கூட்டுறவுத் துறைக்கான அமைச்சர் என்ற அதிகாரத்தை சட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையில் துஷ்பிரயோகித்து பதவி நீக்கம் செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டை எண்பிக்க சான்றாக உள்ளது.

சமாசத்தின் தலைவரை பதவிநீக்கம் செய்த பின்னர் மக்கள் சங்கப் பிரதிநிதிகளை தவிர்த்து பிரதேச செயலர், பாடசாலை அதிபர், சங்கங்களால் சமாசத் தலைவர் பதவிக்கு போட்டியிட்டு அவர்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர், ஆகியோரை தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து நியமனம் செய்து இத்திட்டத்திற்கு குறுக்கு வழியில் அனுமதி பெற

முயற்சித்த கௌரவ அமைச்சரது நோக்கமும் நிறைவேறவில்லை. ஆனால் அவரது அதிகார துஷ்பியோகம்தான் வெளியில் மேலோங்கி நிற்கிறது.

எனவே இக்குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் சாட்சிகளின்படி எண்பிக்கப்பட்டுள்ளது என இக்குழு தீர்மானிக்கிறது.

மொத்தமாக வடமாகாண விவசாய, கமநலசேவை, கால்நடை அபிவிருத்தி, நீர்வழங்கல், உணவுவழங்கல் விநியோகம், சுற்றாடல், கூட்டுறவு அபிவிருத்தி, அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசனிற்கு எதிராக சுமத்தப்பட்ட (4.1.) தொடக்கம் (4.10.) வரையிலான குற்றச்சாட்டுக்களும் நியாயமான நடைமுறைப்பிரச்சனைகள் காரணமாகவும், மாகாணசபைக்கு சட்ட பூர்வமாக பகிர்ந்தளிக்கப்படாத சுற்றாடல் என்ற விடய அமைச்சர் என்ற அடிப்படையில் தனது அதிகார வரம்பை மீறிச் செயற்பட்டமை தனது அதிகாரத்தை துஷ்பிரயோகஞ் செய்து தனக்கு வேண்டியவர்களை கூட்டுறவு அமைப்புகளில் நியமிக்க கூட்டுறவு ஆணையாளரை நெருக்குதல் கொடுத்தமை தனது அணுகு முறைக்கு ஒத்துழைக்காதவர்களை கூட்டுறவு அமைப்புகளின் தலைவர் பதவியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுத்தல், தனதும் அமைச்சினதும் செல்வாக்கை பொதுமக்களுக்கும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் காட்டுவதற்காக பெரியளவிலான விழாக்களையும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்குபடுத்தி நடாத்துதல், சட்டபூர்வமற்ற விதத்தில் விவசாய முதலீடுகளுக்கு தடைகளை ஏற்படுத்தல், கடந்தகால அனுபவத்தை கவனத்தில் எடுக்காது அமைச்சு நிதியை செலவிட்டு வெற்றியளிக்காத திட்டங்களை நடைமுறைப்படுத்திய நடவடிக்கை, அவர் நிர்வாகத்தின் மீது கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கும், பொது மக்களுக்கும் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

கௌரவ அமைச்சர்களது நடவடிக்கைகள் கௌரவ முதலமைச்சரின் அனுசரணையுடனே நடைபெறுகின்றது என்ற மாயையை கௌரவ அமைச்சர் மேற்சொன்ன அனைவரிடமும் தெரிவித்திருப்பதோடு இவ் விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்கும் பொழுதும், தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கும் கௌரவ முதலமைச்சரின் சம்மதம் பெறப்பட்டதாகவும், சகல நிகழ்வுக்கும் கௌரவ முதலமைச்சரால் தொடக்கி வைக்கப்பட்டது, கௌரவ முதலமைச்சர் அந் நிகழ்வுகளுக்கு சமூகமளித்துள்ளார், அவர் அனுமதித்துள்ளார் என்ற அவரது விளக்கத்தை நியாயமானது என ஏற்றுக் கொள்ள வேண்டியதற்கு நியாயபூர்வமானதோ அல்லது சட்ட பூர்வமானதோ அல்லது நிர்வாக நடைமுறை பூர்வமானதாக காரணங்கள் இருப்பதாக இக்குழு கருதவில்லை.

# IV. குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைக்குழுவினால் கண்டறியப்பட்டவை

மாகாணசபை அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட நிதிமோசடி, அதிகார துஸ்பிரயோகம், பாரபட்சம், ஊழல் மற்றும் ஒழுக்கரீதியான குற்றச்சாட்டுகள் விசாரணைக்குழுவிற்கான நியமனக் கடிதத்தின் பந்தி 7 இல் தெரிவிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு உட்பட்டும் அதற்கான வழிகாட்டல் நெறிமுறைக்கும் உட்பட்ட தொழிற்பாடுகளின் அடிப்படையில் முறைப்பாடுகளை எழுத்து மூலம் பெறுதல், அம் முறைப்பாட்டாளர்களை ஆணைக்குழுவின் முன்னர் அழைத்து முறைப்பாடுகளின் தன்மையை ஆராய்தல், அம்முறைப்பாடுகள் தொடர்பாக நபர்களை அழைத்து வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ளல், சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பாக மாகாண சபை நிர்வாகத்தில் உள்ள சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை குழுவின் முன் அழைத்து அவர்களது வாக்கு மூலங்களைப் பதிவு செய்தல், முறைப்பாடுகள் தொடர்பாக அலுவலக ஆவணங்களை பெறுதல் ஆகிய ஆரம்ப நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. மேலே தெரிவிக்கப்பட்ட நடைமுறைகளினடிப்படையில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நான்கு அமைச்சர்களுக்குமெதிரான குற்றச்சாட்டுப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரிப்பதற்கு வேண்டிய கால அவகாசத்துடனான நாட்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அவ்விசாரணையின் பொழுது குற்றம் சாட்டப்பட்டவர்கள் தாமாகவோ அல்லது தனது சார்பில் ஓர் சட்டத்தரணி மூலமாகவோ குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுதலிப்பதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது.

அத்தோடு குற்றச்சாட்டுகளைச் சுமத்தியோர் குறிப்பிட்ட விசாரணைத் திகதிகளில் தாமாகவோ அல்லது வேறு சம்பந்தப்பட்டவர்களோடோ வேண்டிய ஆவண இலத்திரனியல் சான்றுகள் உடனேயோ விசாரணைக்கு சமூகமளிக்கவும் குற்றம் சாட்டப்பட்டவர்களை குறுக்கு விசாரணை செய்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தை குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு அமைச்சர்களும் பூரணமாக ஏற்றுக்கொண்டு தாமாகவே முன் வந்து தமக்கெதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளித்திருந்தனர். முறைப்பாட்டுக்காரர்களில் கௌரவ அனந்தி சசிதரன், கௌரவ சந்திரலிங்கம் சுகிர்தன் ஆகியோரைத் தவிர சகல முறைப்பாட்டாளர்களும் விசாரணையின் போது பங்கு பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர்களை குறுக்கு விசாரணை செய்தனர். மாகாணசபை உறுப்பினர் கௌரவ க.தா.லிங்கநாதன் தன்னுடன் மாகாணசபை எதிர்க்கட்சி தலைவர் கௌரவ சி. தவராசா அவர்களையும் அழைத்து வந்தார். அவருக்கும் விவசாய, கமநலசேவை கால்நடை அபிவிருத்தி,

நீர் வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசனை குறுக்கு விசாரணை செய்வதற்கு குழுவால் அனுமதி வழங்கப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட விசாரணை நடைமுறைகளுக்கு மேலதிகமாக விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் அக்கருத்திட்டங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டதுமான பின்வரும் இடங்களை விசாரணைக்குழு நேரடியாகப் பார்வையிட்டு பயனாளிகளின் கருத்துகளையும் பதிவு செய்து கொண்டது.

01. வவுனியா ஓமந்தை சேமமடு வீதியிலுள்ள வெலிமருதமடு பண்ணை

02. வட்டக்கச்சி மாதவனூர் புழுதிஆறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டம்

03. யாழ் மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட விவசாயக் கிணறுகள்

குழுவின் முன்னால் வைக்கப்பட்ட முறைப்பாடுகள், அவை தொடர்பாக பெறப்பட்ட வாய் மூல மற்றும் ஆவண சான்றுகள் அவற்றின் அடிப்படையாக ஒவ்வொரு அமைச்சர்களுக்கும் எதிராக விசாரணைக் குழுவால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர்களது விளக்கங்கள் என்பனவற்றின் அடிப்படையிலும், விசாரணைக்குழுவினது களப்பரிசோதனையின் பொழுது பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும் இவ் விசாரணைக்குழுவின் அங்கத்தவர்கள் மூவரும் ஒன்றாகவும் ஒற்றுமையுடனும் பின்வரும் கண்டு பிடிப்புகளை முன்வைக்க விரும்புகின்றோம்.

(அ) சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் கௌரவ வைத்தியகலாநிதி பத்மநாதன் சத்தியலிங்கத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகள் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படாமையினால் அவரை சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் இவ்விசாரணைக்குழு பூரணமாக விடுவிக்கின்றது. அத்தோடு அவரினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சகல திட்டங்களும் சிறந்த முறையில் நிறைவேற்ற வேண்டிய ஒத்துழைப்பை சகலரும் வழங்கவேண்டுமெனவும் விசாரணைக்குழு விரும்புகின்றது.

(ஆ) மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பாலசுப்பிரமணியம் டெனீஸ்வரனுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை சுமத்தியவர்களை விசாரணைக்கு, சாட்சியங்களுடனும் சான்றாவணங்களுடனும் சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பினும் அவர்கள் கௌரவ அமைச்சருக்கு

எதிரான விசாரணையின் பொழுது சமூகமளிக்கவில்லை. எனினும் விசாரணைக்குழு அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவரை விசாரணை செய்தது. அவருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளதால் அவருக்கு எதிராக எந்த நடவடிக்கைகளையும் விசாரணைக்குழு விதந்துரைக்கவில்லை.

(இ) கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ தம்பிராசா குருகுலராசா

கௌரவ அமைச்சர் அவர்கள் நீண்டகாலமாக கல்விச் சேவைப் பின்புலத்தை கொண்டவர். கிளிநொச்சி (மாவட்ட) வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர். அவரது முழுச் சேவைக்காலமும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சார்ந்ததாகும்.

உள்நாட்டு போரும், அதனால் ஏற்பட்ட உள்வெளிக் காரணங்களினால் வட மாகாண மக்களினால் பெரிதும் எதிர்பார்க்கப்படும் மாணவர்களது பொதுப்பரீட்சை பெறுபேறுகள் தேசியரீதியில் மிகவும் பின்தங்கி உள்ளதாகவும் குறிப்பாக மாகாண நிர்வாகத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் கல்வி தரம் மிக கீழ் நிலையில் உள்ளதாகவும் ஊடகங்கள் மற்றும் கல்வி சார் நிபுணர்களால் சுட்டிக்காட்டப்பட்டு வரும் நிலையில்தான் கௌரவ அமைச்சர் கல்விக்கு பொறுப்பான அமைச்சராக நியமிக்கப்பட்டு தொடர்ந்தும் கடமையாற்றிக்கொண்டு வருகின்றார். எனினும் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றத்தை வட மாகாணம் எட்டவில்லை என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். எனவே மாணவர்களது கல்வி தரத்தை உயர்த்துவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி குறுகியகால, இடைக்கால திட்டங்களை வகுத்து அதற்கு உழைக்க வேண்டிய கடப்பாடு கௌரவ அமைச்சருக்கு உண்டு. அதே நேரத்தில் பாடசாலைகளுக்கான பௌதீக வளங்களும், மனித வளங்களும் ஒப்பீட்டு ரீதியாக சிறப்பாகவே உள்ளன.

அதே நேரத்தில், தேசிய ரீதியாக அரசாங்க ஊழியர்களது நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைகளில் அரசியல் செல்வாக்கு செலுத்தப்படுவதை தவிர்க்கும் நோக்கத்தோடு தற்போதைய அரசியல் யாப்பின் 19வது திருத்தம் கொண்டுவரப்பட்டு அதனடிப்படையில் மேற்படி விடயங்களை கையாள்வதற்காக சுதந்திர அரசாங்கசேவை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதோடு, மாகாணசபை சட்டத்தின்கீழ் மாகாணசபை ஊழியர்களது மேற்படி விடயங்களை கையாளும் அதிகாரம் கௌரவ ஆளுநருக்கு சட்டரீதியாக கையளிக்கப்பட்டுள்ளதுடன், தனது சட்டபூர்வ அதிகாரத்தை சுதந்திரமான

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கும், பிரதம செயலாளருக்கும், அமைச்சுச் செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் கையளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கையளிக்கப்பெற்ற உத்தியோகத்தர்கள் தமது அதிகாரத்தை எந்தவோர் குழுவுக்கோ உத்தியோகத்தருக்கோ கையளிக்க முடியாது என்பதும் இத்தீர்மானங்களால் பாதிக்கப்படும் ஊழியர் ஒருவர் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதும் சட்ட ஏற்பாடாகும்.

ஆனால் கௌரவ அமைச்சர் அவர்கள், அதிபர்கள் நியமனம், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் நியமனம் என்பனவற்றில் கல்வி அமைச்சின் செயலாளருக்கு சட்டபூர்வமாக கையளிக்கப்பட்ட அதிகாரங்களை தன் கையில் எடுத்துக் கொண்டு அதிகார துஷ்பிரயோகம் செய்ததாக விசாரணையின்பொழுது சந்தேகத்துக்கப்பாற்பட்ட விதத்தில் வெளிக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதுபோலவே கிளிநொச்சி மாவட்டத்தில் அதிபர் ஒருவரால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட மாணவி ஒருவர் விடயத்தில் கல்வி அமைச்சரும் அவரது நெருங்கியவரான கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளரும் சேர்ந்து இவ் துர்நடத்தை தொடர்பாக குரல் கொடுத்த ஆசிரியையை இடம் மாற்றம் செய்தமையும் இக் குற்றச்செயலை மூடி மறைக்க எடுத்த நடவடிக்கையும் பகுத்தறிவு கொண்ட எவராலும் மன்னிக்க முடியாததொன்றாகும்.

கல்வி அமைச்சில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள், பணிப்பாளர்களது நியமனம், இடமாற்றம் என்பன விடயத்தில் எந்தவித அதாவது அரசியல் யாப்பிலோ அல்லது மாகாண சபை சட்டத்தின் கீழாக நியமனம், இடமாற்றம் செய்வதற்கு அதிகாரமளிக்கப்படாத அமைச்சர் வாரியத்திடம் அனுமதியைப்பெற்று தனது அதிகார துஷ்பிரயோகத்தை மூடிமறைப்பதற்கு கௌரவ அமைச்சர் எடுத்த நடவடிக்கை மாகாணசபையையும், பொதுமக்களையும், மாகாணசபை ஊழியர்களையும் ஏமாற்றுவதற்கு எடுத்த நடவடிக்கையாகும். இச்செயல் பலராலும் கண்டனத்துக்குட்படுத்தப்பட்ட 1972ம் ஆண்டு அரசியல் யாப்பில் அரச உத்தியோகத்தர்களது நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைக்காக அந்த அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை மீள நினைவுகூர வேண்டி ஏற்பட்டுள்ளது.

அமைச்சர் வாரியத்திற்கான பத்திரம் கௌரவ அமைச்சரினாலும் அமைச்சின் செயலாளராலுமே சமர்ப்பிக்கப்படுகின்றது. செயலாளருக்கு கையளிக்கப்பட்ட நியமன அதிகாரத்தை அமைச்சர் வாரியத்துக்கு மீளக் கையளித்துவிடும் இவ் அமைச்சர் வாரியப்

பத்திரத்தை கையொப்பம் இடும் பொழுது அமைச்சின் செயலாளர் இத்தவறான முன் உதாரணத்துக்கு எவ்வாறு உடந்தையாக இருந்தார் என்ற கேள்வியையும் அவரது நேர்மையில் சந்தேகத்தையும் இக்குழு சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

அதே நேரத்தில் அமைச்சர்வாரிய கூட்டங்களில் கலந்து கொள்ளும் பிரதான மாகாணசபை நிர்வாகியான பிரதம செயலாளர் எவ்வாறு தவறான நிர்வாக நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டாமல் மௌனமாக இருந்து இச் செயல்பாடு தொடர்ந்து நடைபெற உடந்தையாக இருந்தார் என்பதும் மாகாண நிர்வாகம் எங்கே செல்கின்றது என பொது மக்கள் கேட்கும் கேள்வியின் நியாயத்தை இவ்விசாரணைக்குழு தனது கவனத்தில் எடுத்துள்ளது.

இச் செயல்பாடு மாகாணசபை உத்தியோகத்தர்கள் தமது நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் என்பனவற்றுக்காக மாகாணசபை அங்கத்தவர்களையும், அமைச்சர்களையும் மற்றும் அரசியல்வாதிகளையும் நாடுவதை மேலும் ஊக்குவிக்கும். இச் செயல் யுத்தத்தால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட மக்களது வாழ்வாதாரத்தை உயர்த்தும் எதிர்பார்ப்புடன் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை உறுப்பினர்களை, அப்பாரிய பணியை கைவிட்டு உத்தியோகத்தர் நியமனம், இடமாற்றம் தொடர்பாக அமைச்சர்களின் பின்னால் திரிந்து தமது நேரத்தை செலவிட வேண்டிய சூழ்நிலையை உருவாக்கும் என கருதுகின்றோம்.

(ஈ) விவசாய கமநலசேவை நீர்ப்பாசன கால்நடை அபிவிருத்தி உணவு வழங்கல், விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் கௌரவ பொ. ஐங்கரநேசன் அவர்களது நடத்தையும் செயற்பாடுகளும்.

மேற்படி அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அவர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. விவசாய, சுற்றாடல், நீர்ப்பாசனம் மற்றும் கூட்டுறவு துறைகளில் ஏற்பட்ட ஊழல், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் வீண்விரயங்கள் தொடர்பான விடயங்களிலேயே சுமத்தப்பட்டுள்ளதுடன் அக்குற்றச்சாட்டுகள் விசாரணையின் பொழுது சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட விதத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளன என்பதுடன் நிதி மோசடி போன்ற குற்றச்சாட்டுகள் தொடர் விசாரணை செய்வதற்காக விதந்துரைக்கப்பட்டுள்ளன.

சுமத்தப்பட்டு எண்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் பாரதூரமானவை என்பதுடன் வடமாகாணசபையில் மக்கள் வைத்திருந்த எதிர்பார்ப்புகளை மழுங்கடிக்கும் செயலாகவும்

கூட்டுறவு அமைச்சர் என்ற அடிப்படையில் மருதங்கேணி கடல் தொழிலாளர் சமாசத் தலைவர் கூட்டுறவு ஆணையாளரைக் கொண்டு பதவி நீக்கம் செய்வித்தமையும், யாழ்கோ நிறுவனத்தின் தலைவரை பதவி நீக்கம் செய்து தனது சுற்றத்தாரை தலைவர் பதவிக்கு நியமிக்க கூட்டுறவு ஆணையாளருக்கு கொடுத்த அழுத்தம், கூட்டுறவு ஆணையாளர் மாகாணசபை சேவையிலிருந்தே அவர் விலகிச்செல்வதற்கு காரணமாயிருந்தது என்பதை இக் குழு மிகுந்த விசனத்துடன் முன்வைக்க விரும்புகின்றது.

யாழ்கோ நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கான இரு அங்கத்தவர்களது நியமனத்துக்கு கௌரவ அமைச்சரே நேரடியாக சென்று யாழ் செயலக அதிகாரிகளுக்கு நெருக்குதல் கொடுத்தமை என்ற பிந்திய செய்தி இக்குழுவின் விசனத்தை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது.

இவ்வாறானதோர் அமைச்சரையோ வட மாகாண மக்கள் எதிர்பார்த்து வட மாகாணசபை தேர்தலில் தமது வாக்குகளை அளித்தனர் என்ற கேள்வி, விசாரணைக் குழுவுக்கு ஏற்படுவது வியப்பானது ஒன்று என குழு கருதவில்லை.

மாகாண நிதியை வீண் விரயம் செய்து அமைச்சர் என்ற தனி மனிதனை முதன்மையாக்குவதற்கு செய்யப்பட்ட திட்டமிடப்பட்ட செயல்பாடாகவும் இக்குழு கருதுகின்றது. தனது இச் செயல்பாடுகளுக்கு துணையாக இலங்கை நிர்வாக சேவையில் மற்றய செயலாளர்களுடன் ஒப்பிடும்பொழுது இளம் உத்தியோகத்தரை அமைச்சின் செயலாளராக நியமித்து அவரது துணையுடன் மற்றய திணைக்களத் தலைவர்களை பயமுறுத்தி இச் செயல்பாடுகளை கௌரவ அமைச்சர் அவர்கள் அரங்கேற்றியுள்ளார். வட மாகாணத்தில் 60% மக்களின் தொழிலாதாரமாக கொண்டதும் யுத்தம் காரணமாக நலிவடைந்துள்ள விவசாய துறையை முன்னேற்றுவதற்கான ஓர் அடிப்படைத் திட்டத்தையாவது இதுவரை தயாரிக்க முடியாத இவ் அமைச்சர், திறைசேரியால் 2015 ல் வழங்கப்பட்ட நிதியைக்கூட, செயல்படுத்த முடியாத பாதீனிய ஒழிப்பு, நிலத்தடி நீர் ஆய்வு, ஏற்று நீர்ப்பாசனத் திட்டம், மரநடுகை, என வீண்விரயம் செய்ததோடு அத்திட்டங்களுக்கான அங்குரார்ப்பண நிகழ்வுகளுக்கு கௌரவ முதலமைச்சர் அவர்களையும் முதன்மை விருந்தினராக அழைத்து சென்று தனது கைங்கரியங்களை மூடி மறைத்துள்ளனர். மேலும் 19.5 மில்லியனை வீண்விரயம் செய்து கொள்வனவு செய்த ஆறு தண்ணீர் பவுசர்களையும் அவை தேவைப்படும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு கையளிக்க கௌரவ அமைச்சர் தவறியுள்ளார்.

நிர்வாக ரீதியாக கௌரவ அமைச்சரினால் செய்யப்பட்ட குறிப்பிடப்பட்ட அதிகார துஷ்பிரயோகமும், தவறான முன் உதாரணமும் அவர் சுற்று சூழல் அமைச்சர் என்ற ரீதியில் செயல்பட்டதேயாகும். சுற்று சூழல் விடயம் என்பது இலங்கை அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தின்கீழ் மத்திய அரசும், மாகாண அரசும் சேர்ந்து செய்யும் concurrence விடயம் ஆகும். அவ்விடயம் பொதுவாக மத்திய அரசாலேயே செயல்படுத்தப்படும் என்பதுடன் மாகாணசபை அவ் விடயத்தை செயல்படுத்த விரும்பின் மத்திய அரசோடு ஓர் நிர்வாக புரிந்துணர்வை அமைச்சரவையின் அனுமதியோடு செயல்படுத்தப்பட வேண்டும் என்பதே நடைமுறை சட்ட விதியாகும்.

அந்த நடைமுறையை மீறி தான் சுற்று சூழல் அமைச்சர் என்ற தவறான பிம்பத்தை ஏற்படுத்தி அவரினால் நிறைவேற்றப்பட்ட நிலத்தடி நீர் ஆய்வு, பாதீனிய ஒழிப்பு, மரநடுகை போன்ற தோல்வியடைந்த திட்டங்களை செயல்படுத்தியமை ஏற்றுக் கொள்ள முடியாத தொன்றாகும். இச் செயல்பாடுகளுக்கு இவரது செயலாளரும் கூட்டு பொறுப்புடையவராக விளங்கியதாக விசாரணைக் குழு அவதானித்துள்ளது.

கூட்டுறவு அமைச்சர் என்ற அடிப்படையில் மருதங்கேணி கடல் தொழிலாளர் சமாசத் தலைவர் கூட்டுறவு ஆணையாளரைக் கொண்டு பதவி நீக்கம் செய்வித்தமையும், யாழ்கோ நிறுவனத்தின் தலைவரை பதவி நீக்கம் செய்து தனது சுற்றத்தாரை தலைவர் பதவிக்கு நியமிக்க கூட்டுறவு ஆணையாளருக்கு கொடுத்த அழுத்தம், கூட்டுறவு ஆணையாளர் மாகாணசபை சேவையிலிருந்தே அவர் விலகிச்செல்வதற்கு காரணமாயிருந்தது என்பதை இக் குழு மிகுந்த விசனத்துடன் முன்வைக்க விரும்புகின்றது.

யாழ்கோ நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கான இரு அங்கத்தவர்களது நியமனத்துக்கு கௌரவ அமைச்சரே நேரடியாக சென்று யாழ் செயலக அதிகாரிகளுக்கு நெருக்குதல் கொடுத்தமை என்ற பிந்திய செய்தி இக்குழுவின் விசனத்தை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது.

இவ்வாறானதோர் அமைச்சரையோ வட மாகாண மக்கள் எதிர்பார்த்து வட மாகாணசபை தேர்தலில் தமது வாக்குகளை அளித்தனர் என்ற கேள்வி விசாரணைக் குழுவுக்கு ஏற்படுவது வியப்பானது ஒன்று என குழு கருதவில்லை.

# V. விதப்புரைகள்

வட மாகாணசபை நிர்வாகத்தில் ஒழுக்கமும், அதிகார துஷ்பிரயோகமும் பாரபட்சமும் ஊழல் மோசடியற்ற ஓர் நிர்வாகத்தை ஏற்படுத்தப்பட வேண்டுமெனின் பின்வரும் விதப்புரைகளை தெரிவிக்க விரும்புகின்றது.

(அ) மேலே தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் விசாரணையின்பொழுது நிரூபிக்கப்பட்டுள்ள இரு அமைச்சர்களும் அவர்களை தற்போது வகிக்கும் அமைச்சுப் பொறுப்புகளிலிருந்து நீக்கப்படவேண்டும்.

(ஆ) இவ்வமைச்சர்களின் சட்ட பூர்வமற்ற, பாரபட்சமற்ற ஊழல் நடவடிக்கைகளுக்கு பக்கபலமாக கடமையாற்றிவரும் அமைச்சின் செயலாளர்கள் அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். புதியவர்கள் தகுதியானவர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

(இ) கௌரவ அமைச்சர்களுக்கெதிரான குற்றச் சாட்டுகளில் 90% மானவை மாகாணசபை உறுப்பினர்களாலேயே தெரிவிக்கப்பட்டுள்ளன. இது வருத்தப்படக் கூடியதாக உள்ளது. மாகாணசபை நடைமுறையிலேயே இவ்வாறான குற்றச்சாட்டுகளை விசாரித்து தீர்வு காண்பதற்கான ஓர் பொறிமுறையை உருவாக்குவது சிறந்தது. இக் குற்றச்சாட்டுகள் முழுவதும் ஆளும் கட்சி கௌரவ உறுப்பினர்களாலேயே முன்வைக்கப்பட்டுள்ளதால் ஆளும் கட்சி உறுப்பினர்களிடையே கொள்கை, செயல்பாடு தொடர்பான தொடர்ச்சியான கலந்துரையாடல் நடத்துவது சிறந்ததென இக்குழு கருதுகின்றது.

(ஈ) வடக்கு மாகாண சபையில் கடமையாற்றும் ஊழியர்களின் நியமனம், பதவிநிலை வழங்கல், இடமாற்றம் என்பவற்றில் அரசியல் தலையீட்டுக்கு இடமளிப்பது முற்றாக தவிர்க்கப்பட வேண்டும். வட மாகாணசபை அங்கத்தவர் மத்தியில் இயங்கிக்கொண்டிருக்கும் முறைப்பாட்டுக் குழு (Petition Committee) உள்ளடங்கலாக அமைச்சர்கள், அமைச்சர்கள் வாரியம் மேற்குறித்த விடயங்களில் அரசியல் தலையீட்டை ஏற்படுத்தக்கூடாது. இக் கடமைகள் எந்தெந்த அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளதோ அவ்அதிகாரிகள் இக் கடமைகள் தொடர்பில் சுதந்திரமாக செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும்.

உ. விழாக்கள், கொண்டாட்டங்கள் போன்றவற்றில் மாகாண சபை நிதி வீண்விரயம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும்.

ஊ. இறுதியாக, மாகாண நிர்வாகத்துக்குட்பட்ட செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் என்போர் தமது முழுத்திறமையையும் வெளிக்கொண்டு வந்து மாகாண சேவையை திறம்பட மக்களிடம் கொண்டு செல்வதற்கு பல செயற்கையான தடைகள் ஏற்பட்டிருக்கின்றது. அதனால் அவர்கள் தமது திறமை அனுபவம் என்பதை கைவிட்டு மாகாணசபை நிர்வாகத்தில் தமக்கு கிடைக்கும் வசதிகளோடு நிம்மதியடைவதாகவும் இக்குழு கருதுகின்றது. ஆனால் வடபகுதி மக்கள் எதிர்பார்த்தது இவற்றை அல்ல என்பது யாவருக்கும் தெரிந்ததே.

## VI. நன்றியுரை

இவ்வாணைக்குழுவில் பணியாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கிய கௌரவ முதலமைச்சர் அவர்களுக்கும் இவ் விசாரணைக்குழுவின் முன் வழக்குத் தொடுநராக கடமையாற்றிய இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதி பொ. வரதராசா அவர்களுக்கும் இவ் விசாரணையின் போது நிர்வாக ரீதியிலான உதவி செய்த உதவிப் பிரதம செயலாளர் திருமதி.கு.காஞ்சனா அவர்களுக்கும் அத்துடன் இவ் விசாரணைக்குழுவிற்கு தேவையான பணியாளர்களையும் ஏனைய வசதிகளையும் வழங்கிய பிரதம செயலாளர் திரு. அ.பத்திநாதன் அவர்களுக்கும் இவ் விசாரணையின் போது வாக்குமூலங்களை உடனுக்குடன் சுருக்கெழுத்து மூலம் பதிந்து பின் தட்டச்சு செய்து வழங்கிய பிரதம செயலாளர் அலுவலக முகாமைத்துவ உதவியாளர்களான செல்வி. ச.வசந்தி, திருமதி. தி. ஜனனி அவர்களுக்கும் மற்றைய உதவியாளர்களுக்கும் எமது நன்றிகள்.

| பெயர் | | ஒப்பம் |
|---|---|---|
| 1. திரு.எஸ்.தியாகேந்திரன்<br>தலைவர் | : | ...................................... |
| 2. திரு.எஸ்.பரமராஜா<br>உறுப்பினர் | : | ...................................... |
| 3. திரு.செ.பத்மநாதன்<br>உறுப்பினர் | : | ...................................... |

திகதி: 19/5/2017